
# தமிழரசு

16-8-1973 40 காசு



# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு –வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# விடுதலை நாள் விழாவில்

# நாம் ஏற்கும் சூளுரை!

தமிழக முதல்வர்,
டாக்டர் கலைஞர்



இந்தியத் திருநாடு விடுதலை பெற்ற இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறோம். அடிமைப் பிடியில் இருந்த அந்த காரிருளில் மூழ்கிக் கிடந்த நாடு 'விடுதலை ஒளி' பெற்று விழா கொண்டாடுவதைக் கண்டு மகிழாதார் இருக்க முடியாது. மகிழ்ந்தோம் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே என்று ஆடிப்பாடி மகிழ்ந்தோம், சிறைசென்றவர்கள், தியாகத் தழும்புகளைப் பெற்றுக் கொண்டவர்கள், உயிர்நீத்தவர்கள் — அனைவரும் சுதந்திரத் தாயின் மணி முடியில் பிரகாசிக்கும் முத்துக்களாகப் போற்றப்பட்டார்கள். மண்ணின் விடுதலைக்காகப் போரிட்ட மாமனிதர்கள் பலரைத் தமிழக அரசு வாழ்த்திப் புகழ்ந்ததோடு மட்டுமன்றி அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் நாட்டம் செலுத்தி வருவதை நாடறியும். [illegible] மேம்பட்ட தியாகிகட்கு திங்கள் தோறும் மானியம் வழங்கி வருகிறோம். ஏற்கனவே ஐம்பது ரூபாய் என்றிருந்த மானியத்

[illegible]

[illegible]

[illegible] 1922 [illegible]

[illegible] 253 [illegible]

[illegible]

என்ன தியாகிகளுக்கென இது
போன்று பட்டயம், இவ் விதிமுறை
களைத் தொடர்ந்து வழங்கிட வேண்டு
மென்று தமிழகத்தில் ஒரு -
முறையீடு எழுந்தது. இதன்
அடிப்படையில் தமிழக
அரசு ஆணை முன்வந்து, மொழி
மாநிலங்களுக்குத் தேவையான
திருத்தம் செய்து தியாகிகளுக்கும்
முன்னை இந்திய தேசிய அரசு
வழங்கினர் அவர்களுக்கும் [illegible]
வரும் [illegible] பட்டயம்
வழங்க முடிவு செய்து, இன்
னுக்குமட்டும் தமிழ்நாடு அரசின்
சார்பில் 'தியாகச் செம்மல்' என்று
விருது பொறிக்கப்பட்ட பட்டயங்
கள், 4749 பேருக்கு அளிக்கப்
பட்டது. மேலும் வழங்கப்
படுகிறது, மாநிலங்களுக்கும்
தமிழக அரசின் தியாகச் செம்மல்
பட்டயங்கள் வழங்கப்படும்.
எனினும், இந்த தியாகச்
செம்மல் விருது பெறுவோர்
எண்ணிக்கை பத்தாயிரத்தைத்
தாண்டுமென்று இருந்தும்

படைக்க வேண்டும் என்றால்
மென்றும், தியாகிகளுக்குக்
கட்டும் மரியாதையை மே
லும் இது பெரிதாகக் கருது
கிறது.

தியாகங்களின் தெய்வு, அதற்கு
தியாகத்தை உணர்ந்து விட்டோம்
உண்மைதான்.

சுதந்திரம் என்பது இந்நாள்
வெளியேறுவது மட்டுமல்லவே!
சுதந்திர, இவர்களுக்கும் கிட்ட
வருமே சுதந்திரத்தின்
உண்மையான அளவுகோல்!
அதற்கான மனநிறைவுடன்
இருக்கிறோமா? 'இல்லை' என்று
பதில் தானே நம் இதயத்தில்
வேதனைப் படுகிறது.
இந்தியத் திருநாட்டின் பல்வேறு
பகுதிகளில் காணப்படும்,
வறுமை, பசி, பட்டினி,
உணவுப் பற்றாக்குறை, வேலை
யின்மை — இவைகள், தமிழ்
நாட்டைப் பெரிதும் பாதிக்க
வில்லை என்றாலும், விடுதலைக்குத்
தேவை விளக்கம் இன்னமும்

இஃது. விடியாத உலகு,
இந்தியா முழுமையும் கட்டுப்
படைக்கிறது. உலக நாடுகளுடன்
ஒப்பிட்டுப் பார்க்கும் போது
விடியாத உலகு இந்தியாவில்
தான் அதிக சதவிகிதம்
என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன
இந்தியாவில் மற்ற மாநிலங்
களுடன் ஒப்பிட்டுக் கொள்ளும்
போது, தமிழ்நாடு சற்று மேலே
சென்று விட்டுக் கொள்ளலாம்.
அதிக உற்பத்தியில் தமிழகம்
தன்னிறைவு கொண்டுள்ளது.
எட்டுப்பகுதிகள் திருவாரூரில்
உள்ளதென்ற அதிக விளைச்சலைத்தவி
வேறெங்கும் அதிக விட எந்தத்
தான் மக்கள் பாதிக்கப்படவில்லை
விடிவாக, உற்பத்தியோடும் —
நாணயப் புழக்கத்தோடும் —
இணைந்துள்ள பிரச்சினை
என்பதும், இதில் மத்திய அரசு
பெரும் தவறைச் செய்திருக்கவேண்
-டுமென்பதும் மாநில அரசுகள்

அரசு சேர்ப்பு நெருக்கடிப் புழக்கத்தைத்
தரவேண்டுமென்பதும் மறுக்க
முடியாத உண்மை மேலும்
கள்ளக் கடத்தல், பதுக்கல்
கறுப்புப் பணப்புழக்கம், இந்தப்
புற்று நோய்கள் நமது
பொருளாதாரத்தைச் சீர்
குலைத்துப் பேரழிவை ஏற்படுத்தும்
என்பதை உணராததால் இஃது
ஏற்பது உணரத் தகாதவை
இஃது. பதுக்கல் பேர்வழிகள்,
கள்ளக் கடத்தல் காரர்கள்
பாதுகாப்புச் சட்டப்படி கைது
பிறப்பிக்கவேண்டுமென்று தாக்கீது
மத்திய அரசிடமிருந்து வரவேற்று
கொண்டு, அரசாங்க நடவடிக்கை
எடுக்காமல் இருந்து விட்டது,
பதுக்கல் பேர்வழிகளை மேற்பட்ட
கடத்தல், கள்ளக் கடத்தல் கோஷ்டிகள்
தமிழக அரசு பாதுகாப்புச்
சட்டப் பிரிவின்படி கைது
செய்துள்ளதை அறிவோம்



# இந்த இதழுடன் இலவச இணைப்பு

# கருத்தோவியம்

அறிவர். கறுப்புப் பணத் திமிங்கிலங்களையும் தேடித் தாட்சண்யமின்றிப் பிடித்து ஒளித்து வைக்கிற கறுப்புப் பணம் இருபதாயிரங்கோடிக்கு மேற்பட்ட தொகையை வெளிக் கொணர்ந்து தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டும், அந்தக் கறுப்புப்பணத்தை வெளிக் கொணர மாநில அரசுகளும் தேவையான ஒத்தாசைகளை வழங்க வேண்டுமென்று மத்திய அரசைக் கோரியும், தமிழகச் சட்டப் பேரவை, மேலவைகளில் ஒருமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. வறுமையை வீழ்த்த, ஏழைத் தாழ்வற்ற சோஷலிச சமுதாயத்தை உருவாக்க, அரசு எடுக்கின்ற முயற்சிகள் எவ்வளவு தூய்மையானவையாக இருப்பினும், அந்தக் கெடுத்துத் தடுக்கும் வகையில் கள்ளச் சந்தையும், கறுப்புப்பணமும் பெருக்கெடுக்கின்ற கட்டமைப்புக் கொண்டிருக்கும். முன் செல்வதைத் தீர்மானமாக அதைத் தமிழ்நாட்டிலே ஒழிப்பது சுமடத்தைப் போலத்தான் நடத்த சமதர்மவாதிகளுக்கு கறுப்புப் பணத்தொழிப்பும், கள்ளச் சந்தைத் தொழிப்பும் திறமிக்க கொள்கையாகி அந்தத் திருப்பணியில் இங்கு சமத்துவமும், சமதர்மமும் திட்ட மத்திய அரசு, மாநில அரசுகளின் உறுதியான நடவடிக்கைகளில் நிறுவப்பட வேண்டும். இதுவும் உண்மையா! உறுதியாக! மாநில அரசு

இருக்கும் இந்த அதிகார உரிமை
கடவுள் வழங்கியதன் வாயிலாக!
அதற்குத் தேர்தலையே
ஓர் உரிமை ஒதுக்கும்
கொடிகளுக்குப் பிரிப்பதில்,
மக்களைப் பற்றிக் கவலைப்படாமல்
தங்கள் சொந்தக் கட்சி லாபத்தை
வாழ்வைப் பெருக்கிக் கொள்ள
கிய கொள்கைகள், கொள்கைக்
கட்சிகளுப் பிரிப்பதில்,
நடுவே அரசுக்குள்ள கடமையும்
பொறுப்பும் மாநில அரசுகளுக்கும்
இருக்கவேண்டுமென்பதைத் தான்
கட்சிச் சார்பற்ற முறையில்
சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்
-கள் அனைத்துக் கட்சியினரும், அந்த
அடிப்படையில் தான் நிர்வாகம்
அமைவதாக நிறைவேறுகிறது.
இன்றுள்ள நிலையில் இந்திய
பொதுநாட்டுச் சிக்கலைத்
தடுத்து நிறுத்தி, விடுதலை உணர்வு
வெறியர்களைத் திண்டாட்ட
போர்க்குண வெறியர் அனைவரும்
மக்கள் வாழ்வில் பொறுப்பு
ஏற்படுத்த மாநில அரசு, மத்திய

அரசு இரண்டும் உரிய நடைமுறை
-யைக் கையாளும் பக்குவம் இருக்க
வேண்டும். இந்த நேர்மையை
நேர்மைதியில், அரசு மட்டுமல்ல
நாமும் மக்களும் தங்கள்
அடித்தளப் பணியைத் தொடர்ந்து
வேண்டும். "அரசாங்கத்தை,
சட்டத்தை, மனிதர்கள் என்
பார்!" என்பது விதிமுறை—
அது. மக்களிடத்தில் நேர்மை
யும் மாபெரும் துறைகளும்.
இவைகளெல்லாம் உணர்ந்து
செயலாற்ற வேண்டும்.

உரிய முறைப்படிகள் திறந்திட
வேண்டும். இந்த முறைகளில்
தீய அரசியலின்றித் தான்
நடக்க வேண்டும்.

அதற்கான புதிய
அவசரம் பெருகிட, மத்திய
நாம் அனைவரும் போராடினால்
இப்போதாவது இந்தத் துச்
செய்யும் தொடர்ந்திடல்
நன்று!

விருந்தோம்பல், விழாக்
கொண்டாட்ட பெருக்கு
விடலை,

வேதியியல்,
வட்டம் போட,
வேடிக்கைச்
திருவிழாட்டம் விளக்க,
உணவை அருந்திட,
விலங்கினை வேட்டை
ஆடிட,

இவையெல்லாம் பலபேர் போல்
என்று உறுதி எடுத்துக்
கொள்வோமாக!

தனித்த உறவு இவர்க்கும்
இனக்கல விழுதாம் இணைத்
-தீர் உடைக்கப்பட்ட
தமிழர் இவர்க்கும்
நம் வீரவணக்கத்தை
இன்றளில் தெரிவித்துக்
கொள்வோமாக!

இந்தியாவின் ஒற்றுமை
அறிப்பு எப்படி இன்று
இந்திய நீதியில் நடைமுறைப்
பரந்துப்பட்ட வேண்டிய
கொள்கை போல, அது போலவே
கார்த்திகேயனின் புரிதல்
கொள்கையாம் மதுவிலக்குக்
கொள்கையும் அன்றி இந்திய
நீதியில் நடைமுறைப்
படுத்த வேண்டிய ஒன்றாகும்.

அதன் எண்ணித்தான்
தமிழகம் நிதிநிலைப் புறக்
கணிப்பாய் தப்பாற்றிங்
அரசு போது, மதுவிலக்கை
ரத்து செய்யாமல், மதுவிலக்
கை அத்தனைக் கூறும்
என்றுமட்டும் இந்த அரசால்
கத்தான் எடுத்துக்கூறப்
பட்டது.

கொண்டு விட்டேயும்
செய்யுமாறு திருத்திடுவோம்
கொடுத்துப்பட்ட அதிகாரத்
தமிழ்நாடு என்ற நாம்
இழக்க முடியும்? என்று
நான் கேட்கிற கேள்வி,

சார்ந்தும்
எரிகிற நெருப்பை அணைக்க
வேண்டும் என்று கேட்டதின்
அடிப்படையில் தானே தவிர
வேறில்லை. மதுவிலக்கை
ஒத்திவைக்கத்தான் சொன்னமே;
ரத்து செய்யவில்லை என்பதற்கு
எடுத்துக் காட்டாகத்தான்
முதற் கட்டமாக கள்ளுக்கடை
கள் மூட ஆணைபிறப்பிக்கப்
படுகிறது. அடுத்த கட்டமாக
சாராயக்கடைகளும்
அடுத்தாண்டு
மூடப்படும் என்பதை இந்த
வெள்ளிவிழா நினைவு நாளில்
மகிழ்வுடன் அறிவித்துக்கொள்கிறேன்.
இந்தியநாடு முழுமையும்
முழு மதுவிலக்கு செயல்
படுத்தப்பட எல்லாக்கட்சி
களும் ஒத்துழைத்திட
வேண்டும்

'கொள்கையின் திட்பத்தில்
இணையற்றக் காவலோம்'

என்று அண்ணாவின் பொன்
மொழிக்கேற்ப சாதனை வழங்கிட
நேர்மை நிமிர்ந்த அரசுப்
பொறுப்பு வகையில், இணைந்து
உழைத்தோம். மேலும் அந்தப்
பணியில் கோ. பேட்டை நாம்
வெற்றி காண, அரசியல்
பழம்பெரும் தியாகவாளர்
களும், கொள்கைப்பிடிப்பும்
கொண்ட கட்சியினர்
அனைவரும், ஒன்றுபட்டு
உழைத்து - வெற்றி சரித்திரத்
தைப் பெறப் பாடுபடுவோம்
என்று உறுதியுடன்
தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்
கும் விழாநாள்
வாழ்த்துக்கள் வழங்குகிறேன்.

அன்பு
மு.க
15/6/73.

# கதவு

மா.முத்து (ஓவியர்)



கிரீச்......கி..ரீ. .ச்...
யசோதரா சற்றுத் திரும்பிப் படுத்தாள். ஏன்? திருமணமான பிறகும், குழந்தைக்கு ஓராண்டு ஆனபிறகும், அந்த விதமான ஒலியை அவள் கேட்டதே இல்லை. அதுதான் அவள் கேட்ட முதல் ஒலி. ஆம். அதுவே தான் கடைசி ஒலியும் ஆகும்.

கதவு திறக்கப்பட்டது.

அந்த உருவம் வெளியேறியது, மீண்டும் கதவு லேசான இடைவெளியுடன் நின்றது. இடைவெளிக்குப்பின், அந்தக் கரங்கள் அதன் மீது பட்டதே இல்லை.

உப்பரிகையின் மீது, மார்பில் குழந்தையை அணைத்தவாறு கீழே உற்று நோக்குவதற்கும் ஓரிரு நட்சத்திரங்கள் யசோதாவைப் பார்த்துக் கலங்காதே என்று கூறுவதற்கும் சரியாக இருந்தது. கீழே நோக்கினாள். இருட்டில் ஓர் உருவம். ஆம். உருவமல்ல அவளின் உயிர். அவளது செல்வம் அவளைவிட்டு விட்டு வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.... திரும்பவேயில்லை.

சித்தார்த்தர் அன்றிலிருந்து புத்தரானார். ஆம். கோடிக் கணக்கான மக்களின் இருட்டுக் கதவுகளையும், இதயக் கதவுகளையும் திறக்கக் காட்டிற்குச் சென்றார்......தவம் செய்யத் தொடங்கினார்.

கதவு படாரென்று திறக்கப்பட்டது. மணியோசைகள் எத்தனை வேகம் என்பதை அந்த ஆலயத்திற்குள் இருந்தவர்களின் காதுகளைப் பொத்தச் செய்தது. ஏன், ஆலயத்தையே ஒரு குலுக்குக் குலுக்கியது. உள்ளிருந்த புரோகிதர்கள் அனைவரும் கதவு திறக்கப்பட்டதையே நோக்கினர். ஓமகுண்டம் புகை மயமாகக் காட்சியளித்தது. புகை மண்டலத்திலிருந்து •• மெல்லிய உருவம் அசைந்து வந்தது. ஆம். புத்தர் பெருமான் அங்குள்ளவர்களையும் என்ன நடக்கப் போகிறது என்பதையும் உற்று நோக்கினார். அவரது பார்வையில் அங்குள்ளோர் அனைவருமே திகைத்து நின்றனர். கொழுந்து விட்டெரியும் ஓமகுண்டத்தின் யாகத்தை விட்டு எழுந்து நின்றனர். கால்கள் அவர்களை அறியாமலேயே நின்றது. அனைவரும் அவ்வுருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். மே....மே....ஒரு குட்டியின் கதறல். கொடிக் கம்பத்தில் கட்டப்பட்டுக் கழுத்தில் மாலையுடன் காட்சியளித்த ஆட்டுக் குட்டியை எடுத்துத் தன் தோள்மீது போட்டுக் கொண்டார். ஆட்டுக்குட்டி திருதிருவென விழித்தது. அன்பு, சாந்தம், அமைதி கூரிய கண்கள் எதையோ தேடிக் கொண்டிருந்தன. மின்னல் வேகத்தில் பாய்ந்து பக்கத்திலுள்ள கொடிய வாளினை எடுத்தார். ஆட்டுக் குட்டியை மார்போடு அணைத்துக்கொண்டு

''ஜீவகாருண்யமற்ற இக்கொடிய செயல்கள் நிறுத்தப்படவேண்டும்.'' என்று கூறினார். எல்லாரும் திகைத்தனர். உயிர்களைப் பறிக்க நமக்கு அதிகாரமில்லை. உயிர் வாழ, உயிரைப் பலியிடுவது பாபம் எனக் கூறி வெளியேறினார்.

அதன்பின் அந்தக் கதவுகள், மூடப்படவேயில்லை. ஆம். அங்கு, அதன்பிறகு ஆண்டவனால் படைக்கப்பட்ட உயிர்கள் வரவுமில்லை. பலியிடப்படவுமில்லை.

கதவு தட்டப்படுகிறது. இரண்டு தடவை தட்டும் சத்தம் கேட்டதும் யாரது என்ற உரத்த குரல். ஆம். அது ஆணின்குரல் தான் என்ற உணர்வு. குரல் இவ்வளவு சீக்கிரமாக வருகிறதே, யாராக இருக்கும். தட்டிய கைகள் அப்படியே மெய்மறந்து நிற்கிறது. மீண்டும் யாரது என்ற அதிகார தோரணையுடன் கேட்டதும் உருவம் வேகமாக ஓடுவதற்கும் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.... அந்தத் தெருவின் கதவுகள் அனைத்துமே தட்டப்பட்டது. எல்லாரும் யார்? யார்? என்று வியந்தும் பயந்தும் போயினர். காலையில் அரசரிடம் போய்க் கூறலாம் என்று கதவைத் தாளிட்டனர்.

மறுநாள் வாயிற் கதவுகள் திறக்கப்பட்டது. அத்தெருவின் மக்கள் அரச மரியாதையுடன் அரசரிடம் முறையிட்டார்கள். என்ன வேண்டும் என்றார் மன்னர்.

அரசே நான் யாத்திரை சென்றுவிட்டு நேற்றுப்பகல் தான் திரும்பி வீடு வந்தேன்.

இரவில், நடு இரவில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. யார் என்று பார்ப்பதற்குள் யாருமே இல்லை. என் மனைவி மீது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. பக்கத்திலுள்ள மக்கள் எங்கள் வீட்டுக் கதவுகளும் தட்டப்பட்டன என்றனர். திகைத்தனர். மக்கள் இப்படிக் கூறியதும் மன்னர் கூறினார், "உங்களுக்குத் துன்பம் விளைத்த அக்கயவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்" என்றார். மக்களில் சிலர் தட்டிய கரத்தைத் துண்டாக்க வேண்டும் என்றார்கள். மன்னரது முகம் புன்னகையால் சிவந்தது. மறுகணம் கை உடைவாளை நெருங்கியது. அக்கணமே தட்டிய கை துண்டாகியது கண்டு மக்கள் அலறினார்கள். மன்னரே என்ன காரியம் செய்துவிட்டீர்கள். நீங்களா! என்று அவர்கள் அழுது புலம்பினர். பிறர்க்குத் துன்பம் விளைவித்த கைகள் மன்னரானால் என்ன மாற்றான் ஆனால் என்ன என்றார்.

யாத்திரைக்குச் சென்றவனின் இல்லத்தரசியைப் பாதுகாப்பதில் ஏற்பட்டதின் விளைவு கையை இழந்தார், மன்னர். ஆயினும், நீதி வழுவாப் பொற்கைப் பாண்டியன் என்று பெயர் பெற்று வரலாற்று நாயகனானார்.

இரவு! கதவைத் திறங்கய்யா! எத்தனை தடவப்பா சொல்றது, கதவைத் திறக்க முடியாதுன்னு உங்களோட பெரிய தொந்தரவாப் போச்சு! முதலாளியைப் பாக்கறதுக்கு நேரங் காலம் கிடையாதா?

"வீராசாமி என்னப்பா இப்படிப் பேசற, இதுவரைக்கும், நாங்க உன்னைத் தொந்தரவு செய்திருக்கோமா? எப்படிப்பட்ட அவசரமான நேரத்திலே இந்த மாதிரி எரிஞ்சு விழரயப்பா? நீயும் போய்ச் சொல்ல மாட்டேங்கற! எங்களையும் சொல்லவிட மாட்டேங்கிறே! நாங்கள்ளாம் வாழறதா சாகிறதாப்பா?

கதவைத் திறக்க முடியாது! என் பிழைப்பிலே மண்ணைப்







போடப் பாக்கிறீங்களா? போங்கய்யா காலையிலே வந்து பாருங்கய்யா."

கதவு திறக்கப்பட்டது! அந்தக் கதவுக்குச் சொந்தமாகப் பேசத் தெரியாது. 'லொள் லொள்' என்ற ஒலி. பின்பு "என்னடா வீராசாமி சத்தம் இங்கே" என்ற அதட்டல் குரல் கேட்டது. அந்த நேரத்தில் ஹாரன் சத்தம் கேட்டது. வீராசாமி கத்தினான்.

"சின்னய்யா வராங்க! வழி விடுங்கய்யா" வீராசாமியைத் தடுத்து நிறுத்தி விட்டு வாசலைக் கடந்து பத்துப் பதினைந்து விவசாயிகள் முதலாளியின் அருகே சென்றார்கள்.

காரின் கதவு திறக்கப்பட்டது.

சின்ன முதலாளி குமார் வேகமாகக் கீழே இறங்கி டார்ச் லைட்டை ஒவ்வொருவர் முகத்திலும் அடித்தான்.

"வெளியூரிலிருந்து இரவு 7 மணிக்குத்தானே அப்பா வந்திருக்கிறார்கள். தூங்க விடாமல் இப்படித் தொல்லை கொடுக்கிறீர்களே! காலையில் வந்து பார்த்தாலென்ன குடியா முழுகிப் போய் விடும்?" என்றான் குமார்.

"என்ன தம்பி இப்படிப் பேசறீங்க. கம்மாயில் இருப்பது கொஞ்சம் தண்ணி தானே தம்பி. நாலு நாளா பயிர் வாடிப்போகுது. உங்க ஆளுக தண்ணியைத் திறக்க விட மாட்டேங்கறாங்க! கேட்டா கத்தி, கம்புகளைக் காட்டுறானுங்க", என்றனர் விவசாயிகள்.

"என்ன குமார் என்ன விவகாரம்? என்றார் முதலாளி.

குமார், தகப்பனார் காதில் ஏதோ முணுமுணுத்தான். அவ்வளவுதான் முதலாளி முகம் ஏறி இறங்கியது.

"போய் நாளைக் காலையில் வந்து பாருங்க" என்றார். கதவு மூடியது. லொள்.. லொள்........ மூப்பனாரும், குமாரும் உள்ளே சென்றனர். அதன் எதிரொலிதான் இந்தக் குரல். வயலுக்குத் தண்ணீர் கேட்கச் சென்ற

விவசாயிகள் இந்த இரக்கமற்ற செயலைக் கண்டு மனம் ஒடிந்து அவரவர்கள் குடிசைக்குச் சென்றனர். இரவு எப்பொழுது முடியும், எப்பொழுது விடியும் எனக் காத்திருந்தனர். அவர்களின் கண்களுக்கு நித்திரா தேவி அடைக்கலம் கொடுத்தாள்.

'' மாடசாமி அண்ணே! மாடசாமி அண்ணே! நம்ப வயலெல்லாம் தண்ணி நிறைந்து வழியுதுன்னே '' என்ற குரல் காலையில் ஒலித்தது, மகிழ்ச்சி பொங்க!

அலறி அடித்துக்கொண்டு அனைவரும் வயலுக்கு ஓடினர். ஆம்! அதிசயிக்கத்தக்க உண்மை நடந்தது. மூப்பனாரின் ஆட்கள் விழித்திருக்க எப்படி வயலுக்கெல்லாம் ஆள் வேலை செய்யாமல் தண்ணீர் கிடைத்தது! அதுதான், வரப்புகளுக்குச் சன்னல் அமைத்து அதற்குக் கதவு போட முடியாமல் திறந்த கதவுகளாகவே செய்து விட்டிருந்தன நண்டினங்கள். ஆம். அவைகள் தொண்டினங்கள். பண்ணையார் வயலுக்குப் பாய்ச்சப்படும் தண்ணீரிலிருந்து ஏழை விவசாயிகளுக்கு நீர் கிடைத்தது! '' தொண்டிகள் மூலம் தொண்டு செய்த நண்டுகளே வாழ்க '' என்று விவசாயிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள்.



கதவு திறந்தும், பின் மூடியும் ஆடிக் கொண்டேயிருந்தது. வெளியில் காத்துக் கிடக்கும் ஓர் உயிரும் ஆடிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் அந்த உயிரை ஆடச் செய்து கொண்டிருந்தது அவன் மனம்தான். என்ன ஆகுமோ என்று அவன் பதைபதைத்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் வெற்றிநடையோடு டாக்டர் வெளியே வந்தார்.

டாக்டர் சார்....எப்படி சார் இருக்கு..என் வாழ்வைக் காப்பாத்துங்க சார். என்ற குரல் தழதழத்தது. கவலைப் பட வேண்டாம். ஐந்து நிமிடத்தில் சரியாகிவிடும். இது டாக்டரின் குரல். சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து வெளியேறினார், டாக்டர்.



கதவு ஆடிக் கொண்டேயிருந்தது. கதவின் இடுக்கிலிருந்து ஏதாவது தெரியாதா என்று ஆவலோடு பார்த்தான். வானிலிருந்து அமைதி தேவதை வெண்மையான மேகங்களுக்கிடையே தோன்றுவதுபோல் வெண்ணிற ஆடையுடன் நர்ஸ் கதவைத் திறந் வந்தாள். உங்களுக்கு ஆண் குழந்தைங்க! என்று கூறியதும் அவன் உள்ளமெல்லாம் பூரித்தது. ஆனந்தத்தின் எல்லைக்கே அவன் சென்றான்.

வேகமாக வந்து கொண்டிருந்த போலீஸ் லாரி நடுக்காட்டில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த வாயில் பக்கம் வந்துநின்றது.

திறக்கப்பட்டதும் சிறிது நேரத்திற்குப்பின் லாரியின் கதவும் திறந்துவிடப்பட்டது. இவர்களின் வருகையைத் தெரிந்து வைத்திருந்த பக்கத்துக் கிராம மக்கள் இப்படி ஒரு கற்பனையிலும் நடக்கக் கூடாத நிகழ்ச்சியைக் காண மிகுந்த ஆவலுடன் லாரியின் கதவுகள் திறக்கப்படுவதைக் காணத் துடிதுடித்தனர்.

இந்த அரிய நிகழ்ச்சி தமிழர்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் சகாப்தத்தின் திருப்பமாகவே அமைந்தது!

ஊம் எல்லாரும் இறங்குங்கப்பா ஒரு காவல் அதிகாரியின் குரல்.

ஆட்டு மந்தையைப் போல் மழமழவென்று தட்டுத் தடுமாறி இறங்கினார்கள். கூன் விழுந்தவர்கள், குருடானவர்கள், பல்வேறு விதமான ஊனம் அடைந்தோர், வாழ முடியாத பெண்கள், நோய் உள்ளவர்கள், வயதானவர்கள், தொழு நோய்க்காரர்கள் எல்லாரும் பலியிடப்போகு முன் திருதிருவென முழிக்கும் ஆடுகளைப்போல் என்ன நடக்கும் என்பது தெரியாமல் திகைத்தனர். 36, 73 எல்லாரையும் ஒழுங்கு பண்ணப்பா. என்ற குரல்.... இரண்டு காவல்காரர்கள் அவர்களை முறைப்படுத்தினர். அப்போது,

"ஐயா," எசமான், நாங்க என்னய்யா குத்தம் செஞ்சோம் எங்களைக் கொண்டு போய் ஜெயிலில் அடைக்கிறீங்களே கடவுளே! உனக்குக்

கண்ணில்லையா, கண்ணில்லாத குருடன் ஒருவன், ஏய்யா எங்களை ஜெயிலுக்கா கூட்டி வந்தீங்க. போலீசா! நாங்க என்னய் தப்புப் பண்ணினேம். முருகா (ஒரு பெண்) குடும்பத்தோடு பிச்சை எடுத்து அரை வயிற்றுக் கஞ்சி சாப்பிட்டுக்கிட்டு இருந்தோமே எங்களை ஏய்யா ஜெயில்ல அடைக்கணும். நாங்க ஒரு தப்பும் பண்ணலியே.

(ஒருவன்) திருடர்களைப் பிடிச்சு அடைச்சு வைக்கிறதை விட்டுட்டு எங்க மாதிரி கால், கை போனவங்களை அடைச்சு என்ன இலாபம் இப்படி மாறி மாறிக் குரல்கள் கேள்விக் கணை எழுப்பின.

இத்தனையும் பொறுமையாகவும், ஓரமாகவும் நின்று கேட்டுக் கொண்டிருந்த காவல் அதிகாரி லாரியை விட்டுக் கீழே இறங்கி வந்தார்.

இந்தாப்பா உங்களை யாரும் ஜெயிலில் அடைச்சுக் கஷ்டப் படுத்துவதற்கு இங்கே கொண்டு வரவில்லை. இது ஜெயிலுமல்ல. நீங்கள் இனிமேல் பிச்சை எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் இங்கே உங்களைக் கூட்டி வந்தோம்.

(ஒரு கிழவி) இது என்னய்யா அநியாயமா இருக்கு, எங்களுக்குச் சோறு போட ஆளில்ல சொந்தக்காரங்க இல்லை. நாங்க பிச்சை எடுக்காம எப்படி சாமி புழைக்கிறது? வயிறு இருக்கே!

(ஒரு நோயாளி) எங்க தலைவிதி பிச்சை எடுக்கிறோம் இது ஒரு குத்தமா? என்னது புதுசா இருக்கு!

போலீஸ் அதிகாரி புன்முறுவலுடன் நீங்க சொல்லுவது எல்லாம் சரிதான். அது பழைய நிலை. புதிய திட்டப்படி இந்த ஆட்சியில் உங்களுடைய வாழ்க்கையைச் சீரடையச் செய்யவும், தொழு நோய்க்காரர்களால் நோய் பரவுவதைத் தடுக்கவும், பிச்சை எடுப்பதைத் தடுக்கவும், பிச்சை எடுப்பது கேவலம்; நாட்டுக்கும் அவமானம் என்பதால் இதற்கான பரிகாரம் காணவே



இப்படி ஓர் சிறந்த ஏற்பாட்டினைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திட்டம் வகுத்து இன்றுதான் முதன் முறையாக இந்த விடுதியினைத் திறந்து வைத்துள்ளோம். ஒருவன் குறுக்கிட்டு அப்படியானல், நாங்க எல்லாம் இந்த மூணு தெருவுக்குள்ளேதான் பிச்சை எடுக்கணுமா சார் ?!

பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த மக்கள் எல்லாரும் சிரித்தனர். காவல் துறையினரும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தே விட்டனர்.

அதிகாரி, அப்படி அல்ல இந்தக் கட்டடத்தில் உங்கள் எல்லாருக்கும் தனித்தனி அறைகள், அங்கே உங்களுக்கு உடை, படுக்கை, சாப்பாடு எல்லாம் நேரத்திற்குக் கிடைக்கும். கவலைப் படாமல் இங்கே வாழலாம்.

நோயாளிகளுக்கும், தொழு நோய்க்காரர்களுக்கும், டாக்டர்கள் மருந்து கொடுப்பார்கள் என்றார்.

உடனே ஒருவர் ஐயா, நாங்கத் தெருத் தெருவா அலைஞ்சு பிச்சை எடுத்தால் காசுகள் கிடைக்குமே இங்கு கிடைக்குமா சார்.

அதுவும் கிடைக்கும். இங்கே உங்களுடைய திறமைக் கேற்பத் தொழில்கள் கற்றுத் தரப்படும். அதற்கான சிறு ஊதியமும் கிடைக்கும் என்றார்.

ஏன் சார் எங்களுக்காக சர்க்காரு ஏன் இவ்வளவு அக்கறை காட்டுறுங்க, ஒண்ணுமே புரியலியே!

(அதிகாரி) அதுதான் இன்றையப் பிரச்சினை. தமிழ் நாட்டில் பிச்சை எடுப்பதும் பிச்சை கொடுப்பதும் இழிவான செயல். பிச்சை எடுத்துப் பிழைப்பவர்களைக் கடவுள் தண்டனை கொடுத்துள்ளார் என்று விட்டு விடாமல் நாம் நமது உடன் பிறப்புக்களாக எண்ணி அரியதோர் மறுவாழ்வுத் திட்டம் தீட்டி அதை நாங்கள் செயல் படுத்துகிறோம். ஆகவே நீங்கள் எல்லாரும் அமைதியாக உங்கள் மறுவாழ்வைத் தொடங்கலாம். என்ன...?

அப்படியா சாமி நீங்க நல்லாயிருக்கனும் அந்த முதல்வர் அய்யாவும் நல்லாயிருக்கனும் என்று மகிழ்ச்சி பொங்க வரிசையாகச் சென்றனர்.

அவரவர்களுக்கான அறைக் கதவுகள் திறக்கப்பட்டன.

• • •

கதவைத் திறந்து படிக்கட்டுகளிலிருந்து இறங்கி, 'காலம் கண் போன்றது; கடமை பொன் போன்றது' என்ற விளம்பரப் பலகை மறைந்து பின் தெரிந்தது. ஆம். காலத்தை உணர்ந்து தமிழர்களின் கண்ணான வாழ்வை உயர்த்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள் படிக்கட்டிலிருந்து அவருக்கே உரித்தான முல்லை மலர்ச் சிரிப்புடன் 'என்ன செய்தி?' என்று கேட்டார்.

காத்துக் கொண்டிருந்த பத்திரிகைச் செய்தியாளர்கள் தங்களிடந்தான் செய்திகள் கேட்க வந்திருக்கிறோம். ஏதாவது செய்தி சொல்ல வேண்டும் என்று கதவில்லாத செவிகளைக் கூர்மையாக்கினர்.

புன்முறுவல்......அதுதான் அவரின் வாடிக்கையான தோற்றம்.

தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லங்கள் பத்து கட்டி முடிக்கப்பட்டது தெரிந்தது தான். இனியும் செய்தி தெரியாமல் பிச்சை எடுப்பவர்களைப் பற்றி பொது மக்கள் காவல்துறை அலுவலகத்தில் தகவல் கொடுக்க வேண்டும்; அதற்கான சன்மானத் தொகையும் உண்டு என்றார்.

செய்தியாளர்கள் — நன்றி தெரிவித்துவிட்டு அவரவர் காரியாலயத்தின் அறைக் கதவுகளைத் திறந்து செய்தியைப் பத்திரிகைகளில் வெளியிட்டனர். ஒரே பரபரப்பு. என்ன தமிழகத்தில் பிச்சைக்காரர்களைக் காண்பதே அரிதாகி விட்டதா? அறிஞர் அண்ணாவின், கலைவாணர் அவர்களின் ஐம்பது —அறுபதின் நிகழ்ச்சிக் காவியம் கலைஞரின் ஐம்பதாவது ஆண்டில் நிறைவேறி விட்டதே! என்று மக்களின் மனக் கதவுகள் திறந்து கூறிய சொற்கள், சுவையோடு இழைந்தன.

# அண்ணாவின் மொழிகள்



**மாமரம் போல....**

மாமரம் மேலோங்கி வளர வளர அதன் கிளைகள் நாலாபக்கமும் பரவி, தாழ நோக்கி வளருகின்றன. அதே போன்று வலிமை படைத்தவர்களின் பலம் நாளுக்கு நாள் அதிகரிப்பதற்கேற்ப அவர்கள் படிப்படியாகப் பணிவுணர்ச்சியைப் பெருக்கி வரவேண்டியது இன்றியமையாததாகும்.

**தங்கம் அல்ல!**

உழைப்பு இல்லாதுபோனால் தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவை எல்லாம் வீண் சுமைதான். பூமியின் அடியிலிருந்து மதிப்பு வாய்ந்த உலோக மண்ணைத் தோண்டி எடுத்து வந்திருப்பது உழைப்புத்தான். உலோகங்கள் இல்லாமலேயே தொழிலாளர் வாழ்ந்துவிட முடியும். விலை மதிப்பில்லாதது உழைப்பேயன்றித் தங்கம் அல்ல!

**வாழ்க்கையின் மூச்சு!**

நாம் உலகில் வாழ்வதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டுமாயின் வாய்மைக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்பதே அது. நமது செயல்களெல்லாம் வாய்மையை மையமாகக் கொண்டவையாக இருக்கவேண்டும். வாய்மையே நமது வாழ்க்கையின் மூச்சாக இருக்கவேண்டும். வாய்மையில்லாமல் வாழ்க்கையில் எந்த விதியையும் நாம் பின்பற்ற முடியாது.

**இமயமலை அது!**


சிறிய புயல் அடித்தாலும் வாடி வதங்கக் கூடிய மென்மலர் அல்ல நம்பிக்கை; அசைக்க முடியாத இமயமலை போன்றது நம்பிக்கை. எத்தகைய புயலும் இமயமலையை முட்டோடு பிடுங்கி எறிந்துவிட முடியாது.

**உடம்பைப் போல!**


சோஷலிசம் என்பது அழகான ஒரு சொல்; சோஷலிசத்தில் சமூகத்தில் எல்லா உறுப்பினர்களும் சமமானவர்கள். உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று எவரும் இல்லை. நம்முடைய உடம்பின் உச்சியில் இருப்பதால் தலை உயர்ந்ததாகி விடாது; உள்ளங்கால்கள் தரையைத் தொடுவதால் அவை தாழ்ந்தவையாகி விடமாட்டா. உடம்பின் எல்லா உறுப்புக்களும் சமமாக இருப்பது போலவே, சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் சமமானவர்கள். இதுதான் சோஷலிசம்!

**கலாச்சாரக் காற்று!**

என்னுடைய வீட்டைச் சுற்றிலும் சுவர்களை எழுப்பிச் சன்னல்களை இறுக மூடி வைப்பதை நான் விரும்பவில்லை. எல்லா நாடுகளுடைய கலாசாரங்களின் காற்றும் என் வீட்டைச் சுற்றிலும் மிகத் தாராளமாக வீசவேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால், அவற்றுள் எதுவும் என்னைத் தூக்கியெறிந்து விடக் கூடாது, மற்றவர்களின் வீடுகளில் அழையா விருந்தாளியாகவோ, யாசகனாகவோ, அடிமையாகவோ, வசிப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்.



# பிஞ்சு விரலில் பிறக்கும் சித்திரம்



" குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் சித்திரம் வரையக் கற்பிக்க வேண்டும்மென்று நான் தற்போது அபிப்பிராயப்படுகிறேன். பறவைகள், பூக்கள் முதலியவைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்வதுபோல் குழந்தைகள் முதலில் எழுத்தைப் பார்த்துக் கற்றுக் கொள்ளவேண்டும். பொருள்களைப் போல் சித்திரம் வரையக் கற்றுக் கொண்ட பிறகுதான் எழுத்து எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் அழகிய கையெழுத்துப் படியும் ''.

இவ்வாறு கூறுவது யாராயிருக்கலாம் என்று ஊகிக்கிறீர்கள் ? ஓவியத்தையே தொழிலாகக் கொண்டவர் சொன்ன கருத்தா இது ? இல்லவே இல்லை ! அண்ணல் காந்தியடிகள்தான் இந்தக் கருத்தைச் சொன்னவர் !

மணிமணியான கையெழுத்துக்கள் அமைய முதலில் சித்திரமே சிறந்த வழி என்பதை இக்கருத்து நமக்கு உணர்த்துகின்றதல்லவா ?

முதலில் அமைக்கின்ற கையெழுத்தே முடிவு வரை அமைந்து விடுகிறது. ' முதற்கோணல் முற்றும் கோணல்' அல்லவா? கையெழுத்து என்பது பழகத்தால் வருவதுதான். ' சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் ' என்னும் மொழி இதனாலன்றோ எழுந்தது !

ஒழுங்கற்ற கையெழுத்து — கோணல் மாணலான கையெழுத்து ஒருவனுக்கு அமைவதென்பது, அவன் தலையெழுத்தாலல்ல ! எதையும் திருத்திக் கொண்டால் — பழக்கப்படுத்திக் கொண்டால் கோணல் நேராகும் ; கிறுக்கல் ஒழுங்காகும் !

## சென்னை எழும்பூரிலுள்ள அரும் பொருட்காட்சியகம்

உள்ளே நுழைகிறோம். வருங்கால ஓவிய மன்னர்கள் வரிசை வரிசையாக வருகின்றனர். அவர்களுக்கு வயது என்ன தெரியுமா ? மூன்றரையிலிருந்து ஆறு வயது ! அவர்கள் முகத்திலேதான் எத்தனை உற்சாகம் ! புதுத் தெம்பு !

சென்னை அரும்பொருட் காட்சியகம் ( Museum ) விடுதலை வெள்ளி விழாவினையொட்டி இந்தச் சிறுவர்க்கான சித்திரப் போட்டியை முதன்முறையாக நடத்துகிறது.


ஒவ்வொரு ஆண்டும் விடுதலை நாள் விழாவினையொட்டி பல்வேறு கலை விழாக்களை நடத்துகிறது இது. பள்ளி மாணவர்களைக் கொண்டு நடனம், நாடகம் முதலான கலை விழாக்களை நடத்திய அரும்பொருட்காட்சியகம், தமிழ் நாட்டுப் பழங்கால இசைக் கருவிகளை இசைத்துக் காட்டியும், தோல் பொம்மலாட்டங்களை நடத்தியும் மகிழ்வித்திருக்கிறது.



ஆகஸ்டு இரண்டாம் நாளன்று போட்டி தொடங்குகிறது. மூன்றரை வயதிலிருந்து ஆறு வயதுள்ள சிறுவர் சிறுமிகள் மண்டபத்துள்ளே ஆங்காங்கே வந்து அமருகின்றனர். படம் வரைவதற்கான தாள்கள் அவர்களிடம் தரப்படுகின்றன. வண்ண வண்ணப் பென்சில்கள் அவர்கள் அருகே இருக்கின்றன. அவர்களுடைய எண்ணமோ கற்பனை உலகுக்குச் சிறகடித்துப் பறக்கின்றது. சின்னஞ்சிறிய கைகளின் மூலம் சித்திரங்கள் பிறக்கின்றன !

## அட்டை சொல்லும் கட்டுரை

பலவகையான மலர்கள், விலங்குகள், செடி கொடிகள், கப்பல்கள், காக்கைகள் — முதலான பறவைகள் — இப்படிக் குழந்தைகள் தாம் விரும்பிய படங்களை உற்சாகத்தோடு வரைகின்றன. ஒரு குழந்தை, வரையும் தாளின்மீதே படுத்துக் கொள்கிறது, தூங்க அல்ல ! ஒன்று சாய்ந்து சாய்ந்து வரைகிறது : மற்றொன்று வரைந்து வரைந்து சரிபார்க்கிறது !



இந்தப் போட்டிகள் மூன்று நாட்கள் நடைபெற்றன. ஆகஸ்டு 2, 7, 9 ஆகிய நாட்களில் முறையே மூன்றரை வயதிலிருந்து ஆறு, ஏழு வயதிலிருந்து பத்து, பதினொரு வயதிலிருந்து பதினாறு — வயது வரை இந்தச் சித்திரப் போட்டிகள் சிறப்பாக நடந்தன. ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் ( Age Group ) ஐந்தைந்து பரிசுகள் வழங்கப்படும்.

பிஞ்சு உள்ளங்களிலிருந்து பிறந்த இந்தச் சித்திரங்கள் — சிறந்தவை எனத் தேர்தெடுக்கப்பெற்ற சித்திரங்கள் எல்லாம் தொகுக்கப்பெற்றுக் கண்காட்சி ஒன்றை நடத்தவும் அரும் பொருட்காட்சியகம் முடிவு செய்திருக்கிறது.

செப்டம்பர்த் திங்களில், தமிழ் நாட்டுப் பழங்காலக் குடிமக்கள் பற்றிய கண்காட்சி ஒன்றை நடத்தவும், அதில் குறவஞ்சி நடன நாடக விருந்து படைக்கவும் அரும் பொருட் காட்சியகம் ஆக்க வேலைகளைக் கவனித்து வருகின்றது.



நாளையத் தலைமுறைகளான இன்றையச் சிறுர்கள் சித்திரத்திலும் சிறந்து விளங்கும் வண்ணம் அவர்களுக்கு ஊக்கமூட்டுகிறது இந்தப் போட்டி. இதுபோன்ற மாணவர் மன வளர்ச்சிக்கு வழி கோலும் போட்டிகள், தேர்வுகள் முதலியன வரவேற்கத்தக்கனவாகும்.

வருகாலச் சமுதாயம் வளமுள்ளதாகத் திகழ்ந்திட — எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கிட — இன்றைய மாணவர்களை நாம் நல்வழிகளில் தயார்படுத்த வேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் எவரையும் நாம் வாழ்த்தி வரவேற்போமாக!

பி.வி.ஜி.

# அறிஞர் அண்ணவின் அமுத மொழிகள்

**பலாச்சுளை!**

மேலே முள், முரட்டுத்தனமான உருவம், முட்களைக் கொண்ட தோல் மூடியிருக்கிறது. ஆனல் உள்ளே உருசியான பழச்சுளைகள்; உண்ண உண்ணத் தெவிட்டாத பழச்சுளைகள்; உடலுக்கு உறுதியான பழச்சுளைகள். முள் நீக்கித் தோலை உரித்தெடுத்துப் பெறும் பலாச்சுளையைப் போன்றதுதான் இசை!

**தொடர்கதை!**

அறிவு ஒரு தொடர்கதை! அதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்து தோன்றியபடி இருக்கிருர்கள்; இனியும் தோன்றுவார்கள்; உள்ளங் கவர் புத்தகங்கள் மேலும் பலப்பல வெளிவந்தபடிதான் இருக்கும்.

**விடை காணுங்கள்!**

தமிழில், வரலாறுகளில் வரும் விடுதலை வீரர்களைத் தீட்டிக் காட்டுங்கள்—விஞ்ஞான முன்னேற்றத்தை விளக்குங்கள். மத—மூடநம்பிக்கைகளைத் தகர்த் தெறியுங்கள். வாழ்ந்த இனம் ஏன் வீழ்ந்தது? எந்தக் கருத்துக்களைக் கையாள நேரிட்டதால் என்றெல்லாம் கேளுங்கள். விடை காணுங்கள்!

**மாந்தோப்பு!**

நல்ல மாந்தோப்பு அமைய—நல்ல களம்—விளைநிலம் எப்படி முக்கியமாகிறதோ—மூலமாகிறதோ அப்படியேதான் மனிதன் தரமும், பண்பும் படைத்தவனுக நல்ல வாழ்வு—நாகரிக வாழ்வு வாழ வேண்டுமானுல், மனிதன் வாழ்ந்திடும் களம்–நிலம், சமுதாயம், சமுதாயத்தின் நிலை, சூழ்நிலை முக்கியமாகிறது—மூலமும் ஆகிறது!

**சிற்பியும் கற்பாறையும்!**


சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன் வேலைக்கான மூலப்பொருள் — இனி அவனுக்குத் தேவை சிறிய உளியும், பெரிய உள்ளமும்; சுதந்திர இந்தியாவிலே இது போலவே வாலிபர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை, புதுவாழ்வு பெற—முழு வாழ்வு பெற!

**மலர்மாலை!**


மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனல் கைத்திறன் முழுவதும் காட்டிக் காகிதப் பூமாலை தொடுத்தால் பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

# காற்றாடி









ஆலையிலே பிறந்திட்டேன் ஒருகா லத்தில் ;
ஒளிவண்ணக் காகிதத்தில் மெருக டைந்தேன் ;
சாலையிலே இளஞ்சிறுவர் என்னை வைத்தே
சந்தடியை எழுப்பிடுவர் அந்த நாளில் ;
'வேலையிலே கூலியிலே' என்றி டாமல்
வெற்றிக்கு வித்திட்ட வித்த கன்நான் !
பாலையிலோர் சோலையெனக் கட்ட டத்தில்
பாருங்கள் உச்சியிலே நானி ருப்பேன்.

பட்டத்தில் உறவுண்டு ; பறப்ப தில்லை ;
பகைவர்கள் பாடுபஞ்சு பட்ட பாடே ;
வட்டத்தில் சரிபாதி விட்டம் ; வட்ட
வளையத்தின் மீதினிலென் ஆல வட்டம் :
சட்டத்தில், திட்டத்தில் மாற்றந் தோன்றும் ;
சக்கரமோ நாற்சதுரம் ஆவ தில்லை ;
கட்டத்தில் பலகோணங் கள்போல், கால
கட்டத்தில் வடிவங்கள் காணு கின்றேன்.

எனக்குமறு பேருண்டு ; 'விசிறி' என்பார் ;
யார்யார்க்கோ விசிறியான மானி டர்க்குத்
தனக்குநலம் பேணாத தொண்டன் ஆனேன் ;
தாமிரப்பட் டயம்வாங்காத் தியாகி யானேன்
எனக்கொருவர் இல்லையன்பு பாராட் டத்தான் ;
எல்லாரும் எடுத்தெறிந்தே வீசு கின்றார் !
மனக்கவலை கொண்டேனோ இதனால் எல்லாம் ?
மக்களுக்கே உழைக்கின்ற பிறவி நான்தான்!

எப்போதும் சுற்றிக்கொண் டிருப்பேன் ; சற்றும்
என்னுடம்பு வேர்ப்பதில்லை உங்களைப்போல்
வெப்பத்தால் தெப்பமாக நனைந்து விட்டால்,
வீசுகின்ற பூந்தென்றல் ஆவேன் ; கட்டில்
கப்பலிலே நீந்துங்கால் கொசுப்ப டைகள்
கட்டாயம் தாக்கிடாது நானி ருந்தால் !
தப்பென்ன செய்திட்டேன் ? என்னை ஏனோ
தண்டித்துக் கண்டித்தீர் குளிர்கா லத்தில் ?


தடையற்றுச் சுழலுவதால் தானே, ஆக்கும்
சக்தியானேன் ; சங்கதியு மானேன் இன்று !
விடையற்றுப் போயிருந்தால் ஓடு வேனோ ?
விசையோடு பறப்பேனோ விண்ணில் ? நீரை
நடைமுற்றத் தொட்டியிலே நிரப்பு வேனோ ?
நடுக்கடலுக் கழைப்பேனோ படகில் ? வையம்
அடையாள மாய்வைத்த பேர்காற் றாடி ;
ஐயாவே என்னாலே நன்மை கோடி !



காற்றினிலே ஆடிக்காற் றாடி யானேன் ;
காற்றோடு போகின்ற புழுதி யல்ல ;
காற்றுடன்மற் போர்புரிந்தே வாழு கின்றேன்
காலமெல்லாம் என்கோலம் எதிர்நீச் சல்தான்
சேற்றெருமை போல்குறிக்கோள் இல்லார் தம்மைச்
சேர்த்தென்னோ டொப்பிடுதல் என்ன நீதி ?
நேற்றைக்கும் இன்றைக்கும் கொள்கை யொன்றே
நிலையாக என்திசையில் நிமிர்ந்து நிற்பேன்!

இளங்கோ

# திருப்பத்தூர் வட்டாரத்தில் அணுசக்திப் பொருட்கள்



தமிழகத்தில், தொழில் மயமாகும் பணிகள் வேகம் பெற்று வருவதையும், கனிப் பொருள் வர்த்தகம் விரிவடைந்து வருவதையும் தொடர்ந்து, கனிச் செல்வப் பொருளாதாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. கேந்திர கனிப் பொருள் வகையில் (Key Minerals) தமிழகம் பற்றாகுறை மாநிலமாக உள்ளது என்றாலும், பொதுப் படையாகக் கனிப் பொருள்கள் உற்பத்தியில் மாநிலம் முக்கிய இடம் வகித்து வருகின்றது.

மாநிலத்தில் 1961-ல் எடுக்கப் பெற்ற கனிப் பொருள்களின் மதிப்பு 317 இலட்சம் ரூபாய். 1965-ல் இது 868 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. 1970-ஆம் ஆண்டில் எடுக்கப் பெற்ற கனிப் பொருட்களின் மதிப்பு 1,125 இலட்சம் ரூபாய் ஆகும்.

கஞ்சமலை இரும்புக் கனியையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்தி உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மூன்றாம் திட்டக் காலத்தில் சேலம் அருகே கஞ்சமலை, கோடுமலை ஆகியவைகளில் இரும்புக் கனி வளம் குறித்து விரிவான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து தமிழக அரசினர், சோதனைச் சுரங்கம், குடைவு வேலைகள், மாதிரிகளைச் சோதித்தல், தரை இயல் குறிப்புகளைத் தயாரித்தல் முதலிய பணிகளை மேற்கொண்டனர். சேலம் மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் படிவங்கள் நிலை குறித்தும், இரும்பு உருக்குத் தொழிலுக்கு அவை எந்த அளவில் பயன்படும் என்பது குறித்தும் விரிவான ஆய்வு வேலைகளும் மேற்கொள்ளப் பட்டன.

## சுண்ணாம்புக்கல்

இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சுண்ணாம்புக் கல் படிவங்கள் குறித்தும் சிமிட்டித் தொழிற்சாலைகளுக்கு அவை எந்த அளவில் பயன்படும் என்பது பற்றியும் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகள் மற்றொரு குறிப்பிடத் தக்க சாதனையாகும். இந்த ஆய்வுகள், அளவு மதிப்பீடுகளின் பயனாக சிமிட்டி செய்வதற்குப் பயன்படக் கூடிய சுண்ணாம்புக் கல் படிவங்கள் சுமார் 20 கோடி டன் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதன் தொடர்பாகத் தனியார் துறையில் இரண்டும், பொதுத் துறையில் ஒன்றுமாக மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

அலுமினியம் செய்வதற்கான தாதுப் பொருளான பாக்சைட் வளம் குறித்து விரிவான ஆய்வுகளைத் தொடர்ந்து 75 லட்சம் டன் பாக்சைட் படிவங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. அதன் தொடர்பாக மேட்டூரில் ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் அலுமினியக் கட்டிகள் தயாரிக்கும் திறனுடன் 'மால்கோ' தொழிற்சாலை எற்படுத்தப்பட்டது. ஆண்டுக்கு 20,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக் கூடிய வகையில் இந்தத் தொழிற்சாலை இப்போது விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் சிமிட்டித் தொழிற்சாலைகளின் கூடுதல் தேவையை ஈடு கட்டுவதற்கு உதவக் கூடிய ஜிப்சம் படிவங்கள் 20 லட்சம் டன் அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பீங்கான் பொருட்கள் செய்வதற்குப் பயன்படும் வெங்கச் செங்கல், ஃபெல்ஸ்பார் படிவங்கள் 5 லட்சம் டன் அளவில் உள்ளன.

## ஆய்வுப் பணிகள்

நான்காம் திட்டக் காலத்தில் கனிச் செல்வ வளத்தைக் கண்டறிந்து பயன்படுத்தும் பணிகள், முந்தைய திட்டப் பணிகளின் அடிப்படையில் அமைக்கப் பெற்றன. 1967, 1968, 1969 ஆகிய ஆண்டுகளில் ஆண்டு வாரித் திட்டப் பணிகளின் போது, இதுகாறும் இவ்வகையில் சர்வே செய்யப்படாத பகுதிகளில், குறிப்பாக திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் முறைப்படி கனிவளச் சர்வே வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நான்காவது திட்டக் காலத் தொடக்கத்தில், ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளில் சுண்ணாம்புக்கல், கிராபைட், இரும்புக் கனிகள் ஆகியவற்றைக் குறிவைத்துக் குடைவு வேலைகள் (டிரில்லிங்) நடைபெற்றன. இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தின் சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதிகளில் 3 கோடி டன் சுண்ணாம்புக் கல் இருப்பது தெரியவந்தது. இதன்

தொடர்பாகத் தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலையை அரசினர் ஏற்படுத்தினர்.

சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கண்டறியப் பட்ட உயர்ரகச் சுண்ணும்புக் கல் படிவங்கள் மறு ஆய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டு, உத்தேச, சேலம் உருக்காலைத் திட்டத்துக்காக அப்பகுதிகளை ஒதுக்கி வைக்கவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டத்தில் சிலிமனைட் கணிசமான அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 'சதர்னர் மைன்ஸ் அண்டு மெட்டல்ஸ்' நிறுவனத்தார் அதனை எடுத்துப் பயன் படுத்தி வருகிறார்கள்.

உற்பத்தியான கனிவளங்களின் மதிப்பைப் பொறுத்த வரை 1970-ஆம் ஆண்டில் தமிழ்நாடு இந்தியாவிலுள்ள மாநிலங்களில் 7வது இடத்தை வகித்தது.

## ஐ. நா. வல்லுநர்கள் உதவி

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவில் 1968-ல் தமிழ்நாடு கனிவள அபிவிருத்தித் திட்டம் தொடங்கப் பெற்றது. மாநிலத்தில் புவியியல் ஆய்வுப் பணிகளில் இது மிக முக்கியமான திருப்பம் ஆகும். இந்த திட்டத்தின் கீழ் ஐ. நா. வல்லுநர்கள் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நவீன முறையில் கனிவளங்களை ஆராயும் பணிகளை மேற்கொண்டார்கள். இப்பணி சம்பந்தமான நிபந்தனைக் கிணங்க மாநில அரசினர் 1968லிருந்து 1971 வரை ஆன மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 34·62 லட்சம் நிதி தந்தனர். ஐ நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் ரூ. 78·79 லட்சம் தந்தது. மொத்தத்தில் இத் திட்டத்துக்குச் செலவு ரூ. 105·09 லட்சம் ஆகும். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் 17,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதிகள் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முனைப்பான விரிவான ஆய்வுப் பணிகளுக்கு உள்ளாயின. இந்த சர்வேயையும் தொடர்பான தரைமட்ட வேலைகளையும் தொடர்ந்து, வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை கவுதிமலை காட்டுப் பதியில் பெருமளவில் இரும்புக் கனிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரும்புக் கனிவளம் 1·4 கோடி டன் இருக்கலாமென வல்லுநர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கனிகளில் இரும்பு 40-லிருந்து 44 சதவிகிதம் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. இந்த் இரும்புக் கனிகளைப் பயன்படுத்தக் கூடிய தொழிற்கூடங்களை ஏற்படுத்த இயலுமா என்பது பற்றி விரிவாக ஆராயும்படித் தமிழக அரசினர் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## அணுக்கதிர்க் கனிகள் :

திருப்பத்தூர் வட்டத்தில் மற்றொரு அரிய கனிப்பொருள் கண்டுபிடிப்பும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். உரேனியம், நியோபியம், டான்டலம் ஆகிய கனிச் செறிமானங்கள் அடங்கிய கதிரியக்க பைரோக்ளோர் படிவங்கள் திருப்பத்தூர் வட்டம் சேவத்தூர் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக இந்த அரிய கனிச் செல்வம் குறித்து அணுசக்திக் கமிஷன் விரிவான ஆய்வு வேலைகளை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அரிய கனிப் பொருட்களின் தன்மைகளை உய்த்துணர்வதில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியும் கிடைத்துள்ளது. அட்டாமிக் அப்சார்ப்ஷன், ஸ்பெக்ரோபோட்டோ மீட்டர், எலக்ட்ரோ மாக்னடிக் கருவிகள், காமா கதிரியக்கம் முதலிய விலையுயர்ந்த அரிய கருவிகள் கிடைக்கப் பெற்றுப் பூர்வாங்க ஆய்வுக் கூட வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினர் இந்தக் கருவிகளைக் கையாளுவதில் பயிற்சியும் அளிக்கின்றனர்.

இந்தக் கனிச் செல்வ ஆய்வு குறித்து முனைப்பான வேலைகளில் இரண்டாவது கட்டமாகச் சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதற்கான உதவி கோரப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தில் மேற்கொண்டு 13,000 சதுர மைல் பரப்பில் முனைப்பான ஆய்வு வேலைகள் மேற்கொள்ள வேண்டும் என்பது நோக்கம் ஆகும்.


மற்ற செல்வ வளங்களுக்கும் பூமிக்கடியில் உள்ள கனிச் செல்வ வளத்துக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. கனிச் செல்வத்தை ஒரு தடவை எடுத்துப் பயன் படுத்தி விட்டால் அந்த ஒரே மகசூலுடன் அது தீர்ந்துவிடுகிறது. மீண்டும் மீண்டும் தழைப்பதில்லை கனிச் செல்வம். எனவே இந்தச் செல்வத்தைப் பாங்குடன் பேணுவதும் சேதமில்லாமல், முறையாக எடுப்பதும் அவசியம். விஞ்ஞான பூர்வ முறையில் ஆராய்ந்து இந்தச் செல்வத்தைப் பயன் படுத்துவதும், திறமையான நிருவாக அமைப்பும் இதில் முக்கியமானவை.

—சி. க. ரா.

## ஒன்றுக்குப் பத்து மடங்கு வேலை வாய்ப்பு !

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் உருக்கு உற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உருக்குத் தொழிற்சாலையில் ஒரு நபருக்கு வேலை கிடைக்கிறது என்றால், உருக்கை மூலப் பொருளாகப் பயன்படுத்தும் மற்ற தொழிற்சாலைகள் மூலம் ஏறத்தாழ 10 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பது உண்மை நிலவரம். இந்தத் தொழிற்சாலை வேலைகள் தவிர்த்துச் சுரங்கம், போக்குவரத்து, கட்டுமானம் போன்ற துறைகளிலும் பலருக்கு வேலை கிடைக்கும். நாட்டின் பொருளாதார இயக்கத்துக்கு அளவு கருவியாக இருப்பது உருக்கு உற்பத்தி.

# இந்திய ராக்கெட்டுகள்



இந்தியாவிலுள்ள ராக்கெட் செலுத்தும் நிலையங்கள் அனைத்தும், இந்தியாவில் செய்த ராக்கெட்டுகளையே படிப்படியாகப் பயன்படுத்த வேண்டும் என்னும் புதிய கொள்கையை உறுதியாகக் கடைபிடித்து வருகின்றன. 1972–73-ஆம் ஆண்டில் தும்பா, ஸ்ரீஹரி கோட்டா ராக்கெட் நிலையங்கள் மொத்தம் 107 ராக்கெட்டுகளை வானில் செலுத்தின. இவற்றுள் 59 ராக்கெட்டுகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 224 ராக்கெட்டுகள் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ராக்கெட்டுகள் அளவிலும், தொழில் நுட்பத் தன்மையிலும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இவை ஒவ்வொன்றின் விலையும் 5,000 ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வரையில் வேறுபடுகிறது.

இந்தியாவில் செய்யப்படும் ராக்கெட்டுகள் பல விதங்களில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ராக்கெட்டுகளைவிட மேலாக இயங்குகின்றன. இவற்றின் வடிவமைப்பும், தொழில் நுட்பத் திறனும் தேர்ச்சியடைந்த நிலையில் உள்ளன. இந்தியாவில் செய்யப்படும் ராக்கெட்டுகளில் உள்ள உந்துவிசைச் சாதனங்களும் திறம்பட இயங்குகின்றன.

மேற்கு ஜெர்மனி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற பல நாடுகள் ராக்கெட் செலுத்தும் துறையில் உதவுவதற்காக இந்தியாவுடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

காற்று மண்டலம், அயன மண்டலம் ஆகியவற்றில் கூட்டுப் பரிசோதனை செய்வதற்காக தும்பா ராக்கெட் நிலையத்திலிருந்து பரிசோதனை ராக்கெட்டுகளைச் செலுத்துவது மட்டுமல்லாமல், இந்தியாவில் டெலிவிஷன், தகவல் தொடர்பு அமைப்புகளை மேலும் பரவலாக்குவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் தகவல் தொடர்பு செயற்கைக் கோளைப் பயன்படுத்துவது பற்றி அமெரிக்காவின் உதவியுடன் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.


உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

'ப்ளேனோஃபிக்ஸ்'

தேவை

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோஃபிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோஃபிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புதானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர்
லக்னோ. சென்னை. நியூடெல்லி. பாட்னா.

"ப்ளேனோஃபிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ஏகத் தயாரிப்பு. டிரேடு மார்க்

?—'தமிழரசு' (1-6-73) வெளியீட்டின் வாயிலாக சப்போட்டாவைப் பற்றிப் படித்தேன். கோ. 1 சப்போட்டாக் கன்றுகளை என்னுடைய தோட்டத்தில் நட விரும்புகிறேன். எனவே, எந்த மாதத்தில் நட வேண்டும்? முக்கியமாக சூலை ஆகஸ்டு தவிர இதர மாதங்களில் நடலாமா? கன்றுகள் கிடைக்கும் கும் முழு விலாசமும் தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறே கிறேன்.

—டி. நடராசன்,
ஊராட்சி மன்றத் தலைவர்,
திருப்புடைமருதூர் (அஞ்சல்)
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

விடை.—கோ. 1 சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை சூலை, ஆகஸ்டு மதங்களில் நடுவதே சிறந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்கூறிய மாதங்களில் நட முடியவில்லை எனில் செப்டம்பர் மாதத்திலும் கோ. 1 சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை நடலாம். ஆனால் செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு நடுவது நல்லதல்ல.

கோ. 1 சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பழத் தோட்டத்திலிருந்து அல்லது பல்கலைக் கழக விதை விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாக விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தாங்கள் நிறைய கோ. 1 சப்போட்டாக் கன்றுகள் பெற விரும்பினால் பின்கண்ட முகவரிக்கு எழுதி 'எவ்வளவு முன் பணம் கட்ட வேண்டும்? எப்பொழுது கன்றுகள் கிடைக்கும்? என்பதை தெரிந்து கொள்ளலாம்.





முன் பணம் கட்டிவிட்டு, எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதையும், அருகில் உள்ள புகை வண்டி நிலைய முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதினால், உங்களுக்குத் தேவையான கன்றுகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்வார்கள்.

?—கோ. 6304 கரும்பு பயிரிட்டு நான்கு மாதங்கள் ஆகின்றன. தற்பொழுது தோகை முழுவதும் வெளுத்து விட்டது. 'பெர்ரஸ் சல்பேட்' அடிக்க முடியாத படி வளர்ந்து விட்டது. இதற்கு வேறு வகையில் என்ன செய்யலாம் என்பதை விளக்க வேண்டும்.

—ஆ. சாமுவேல்,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
பூலாம்பாடி,
திருச்சி மாவட்டம்.

விடை:—கரும்புக்குத் தேவையான இரும்புச் சத்து நிலத்திலிருந்து கிடைக்காவிட்டால் தான் கரும்பின் தோகைகள் வெளுத்துக் காணப்படும். இதைக் 'குளோரோசிஸ்' (Chlorosis) என்றும், 'வெண்சோகை' என்றும் கூறப்படுகிறது. இந்த நோய் கரும்பின் வளர்ச்சியையும், மகசூலையும், சர்க்கரைச் சத்தையும் குறைத்துவிடும். 'வெண்சோகை' ஆரம்ப நிலையில் இருக்குமானால் நிலத்திற்குச் சிறிது அளவு அதிகத் தழைச்சத்து இட்டால், இந்நிலை மாறி, தோகைகள் பசுமை நிறமாக மாறக்கூடும். ஏக்கருக்குச் சுமார் 25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 11 கிலோ யூரியா தூவித் தண்ணீர் கட்டவும். தழைச்சத்து இரும்புச் சத்தை விடுவிப்பதால், கரும்பின் தோகைகள் கரும் பச்சை நிறத்திற்கு மாறக்கூடும். இவ்வாறு செய்வதன் மூலம், கரும்புத் தோகைகளின் நிறம் மாறவில்லையானால், இரும்புச் சத்தை நேரடியாகத் தோகைகள் மூலம் கரும்புக்குக் கிடைக்கச் செய்வதே சிறந்தது. இதற்கு 'பெர்ரஸ் சல்பேட்' (Ferrous Sulphate) என்னும் இரசாயன உப்பைத் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும். 'பெர்ரஸ் சல்பேட்' 'அன்ன பேதி' என்னும் விற்பனைப் பெயரில் மருந்துக் கடைகளில் கிடைக்கக் கூடும்.

ஒரு ஏக்கருக்கு 0.5 சத 'பெர்ரஸ் சல்பேட்' மருந்தில் 500 கிராம் எடுத்து 100 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பான் (Sprayer) மூலம் கரும்புத் தோகைகளின் மேல்



தெளிக்க வேண்டும். கரும்பு மிகவும் உயரமாக வளர்ந்திருந்தால், 'ஹை-டிரீ ஸ்ப்ரேயர்' (Hi-tree sprayer) மூலம் எளிதில் தெளிக்க முடியும். இவ்வாறு வாரம் ஒரு முறை வீதம் 2 அல்லது 3 முறை தெளித்தால் கரும்பின் தோகைகள் கரும் பச்சை நிறமாக மாறிவிடும்.

உங்கள் பகுதியில் உள்ள துணை வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்களையோ உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ அழைத்துச் சென்று தங்கள் கரும்பைக் காட்டி, வெண்சோகையினால் தங்கள் கரும்பு தாக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினால், அதன்பின், 'பெர்ரஸ் சல்பேட்' தெளிப்பதே நல்லது.



**?** —எங்களுடைய கிணற்றில் ஆள் உயரம் வேலம்பாசி வளர்ந்து தண்ணீரின் இயல்பை வேறுவித வாசனையாக்கி உள்ளது. இதனால் பயிர் பாதிக்கப்படுகிறது என்று நினைக்கின்றேன். இதைப் போக்க வழி என்ன ?

—எஸ். சீராமுலு,
மட்டத்தாரி கிராமம்,
ஆரணி வட்டம், வட
ஆர்க்காடு மாவட்டம்.


**விடை:**—தங்களுடைய கிணற்றில் உள்ள வேலம்பாசியினால், தண்ணீரின் நிறம் பசுமையாக மாறிவிடுவதுடன், சுவையும் மாறிவிடும் ! இதனால் பொதுவாகப் பயிர்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் வேலம்பாசியின் துண்டுகள் இறைக்கப்படும் தண்ணீருடன் வெளியில் வந்து நிலத்தில் படிந்தால், அவை எளிதில் வேரூன்றி நிலத்தில் பரவக்கூடும். ஆகவே கிணற்றில் உள்ள வேலம்பாசியை அகற்றிவிடுவதே நல்லது.

தங்கள் கிணற்றிலுள்ள வேலம் பாசியை அகற்றக் கிணற்றுத் தண்ணீரை நன்கு இறைத்து விட்டுக் கிணற்றில் உள்ள பாசியை அகற்றிவிட வேண்டும். கிணற்றின் சுவர்களைத் தேய்த்துச் சுத்தமாக வைத்திருந்தால் பாசிகள் முளைக்காது. கிணற்றுத் தண்ணீரை இறைத்து சுத்தமாக வடிக்க முடியாதெனின், கிணற்றில், மூழ்கி வேலம் பாசியை அரித்து எடுத்து விடலாம். அப்படி அரித்து எடுக்க முடியவில்லை எனில், கிணற்றுத் தண்ணீரில் மயில் துத்தத்தைக் கலக்க வேண்டும். கிணற்றுச் சுவரின் பக்கங்களை நன்கு சுத்தம் செய்தபின்பு, பத்து இலட்சம் பங்கு தண்ணீருக்கு அரைப்பங்கு மயில்துத்தம் என்ற அளவில் கலக்க வேண்டும். மயில் துத்தத்தை சிறுசிறு மூட்டைகளாகத் துணியில் கட்டிக் கிணற்றில் போட்டுவிட வேண்டும். ஒரு வாரத்தில் பாசி இறக்கவில்லை எனில், மீண்டும் ஒரு முறை மயில் துத்தத்தை மேற் குறிப்பிட்டவாறு கணக்கிட்டு எடுத்துக்கொண்டு துணியில் சிறுசிறு முடிச்சுகளாகக் கட்டிக் கிணற்றுநீரில் போடவும்.



குறிப்பிட்ட அளவிற்கும் அதிக அளவில் மயில்துத்தத்தைப் போட்டால், கிணற்றில் உள்ள மீன்கள் இறந்துவிடும். அத்துடன் கிணற்று நீரின் சுவையும் மாறிவிடும். அது கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடும். எனவே, மயில் துத்தம் போட்ட பிறகு, கிணற்று நீரை மனிதர்களோ, கால்நடைகளோ குடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மயில் துத்தத்தைக் கிணற்று நீரில் கலந்து வேலம் பாசியையும், இதர பாசிகளையும் அழித்து விடலாம்.






**?** —நான் கோழிப் பண்ணை ஒன்று வைக்க உத்தேசித்துள்ளேன். அதற்கு நான் எங்குக் கடன் வசதி பெற விண்ணப்பிக்க வேண்டும் ? வழி முறைகள் என்ன என்பதைத் தெரிவித்தால் பயனுடையதாய் இருக்கும்.

—வே. ந. உலகநாதன்,
31, காந்தி ரோடு, காமராஜ் நகர், சீனிவாச நகர், (அஞ்சல்), தாம்பரம்.

**விடை:**—தங்களுக்குக் கோழிப் பண்ணை வைப்பதற்காகத் தாம்பரத்தில் உள்ள 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா' கடன் கொடுத்து உதவும். அவ்வங்கி தாம்பரம் அருகில் உள்ள அஸ்தினபுரம் என்ற ஊரில் உள்ள பலருக்குக் கோழிப் பண்ணை அமைக்கக் கடன் கொடுத்துள்ளது. கடன் பெறுவதற்குரிய மனு, வழி முறைகள் ஆகியவைகளைப் பற்றித் தாம்பரம் ஸ்டேட் பாங்கியில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் அருகாமையில் உள்ள 'பேங் ஆப் பரோடாவும்' கோழிப் பண்ணை அமைக்கக் கடன் கொடுத்து வருகிறது. நீங்கள் அவ்வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று வங்கியின் முகவரைச் (Agent) சந்தித்து விவரம் கேட்டால், அவர் விவரம் கூறி உதவுவார்.

—எனக்கு ஒரே இடத்தில் 2 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. அதில் தென்னம் பிள்ளையும், கொய்யாவும் வைக்கலாம் என்று இருக்கின்றேன். இதற்கு யாரிடம் கடன் வாங்க மனுச் செய்ய வேண்டும்? எவ்வளவு பணம் கடனாக கிடைக்கும் என்ற விவரத்தினையும், பம்பு செட் வைத்தால் அதற்கும் யாரிடம் கடன் வாங்க மனு செய்ய வேண்டும் என்ற விவரத்தினையும், தனிப்பட்ட நபர் என்ற முறையில் எவ்வளவு பணம் கடனாகக் கொடுப்பார்கள் என்ற விவரத்தினையும் தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் 2 ஏக்கர் புன்செய் நிலத்தில் அதிகச் சிரமம் இல்லாமல் அதிக இலாபம் தரும் பயிர்கள் என்னென்ன பயிரிடலாம் என்ற விபரத்தினையும், தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பால்மாடுகள் வாங்குவதற்குத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பணம் கடனாகக் கொடுப்பார்களா என்ற விவரத்தினையும் தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.!

—எஸ். நாராயணசாமி,
1164, கீழ இராச வீதி,
தஞ்சாவூர்.

விடை.—புதிதாகத் தென்னந்தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை மூலம் ஏக்கருக்கு ரூபாய் 300 வீதம் நீண்ட காலக் கடன் பெறலாம். அதுபோலவே புதிதாகக் கொய்யாப் பழத் தோட்டம் ஏற்படுத்துவதற்கும் ஏக்கருக்கு ரூபாய் 300 வீதம் வேளாண்மைத் துறை மூலம் கடன் பெறலாம். இக்கடனைப் பெறத் தஞ்சாவூரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்கு மனுச்செய்ய வேண்டும். அதற்குரிய மனுவை அவருடைய அலுவலகத்திலிருந்தே பெற்றுக் கொள்ளலாம். தென்னையையும், கொய்யாவையும் தனித்தனியே வைப்பதென்றால் தான் கடன் கொடுப்பார்கள். இரண்டையும் இணைத்துப் பயிரிடக் கடன் கொடுக்க மாட்டார்கள். கடனில் ஒரு பகுதி கன்றுகளாகாவும் மீதம் பணமாகவும் கொடுக்கப்படும்.


பம்பு செட் வைக்கத் தங்கள் அருகாமையில் உள்ள நிலவள வங்கியில் கடன் பெறலாம். ரூபாய் 4,500 வரை கடன் பெற முடியும்.

புன்செய் நிலத்தில் அதிகச் சிரமம் இல்லாமல், அதிக இலாபம் தரும் பயிர்கள் என்னென்ன பயிரிடலாம் என்று கேட்டுள்ளீர்கள்.. புன்செய் நிலத்தில் சிரமப்பட்டால்தான் அதிக இலாபம் பெறமுடியும். சிரமப்படாமல் எந்த நிலத்திலும் அதிக இலாபம் எடுக்க முடியாது. தங்கள் புன்செய் நிலத்தில் நன்கு பாடுபடுவீர்களேயானால் 2 போகம் பயிரிட்டு நல்ல இலாபம் பெறலாம். ஆனி, ஆடி மாதங்களில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழையைக் கொண்டு டி. எம். வி. 7 அல்லது டி. எம். வி. 10 ரக நிலக்கடலையைப் பயிரிடலாம். நிலக்கடலையில் 6 அல்லது 8 அடி இடைவெளியில் சாலை சாலையாக எஸ். ஏ. 1 துவரையைப் பயிரிடலாம். ஐப்பசியில் நிலக்கடலை அறுவடை முடிந்துவிடும். அதன் பின் துவரை வரிசை வரிசையாக நிற்கும். கார்த்திகை மழையில் துவரை வரிசைகளின் இடையே 'பைசாகி மூங்' என்னும் பச்சைப் பயறு அல்லது பனிப்பயறு அல்லது கொள்ளு விதைத்து இலேசாக உழுதுவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் துவரையுடன் பயறு அல்லது கொள்ளும் பலன் தரும்.

தென்மேற்குப் பருவ மழையின் உதவி கொண்டு ஆனி, ஆடி மாதங்களில் புன்செய் நிலங்களில் மானாவாரி கொத்து நிலக்கடலை அல்லது சூரிய காந்தி பயிரிட்டால் ஐப்பசியில் அறுவடைக்கு வந்துவிடும். அதன்பின் பெய்யும் வட கிழக்குப் பருவ மழையைக் கொண்டு மானாவாரியாக எச். பி. 3 கம்பு பயிரிடலாம்.


எனவே, முயற்சியும், உழைப்பும் இருக்குமானால் புன்செய் நிலங்களிலும் இரு போகம் பயிரிட்டு அதிக இலாபம் பெற முடியும்.

நாட்டுடமையாக்கப் பட்ட வங்கிகளும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் பால் மாடுகள் வாங்குவதற்குக் கடன் கொடுத்து உதவுகின்றன. தாங்கள் ஏதேனும் ஒரு வங்கிக்குச் சென்று விவரம் தெரிந்து கொண்டு மனு செய்வதே நல்லது.




—அன்பார்ந்த 'தமிழரசு' ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்! தங்களது பத்திரிகையில் டாக்டர் பா. சின்னத்துரை என்பவர் கோழிப் பண்ணை பற்றி எழுதியிருந்த கட்டுரையைப் படித்தேன். நான் வெகு நாட்களாகக் கோழி வளர்ப்புப் பற்றி ஆலோசித்து வருகின்றேன். தற்சமயம் கோழிப் பண்ணை துவங்க விரும்புகின்றேன். எனது இருப்பிடம் குரோம்பேட்டை. தயவுசெய்து இதற்காக யாரிடம் ஆலோசனை பெறவேண்டும் என்பதையும், எந்த அலுவலர் கோழிப்பண்ணை வைக்க ஏற்பாடு செய்வார், அவருடைய அலுவலகம் எங்குள்ளது போன்ற விவரங்களைத் தெரிவிக்குமாறு கோருகிறேன்.

—திருமதி உமேஸ்வரி
இராம மூர்த்தி,
6, சம்பந்தன் தெரு,
பாரதிபுரம், குரோம்
பேட்டை, சென்னை-44.




விடை:—தாங்கள் கோழிப் பண்ணை அமைக்க விரும்பினால், தங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கால்நடை வளர்ச்சி அலுவலர் (Extention office for Animal Husbandry) அவர்களது உதவியை நாடலாம். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் (Veterinary Assistant Surgeon) அவர்களது ஆலோசனையையும், உதவியையும் பெறலாம்.

தங்களது இருப்பிடம் குரோம் பேட்டை என்பதால், தாங்கள் சிட்லபாக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்கள் உதவியைப் பெறலாம். அவர் மூலமாகவே கால்நடை உதவி மருத்துவர் உதவியையும் பெறலாம்.

—ஆர்.எம்





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI

டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்புகளுக்கும். கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும் : தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
''அருள்மனை'', 26: ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600014

5

# உலகை இரண்டு கிளைகள்

## முத்தையா என்னும் முள்வேலி!

ஏ. என். சுப்பிரமணியன்

உலகத்தில் மிகவும் எளிதாகக் கிடைக்கக்கூடிய ஒன்று அறிவுரை. இதற்கு அடுத்தபடியாக ஆறுதல் வார்த்தைகள்தாம்! ஆறுதல் கூறும் கலை, ஆலைமுதலாளி முத்தையாவுக்குக் கைவந்த கலைக்குள் முதற்கலையாகும். ஆபத்துக்குக் காரணமே தாம்தான் என்பதை அவரே அடியோடு மறந்துவிட்டு, வெகு அழகாக ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வீசிக் கொண்டிருப்பார்.

அருவிச் சிரிப்புச் சிரிப்பார். டாக்டர் நர்மதாவின் அறைக்குள் முத்தையா வந்துநின்றபோது, அவர் மடிநிறையப் பணம். மனம் நிறையப் பாசாங்கு.. இதனை டாக்டர் நர்மதாவும் நன்றாக உணர்ந்துதான் வைத்திருக்கிறாள். அவரைப்போல் போலிப் புன்னகையைக் காட்டவோ, பொய்யாக உருகிக் கரையவோ நர்மதாவுக்குத் தெரியாது; தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதையும் அவள் விரும்பியதும் இல்லை. . . . இருந்தாலும் மனப்புயலை வெளிக் காட்டிக் கொள்ளாமல், மிகுந்த சிரமத்துடன் குமுறலை அடக்கிக் கொண்டு முத்தையாவை—அந்த மருத்துவமனைக்குச் சொந்தக்காரர்—தனக்கு முதலாளி என்ற ஒரே மரியாதையுடன்-எழுந்து நின்று இருகரங் குவித்து வரவேற்கிறாள்.

"விபத்துக்களை நம்மால் தடுக்க முடியாது . . . . ஆனால் விபத்தைத் தொடர்ந்து வரும் வேதனைகளை ஓரளவு நம்மால் தணிக்க முடியும்!" என்று பேசியபடி வருகிறார் முத்தையா.

சிற்றுணர்வு மிக்கவர்கள் வெண்கலம்போல் ஓசை செய்வதும், முற்றுணர்வு மிக்கவர்கள் தங்கம் போன்று ஓசை உண்டாக்காமல் இருப்பதும் உலக இயல்பு.

பெரும் சிலுசிலுப்புடன் பேசியவர் முன்னால் ஓசை உண்டாக்கப் பயந்தவள் போன்று நின்றாள் டாக்டர் நர்மதா.

முத்தையாவின் கூற்றுக்கு என்ன மறுமொழி கூறினாலும் அது நியாயத்திற்குப் புறம்பாகத்தான் போய் முடியும் என்பதை நர்மதா நன்கறிவாள். அதனாலேயே அவள் எதுவும் கூறாமல் அமைதியாக நிற்கிறாள்.

"அடிபட்ட பெண் அஞ்சலையை நான் பார்க்கலாமா டாக்டர்?" என்று மிகுந்த அக்கறையுடனும், அளவுக்கதிகமான பணிவுடனும் வினவுகிறார் முத்தையா. அவர் குரலில் இருப்பது பரிவா பரிகாசமா? டாக்டர் நர்மதாவால் இனங்காண முடியவில்லை.

வஞ்சகமுள்ளவர்கள், தாமரைபோல மலர்ந்து பேச முடிகிறது. பேச்சிலும் சந்தனமன்ன குளுமை. மனமோ வெட்டும் கத்தரிக்கோல்!

அஞ்சலையை நான் பார்த்து ஆறுதல் சொல்ல வேண்டும்" என்று மீண்டும் கூறுகிறார் முத்தையா.

"அஞ்சலை அதனை விரும்புகிறாளா என்பதைத் தெரிந்து கொள்ளலாமே" என்று சுடச்சுடக் கேட்டுவிடத் துடிக்கிறது நர்மதாவின் உள்ளம். ஆனால் அவள் கற்ற நாகரிகம் அதனைத் தடுக்கிறது. பண்பாடு பம்மிக் கொள்ளுகிறது.

"உங்கள் பொறுப்பிலிருக்கும் நோயாளியைத் தொந்தரவு செய்வது, டாக்டரம்மாவான உங்களுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது" என்று மறுபடியும் கேட்கிறார் முத்தையா.

நம்பிக்கை வைக்க மறுக்கும் குணமுடைய முத்தையாவிற்கு ஆயிரம் விளக்கங்கள் சொன்னாலும் பயன் இல்லை.

எனவே,

"போய்ப் பார்க்கலாம் வாருங்கள்" என நர்மதா அனுமதி கொடுத்து அவரை அழைத்துச் செல்ல ஆயத்தமானாள். அதற்குள் அஞ்சலையின் மகள் கனகாம்பரம் "கும்பிடறேனுங்க முதலாளி" என்று உடலையே பாதியாகக் குறுக்கி வளைந்து வணங்கியபடி அறைக்குள் வந்து நிற்கிறாள்.

"இவள் அடிபட்ட அஞ்சலையின் மூத்தமகள்—பெயர் கனகாம்பரம் . . . . இனிமேல் அந்தக் குடும்பத்தைத் தாங்கப் போகிற பொறுப்பு இவளுக்குத்தான்" என்று அனுதாபத்தைத் தூண்டும் வகையில் . . . . அறிமுகம் செய்துவைக்கிறாள் நர்மதா.

காட்டுமல்லிச் செடிபோல், வனப்பும் வாளிப்புமாக வளர்ந்து நிற்கும் கனகாம்பரம், முதலாளியின் கருணையை முழுமையாகப் பெறத் துடிக்கிறாள்! இதை நர்மதா ஒரு நொடியில் உணர்ந்து கொள்கிறாள். "இன்னார் இன்ன குணம் என்பதை இனங்காண இப்படி ஒரு விபத்தும் விபரீதத் திருப்பங்களும் தேவைப்படுகின்றனவா? 'அட கடவுளே!' என்று வேதனையும் விவேகமும் கலந்து நர்மதாவின் நெஞ்சில் முள்ளாய்த் தைக்கிறது.

"கவலைப் படாதே! குழந்தை . . . . உன் அம்மாவைக் காப்பாற்றி முன்போல் தெம்பும் திடமுமாக நடக்கவைத்து-விடுவதாக டாக்டரம்மா உறுதி கொடுத்திருக்கிறாள். உன் அம்மாவைக் காப்பாற்றுவது டாக்டரம்மாவின் பொறுப்பு"

என்று ஆறுதல் கூறுகிறார் முத்தையா.

அவரது குரலிலே அன்பின் அலைகள்; சொற்களில் சொந்தம் கொண்டாடும் உரிமை. அன்பை அடைக்கலமாகத் தருகின்றவர் போன்று அத்தனை குழைவுடன் பேசினார்.

கனகாம்பரம் சொல்லுவாள்:

"எங்க அப்பாவைக் காப்பாத்துறது உங்க வக்கீலய்யாவோட பொறுப்பு....இல்லிங்களா முதலாளி....?" என்று மிகுந்த கவலையோடும் பணிவோடும் கேட்கிறாள்.

"கண்டிப்பாகக் காப்பாற்றி விடலாம் பெண்ணே....என்னவோ, உன் அப்பாவுக்குக் கெட்ட காலம். இப்படி ஒரு விபத்து நடந்து போய்விட்டது...." என்கிறார் முதலாளி முத்தையா.

டாக்டர் நர்மதாவுக்கு ஒரு பொன்மொழி நினைவிற்கு வந்தது. விஷமுள்ள பாம்பிடம் மாணிக்கம் இருக்குமாம். இவரிடம் எத்தகைய ஒளி படைத்த சொற்கள் அடங்கிக் கிடைக்கின்றன! இந்த நினைவால் உடல் நடுங்கியது. சமாளித்துக் கொண்டாள்.

"அஞ்சலையைப் பார்க்க வேண்டாமா முதலாளி?" என்று முத்தையாவை அவசரமாக அங்கிருந்து அழைத்துப் போகிறாள் டாக்டர் நர்மதா.

முத்தையாவின் போலி நாடகத்தை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருக்கும் பொறுமை அவளுக்கு இல்லை...

செண்பகா மில்லின் தொழிலாளர் நல மருத்துவ மனையில் அஞ்சலை படுத்திருக்கும் தனியறைக்குள்—

ஆலை முதலாளி முத்தையா, ஆறுதலும் அனுதாபமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு முந்திவர, நர்மதாவின் துணையுடனும் கனகாம்பரத்தின் கரங்குவித்த வரவேற்புடனும் வந்து நிற்கிறார். அரைகுறை நினைவோடு கண்விழித்தபடி படுத்திருக்கும் அஞ்சலை, முதலாளி வந்து நிற்பதை உணர்ந்ததும் எழுந்து, தன் மரியாதையைத் தெரிவிக்க முயலுகின்றாள். அஞ்சலையின் அருகே நிற்கும் நர்ஸ் தங்கம் அவளை எழுந்திருக்க விடாமல் கட்டிலோடு சேர்த்து இருத்திப் படுக்க வைக்கிறாள்..

கட்டிலின் மறுபக்கம் காவலர் துணையோடு சண்முகம் வந்து நிற்பதை முதலாளியும்

## யாழ் வகைகள்

பண்டைத் தமிழகத்தில் 5 வகையான யாழ்கள் புழக்கத்தில் இருந்தன. அவை ஆதியாழ், பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்பன.

ஆதியாழ் 100 நரம்புகளையும், பேரியாழ் 21 நரம்புகளையும், மகர யாழ் 19 நரம்புகளையும், சகோட யாழ் 14 நரம்புகளையும், செங்கோட்டி யாழ் 7 நரம்புகளையும் கொண்டு விளக்கின.



சாமி...

கவனிக்கவில்லை, அஞ்சலையும் கவனிக்க முடியவில்லை.

"இந்தாம்மா....அஞ்சலை....நீ உன் குடும்பத்தைப் பற்றியோ குழந்தைகளைப் பற்றியோ எந்தவிதக் கவலையும் கொள்ளக் கூடாது.... என்னை உன் குடும்பத்தில் ஒருவனாக நினைத்துக்கொள்.. உன் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைத் தயங்காமல் என்னிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் நான் செய்யும் செயலை உதவி என்று கூடச் சொல்ல முடியாது. தானுண்ட நீரைத் தலையால் தருவது தென்னை மரம். அது நீண்ட நெடுங்காலம் உதவி செய்து கொண்டே இருக்கும் என்னைத் தென்னை மரமாக நினைத்துக் கொள்" என்று பரிவுடன் கூறுகிறார் முத்தையா.

"நீங்கள் மகராசனா இருக்கணும் முதலாளி, வாழையடி வாழையாய்!" என்று வாழ்த்துகிறாள் அஞ்சலை.

"அஞ்சலை! வாழையல்ல நான்; பலநாள் உதவி செய்தால், ஒரே தடவை பலன் தருவது வாழை. நான் தென்னை மரமாக நின்று நீடூழி உதவி செய்வேன். என்னுடைய பணியாள், என் காரோட்டி செய்துவிட்ட குற்றத்தால் உன் குடும்பம் அவதிப்படக் கூடாது."

"இந்தக் குடும்பமே குற்றம் செஞ்சவரோட குடும்பந்தானுங்களே!" என்று கண்ணீர் வடிக்கிறாள் அஞ்சலை.

டாக்டர் நர்மதா குறுக்கிட்டு "ம்..அழக்கூடாது...அலட்டிக் கொள்ளக் கூடாது....இதோ பார்......அஞ்சலை, உன்னைப் பார்க்க வந்திருக்கிறார் பார்...." என்று அவள் கவனத்தை மறுபக்கம் திருப்புகிறாள்.

"அவரு வந்திட்டாருங்களா....?" என்று ஆவலுடன் தலையைத் திருப்புகிறாள் அஞ்சலை. கணவனுக்கும் மனைவிக்குமிடையே மௌனப் பார்வைகள் பாலமாய் அமைகின்றன. பாசக் கயிறாக முறுக்கேறுகின்றது.

விபத்தின் அதிர்ச்சியும் அதைத் தொடர்ந்த வேதனைகளும் சேர்ந்து அஞ்சலையின் உடல் நலத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றனவே என்ற கவலை டாக்டர் நர்மதாவின் இதயத்தில் சூழ்ந்திருக்கின்றது. ....நிரபராதியும் குற்றவாளியும் நேருக்கு நேர் சந்திக்கும் நேரத்தில் பாதிக்கப்பட்ட நபரின் உணர்வின் வேகங்கள்.. உள்ளக் குமுறல்கள் அவள் உடல் நலத்தை மேலும் பாதித்துவிடப் போகின்றனவே என்ற வேதனையும் அவள் மனத்துள் குமிழிவிடுகின்றது.

முதலாளி முத்தையா தம் கடமையை முடித்துவிட்டுப் புறப்படத் தயாராக நிற்கிறார். பண உதவி, மருத்துவ உதவி, சட்ட உதவி என்னும் ஆசை வலைக்குள் அக்குடும்பத்தினைப் பறவைகளாக்கிப் பிடித்துக் கொண்டு போகும் வேடனைப் போல நிற்கிறார்.

"டாக்டரம்மா.......இந்த அம்மாள் உடல்தேறி எழுந்து நடமாட எத்தனை நாட்களானாலும் நாங்கள் தனிபட்ட முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் அவர்கள் குடும்பத்துக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் என் மகள் செண்பகத்தை அனுப்பிச் செய்துதரச் சொல்லியிருக்கிறேன்....அஞ்சலை உடல்தேறி எழுந்ததும், நம்முடைய ஆலையிலேயே ஒரு வேலையும் போட்டுத்தர ஏற்பாடும் செய்துவிடுகிறேன்.... என்ன அஞ்சலையம்மா...

உங்களுக்குத் திருப்திதானே?'' என்று அக்கறையோடு கேட்கிறார் முத்தையா.

''எங்க ஆயுசுக் காலம் வரைக்கும் உங்க பெரிய மனசையும் பெருந்தன்மையையும் மறக்கவே மாட்டோம் முதலாளி....'' என்று கை குவிக்கிறாள் அஞ்சலை....






## பண்டைத் தமிழகத்துத் தலைநகர்கள்

புகார்: (காவிரிப்பூம்பட்டினம்) சங்க காலச் சோழ மன்னர்களின் முதல் தலைநகர்.

மதுரை: சங்க காலம் முதல், பாண்டிய மன்னர்களின் தலைநகர்.

தஞ்சை: விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அங்குச் சோழப் பேரரசை கி.பி. 850–ல் நிறுவினான். தஞ்சை, மூன்றாம் இராஜ ராஜன் காலம்வரை சோழர் தலைநகராய் விளங்கியது.

கங்கை கொண்ட சோழபுரம்: முதலாம் இராஜேந்திரன் கங்கை வரை வெற்றி கொண்டு, கங்கை கொண்ட சோழபுரத்தை ஏற்படுத்தி அதைத் தலைநகராக்கினான். அதிலிருந்து, சோழப் பேரரசின் தலைநகராக அது விளங்கியது.

சண்முகம் என்ற காரோட்டி—சண்முகம் என்ற நன்றியின் சின்னம் அந்த அறைக்குள் நிற்பதை முத்தையா உணர்ந்த தாகவே காட்டிக்கொள்ள வில்லை. பஞ்சாலையின் முதலாளி இதயம் பஞ்சினைப்போல் மென்மையாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லையே! அதற்குள் இரும்பின் உறுதியும் எஃகின் கடினமும் இடியின் வலிமையும் இருக்கலாமே!

அறையை விட்டு முத்தையா அப்பால் போனவுடன்—ஒரு வினாடி தயக்கத்திற்குப் பிறகு சண்முகமும் சரேலென வெளியேறி வருகிறான்.

அஞ்சலைக்கு அதிர்ச்சி.... நர்மதாவுக்கும் நர்ஸ் தங்கத்திற்கும் வியப்பு. மனைவியைக் காணவந்தவன் அனுதாபக் கண்ணீர் சிந்தாமல், ஆறுதல் வார்த்தை கூறாமல், அன்னியனைப்போல் எப்படி வெளியேறிவிட முடியும்? கணவனின் பாசமும் பந்தமும் அவ்வளவு பலவீனப் பட்டுப்போய் விடக் கூடிய அளவுக்கு அஞ்சலை என்ன பாவம் செய்துவிட்டாள்....?

சண்முகத்தின் போக்கிற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக, அவனைத் தொடர்ந்து விரைந்து வருகிறாள் நர்மதா.

மருத்துவமனை வராந்தாவின் மறுகோடியில் நடந்து போய்க்கொண்டிருக்கும் சண்முகம், டாக்டர் நர்மதா தன்னைத் தொடர்ந்து வருவதை உணருகிறான். கால்கள் தாமாக நிற்கின்றன.

''சண்முகம்....ஒரு விநாடி டாக்டர் அறைக்குள் வந்து விட்டுப் போ....'' என்று அழைக்கிறாள் நர்மதா.

''மன்னிக்க வேண்டும் டாக்டரம்மா....'' என் மனைவியின் முகத்தின் விழிக்க எனக்கு விருப்பமில்லை!'' என்று மூர்க்கமாக வர மறுக்கிறான் சண்முகம்.

''உன் மனைவியைப் பார்க்க நீ போவதும் போகாததும் உன் சொந்த விருப்பம். நான் உன்னிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கவேண்டும். அதற்காகத் தான் என் அறைக்கு வரும்படி உன்னைக் கூப்பிடுகின்றேன்'' என்று கூறிவிட்டுக் காவலரின் அனுமதிக்காகக் காத்திருக்கிறாள் நர்மதா.

''வருகிறேன் டாக்டரம்மா....'' என்று பணிவுடன் அறைக்குள் வந்து நிற்கிறான் காரோட்டியான சண்முகம்.

'சண்முகம் — உன்னைப் பார்க்க வேண்டும். உன் குரலைக் கேட்க வேண்டும் என்று உன் மனைவி எப்படித் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள் என்பது மற்றவர்களைவிட எனக்குத்தான் நன்றாகத் தெரியும்....''

''அத்தனையும் நாடகம் டாக்டரம்மா. என்மேல் உண்மையான அக்கறை இருந்தால் நான்தான் அவள்மீது காரை ஏற்றினேன் என்று வாக்குமூலம் கொடுத்திருப்பாளா?'' என்று புலியாய் உறுமுகிறான் சண்முகம்.

''அடப்பாவி – அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என்பதை நான் விளக்குகிறேன்...'' என்று நர்மதா ஆரம்பம் செய்தாள்.

அதற்குள் சண்முகம் பொறுமை அற்றவனாகிப் படபடப்புடன், ''மன்னிக்க வேண்டும் டாக்டரம்மா.... இரண்டு நாட்களாக எங்களுக்குள் மனத்தாங்கல் இருந்தது உண்மை...! மூத்த மகளுக்குக் கல்யாணம் பண்ணக் கூடத் துப்பில்லை' என்று அவள் என்னைக் குத்திக் காட்டியதால், நான் கோபப்பட்டதும் உண்மை. ஆனால் அதற்காகக் கார்விபத்து வழக்கில் அவளே என்னைக் குற்றவாளியாக்கி வாக்குமூலம் கொடுத்து வஞ்சந் தீர்த்துக் கொள்வாள் என்பதை நான் கனவிலும் நினைக்கவில்லை. இப்படி ஒரு வேஷக்காரியுடன் குடும்பம் நடத்துவதைவிடச் சிறைச் சாலைக் கொட்டிலைக் குடும்பமாக ஒப்புக் கொள்ளுவது மேலான காரியம். நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கண்ணிமைக்கும் நேரத்தில் அறையைவிட்டு – ஏன், மருத்துவ மனையைவிட்டே வெளியேறிப் போகிறான் சண்முகம்.

நர்மதா கல்லாய்ச் சமைந்து நிற்கிறாள்.

கணவனே வலியச் சென்று குற்றத்தை ஏற்றுக் கொண்டிருப்பதால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று நம்பித்தானே அஞ்சலை அதையே தன் வாக்குமூலத்திலும் கூறியிருக்கிறாள். கணவனின் கருத்துக்கு முரணாகக் கூறக் கூடாதே என்றுதானே நெஞ்சு வெடிக்கக் கூடிய சோகத்தையும் தாங்கிக் கொண்டு, ''என் கணவன் தான் குற்றவாளி'' என்று எழுதிக் கையெழுத்திட்டும் கொடுத்தாள்? அவளுடைய நேர்மையைப் புரிந்துகொள்ள தெரியாமல் சண்முகம் அவளுடைய நோக்கத்திற்கே களங்கம் கற்பித்துப் பேசிவிட்டுப் போகிறானே....

அட ஆண்டவனே! ஆலை முதலாளி முத்தையாவின் அஜாக்கிரதையினால் இங்கே இரண்டு இதயங்களுக்கிடையே பெரும் பிளவு விழுந்து விட்டதே, முத்தையா என்னும் இந்த முதலாளி முத்தையா என்னும் இந்த முள்வேலி இன்னும் எத்தனை எத்தனை இதயங்களைக் கூறு போடப் போகிறதோ!

## 6

# அன்பின் கவசங்கள்

அன்பை விதைத்து அமைதியை அறுவடை செய்பவள் ராதை. எத்தனை யுகங்களானாலும் வற்றாமல் வளங் கொழிக்கும் விளைநிலம் அவள் இதயம். பண்பட்ட அந்த இதயமும் அவள் தந்தை பாண்டித்துரை விட்டுச் சென்ற ஒரே சொத்து!

தன்னுடைய அமைதியை விட, தன்னைச் சுற்றியுள்ளவர்களின் மன நிம்மதியையே பெரிதும் விரும்பும் இயல்பு கொண்ட ராதைக்கு, கார் விபத்துக் காரணமாகக் கணவன் – மனைவிக்குள் கருத்து வேறுபாடு பிறந்திருப்பதை அறிந்ததும் வேதனை அதிகரிக்கின்றது. அதுவும் மற்றவர் இதயம் நோகக் கூடாதே என்பதற்காக ஒத்த கருத்துக்களைத் தெரிவிக்கப் போய் அதுவே கணவன் மனைவி 'இருவருக்கும் காலனாக வந்துவிட்டதே என்பதால் அவளுடைய பரிவிரக்கம் பன்மடங்காகிறது.

ராதையை மிகவும் அதிகமாகப் பாதித்த விஷயம், இந்த விபத்து-இதனைத் தொடர்ந்து பிறந்துவிட்ட வழக்கு – இவ்விரண்டின் காரணமாக நர்மதா – மணிவாசகன் இருவருக்கும் அதிகப்படியான வேலையும் அளவுக்கு மீறிய மன வேதனையும் வந்துவிட்டதே என்பதுதான்...!

கணவன் வக்கீல், மனைவி டாக்டர். கண் நிறைந்த உருவங்கள்; கை நிறையச் சம்பாத்தியம்; கௌரவமான வாழ்க்கை என்ற கணக்குகளுக்கும் அப்பால் தொழிற் பிணக்குகளுக்கும் இந்தக் குடும்பத்தில் இடங் கொடுத்துவிடக் கூடுமே என்ற பயம் அவளைப் பற்றிக் கொள்கிறது! அனுசரித்துக் கொண்டு போகிற இதயங்களாக இருந்தால் அந்த அளவுக்கு ராதையின் பொறுப்பும் கவலையும் குறையும்...! இந்த இரண்டு இதயங்களுமோ... தமக்குத் தாமே இடையூறாக நிற்கும் வீம்பு படைத்தவை.

குதிரைச் சவாரியில் தொடங்கிக் கொள்கைப் பிரச்சினை வரையில் வீம்பு பிடித்து வெற்றிக்குப் போட்டியிடுகின்ற வக்கிரங்கள்...!

அமைதிக்குரிய வழியைப் போற்றி அறியாத இதயங்கள்.

நர்மதா இப்போது நிறை மாதக் கர்ப்பிணி. புதிய உயிர் ஒன்றை உலகத்திற்கு அறிமுகப் படுத்தபோகும் பெருமையைச் சுமந்தபடி தன் தொழிற்பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறாள்.

மருந்தகத்தில் நோயாளிகளின் உடல் வேதனைகளுடன் அவர்களது மன உளைச்சல்களையும் தீர்த்து வைக்கும் பொறுப்பைத் தானாக வலிய ஏற்றுக் கொண்டிருப்பவள் டாக்டர் நர்மதா. கார் விபத்தில் சிக்கி மருத்துவமனைக்குள் வந்த அஞ்சலை, உடல் நன்றாகத் தேறி நடமாடும் தெம்பும் பெற்று வீட்டுக்குப் போவதற்குள், நர்மதாவின் இதயத்துள் 'தனியான இடத்தைப் பெற்று விட்டிருந்தாள்.

அஞ்சலையின் மேல் பிறந்த அன்பு, அனுதாபத்தின் அடிப்படையில் பிறந்ததாயிற்றே? அதனால் அந்த அன்புக்கு ஆழம் அதிகம்; உறுதி அதிகம். இந்த உண்மையை உறுதிப் படுத்தும் அளவுக்கு மணிவாசகனிடமும் முத்தையாவிடமும் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறாள் நர்மதா.

"அஞ்சலைக்கு எனது ஆலையிலேயே ஒரு வேலை போட்டுத் தருகிறேன்" என்று கூறிவிட்டு மருத்துவமனையை விட்டு வெளியேறும்போதே அந்த எண்ணத்தையும் உதறிவிட்டுத்தான் புறப்பட்டிருக்கிறார் முத்தையா. அவர் ஆலைமுதலாளி. அனுபவம் மிக்கவர். சொல்வேறு செயல் வேறாக இருந்தால்தான் சொத்தும் சுகமும் ஒன்றாகும்படியாக வாழ முடியும் என்ற அடிப்படைத் தத்துவத்தில் அபார நம்பிக்கை கொண்டவர். அதனை நம்பி வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைத்த கைகாரப் பேர்வழி.

அவர் தம் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்; நைந்து கிடக்கும் அஞ்சலையின் இதயத்திற்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்; அவர் வாக்களித்தபடி அஞ்சலைக்கு அவருடைய தொழிற்சாலையில் கௌரவமான வேலை ஒன்றைப் போட்டுத்தர வேண்டும்—இத்தனைக்கும் மணிவாசகனின் தூண்டுதலும் வேண்டுகோளும் துணைநிற்க வேண்டும்.

இதற்காக மணிவாசகனிடம் மாதக் கணக்கில் நர்மதா வாதாடிக் கொண்டிருக்கிறாள்.

"அத்தான்..உங்கள் முதலாளிக்கு வரவிருந்த சிறைத் தண்டனையைச் சண்முகம் அனுபவித்து வருகிறான். அந்த நன்றியை அடுத்த கணமே மறந்தவர் உங்கள் முதலாளி! சண்முகத்தின் மனைவிக்கு மருந்தகத்தில் ஆறுதலாகச் சொன்னவர், அதையே நடைமுறையில் செயலாற்றத் தயங்குகிறார்; தாட்சணியம் பார்க்கிறார்; இந்தப் பழிபாவம் அவரைச் சும்மாவிடப் போவதில்லை. நீங்கள் மனம் வைத்த காரணத்தால் அவர் வெளியே மனிதனாக நடமாடுகிறார். இவரைப் போல் பணம் படைத்தவர்கள் பலர் சிறைச்சாலைக்குப் பதிலாகச் செல்வ மாளிகையில் வாழ முடிகிறது. ஏழைகள், இல்லாதவர்கள் வெளியுலகத்தில் வாழ வேண்டியவர்கள், சிறைச்சாலைக்குள் வாழ்கிறார்கள். காசுக்காக உங்கள் முதலாளியின்மேல் காட்டுகிற விசுவாசத்தைக் கருணைக்காக அந்த ஏழைப் பெண்மேல் அனுதாபமாக்கிப் பாருங்கள். அஞ்சலையின் குடும்பத்து விளக்கை அணையாமல் காப்பாற்றுங்கள்" என்று இரவும் பகலும் மன்றாடுகிறாள்.

முதலாளி முத்தையா கிடக்கட்டும்; அவரிடம் சம்பளம் பெறும் மணிவாசகனே அதற்கு மசிய மாட்டேன் என்கிறானே! "ஒரு தொழிலாளியின் தியாகத்திற்கு உடனே காசுபணத்

**உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை உயர்கிறது!**

1971-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து சென்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 3,00,995.

1972-ல் இவ்வெண்ணிக்கை 3,42,950 ஆக உயர்ந்திருக்கிறது.

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம்-1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

**கால் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | $3\frac{1}{2}$% |

**சீசன் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | $4\frac{1}{2}$% |

**பிக்சட் டெபாசிட்டுகள் :**

ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு :

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | $5\frac{1}{2}$% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | $6\frac{3}{4}$% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | $7\frac{1}{4}$% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | $7\frac{1}{2}$% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | $7\frac{3}{4}$% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் | 8 % |

நடப்பு கணக்கு $\frac{1}{2}$% சேமிப்பு கணக்கு $4\frac{1}{2}$%

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு $\frac{1}{2}$% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., *தலைவர்.*

வை. இராமலிங்கம், *செயலாளர்.*

தி. இராஜமாணிக்கம், *நிர்வாக அலுவலர்.*



# காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி

தபால் பெட்டி எண் : 9

தொலைபேசி { அலுவலகம் : 338, பெருந்தலைவர் : 368 }

**சேமிப்புக்கு**

**பாதுகாப்புக்கு**

**உரிய வட்டி**

**உயரிய வட்டி**

**செல்வ வரிச் சலுகை**

**வருமான வரி விலக்கு**

**இன்னும் பல சலுகைகள்**

**விவரங்களுக்கு நேரில் வருக அல்லது வரைக**

*கிளைகள் :* திருவள்ளூர், திருத்தணி, செங்கற்பட்டு, படாளம், மதுராந்தகம், பொன்னேரி, ஊத்துக்கோட்டை, பள்ளிப்பட்டு, அச்சரப்பாக்கம், தாம்பரம், பூவிருந்தவல்லி உத்திரமேரூர், திருப்போரூர், மீஞ்சூர், செங்குன்றம், குன்றத்தூர், இராம கிருஷ்ணராஜு பேட்டை, ஆலந்தூர், ஆவடி, திருவொற்றியூர், கும்முடிப்பூண்டி.

சி. பி. சந்திரன், *பி.காம். (ஹானர்ஸ்),* செயலர்.

சி. வி. எம். அண்ணாமலை, *எம்.எல்.ஏ.,* பெருந்தலைவர்.

வி. பி. அகிலன், துணைப்பெருந் தலைவர்.

தாலோ காரிய சித்தியாலோ நஷ்டஈடு வழங்குவது தியாகத்தை அவமதிப்பதுபோல ஆகிவிடும் ... தியாகியின் நோக்கத்திற்குக் களங்கம் தேடுவது போல் ஆகிவிடும்'' என்று தத்துவ விளக்கம் கூறியபடி உதவியைத் தள்ளிப்போடத் தொடங்குகிறான் மணிவாசகன். அவன் சட்டம் படித்தவன் நீதியைப் படியாதவன்.

முத்தையாவின் மனங்கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்; அது ஒன்றுதானே அவனுடைய குறிக்கோள்! அது ஒன்றுதானே அவனது அறிவுச் சேமிப்பு.

நர்மதாவின் நியாய வாதங்களும் உரிமைக் குரலொளியும் சாதிக்க முடியாத ஒன்றை, ராதையின் எளிமையான அமைதி நிறைந்த வேண்டுகோள் நிறைவேற்றி வைத்து விடுகிறது...

இத்தனைக்கும், முத்தையாவிடம் அதிகம் பேசவில்லை; ஆர்ப்பாட்டமாகவோ அச்சுறுத்தும் படியாகவோ ஏதும் கூறவில்லை ராதை.

''மாமா!...நீங்கள் அஞ்சலைக்கு உங்கள் ஆலையில் ஒரு வேலை போட்டுத்தருகிறீர்கள்... என் அத்தானுக்கு நீங்கள் தரவிருந்த சட்ட ஆலோசகன் பதவியைக் கூடத் துச்சமாகத் தூக்கியெறிந்து விட்டுப் புறப்பட்டுப் போனவர் இந்த ராதை. இப்போது நானே வலியவந்து, உங்கள் வாசலில் ஏறிநின்று இந்த உதவியைக் கேட்கிறேன்.... ஏழைக் குடும்பத்து அஞ்சலைக்கு வாழ்வு கிடைக்கும் என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் கேட்கவில்லை; அவள் காரணமாக எங்கள் குடும்பத்துள் எழுந்திருக்கும் பிரச்னை ஒன்று அடங்க வேண்டும். வக்கீல் அத்தானுக்கும் — டாக்டர் அக்காவுக்குமிடையை அமைதியும் அன்பும் நிலவ வேண்டும். அஞ்சலைக்குச் செய்யும் நன்மை இவ்விருவர் வாழ்க்கைக்கும் நன்மை செய்யும். அதனால் உரிமையோடு உங்களைக் கேட்கிறேன், எனக்காக இந்த உதவியைச் செய்யுங்கள்'' என்று ராதை மன்றாடியதனால், பாண்டித்துரை மனம்மாறி அஞ்சலைக்குத் தன் தொழிற்சாலை ஒன்றில் வேலை போட்டுத் தர ஏற்பாடுகளைச் செய்கிறார்!

செண்பகா மில்லின் தொழிலாளர் நல மருத்துவ மனை—

## கூல வகை

கூல (தானிய) வகை மொத்தம் பதினெட்டு. அவையாவன:

நெல், வரகு, தினை, சாமை, சோளம், கேழ்வரகு, தோகை, புல், கோதுமை, துவரை, பாசிப்பயறு, உழுந்து, கொள், எள், அவரை, மொச்சை, தட்டைப் பயறு, கடலை.



### மின்னணுத் துறைக் கண்காட்சி.

கடந்த 1967—ல் உருவாக்கப்பட்ட ஆசிய மின்னணுத் துறைக் கூட்டமைப்பில், ஆசிய நாடுகளின் தேசிய நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன.

வருகிற டிசம்பர் 5-ஆம் நாள் முதல் 11-ஆம் நாள் வரை ஏழாவது ஆசிய மின்னணுத்துறை மாநாடு புதுடில்லியில் நடைபெற இருக்கிறது. இந்தியாவில் முதன்முதலாக நடைபெற இருக்கும் இம் மாநாட்டையொட்டி, புதுடில்லி மதுரா சாலையிலுள்ள கண்காட்சித் திடலில், மின்னணுக் கருவிகள் கண்காட்சியொன்று நடைபெறும். நாட்டிலுள்ள பல்வேறு அரசுத்துறை, தனியார் துறை நிறுவனங்களும் ஆசியப் பிராந்திய நிறுவனங்கள் பலவும் கண்காட்சியில் பங்கு கொள்ளும்.

ஒரு டாக்டர் என்ற முறையில் பணிபுரிந்து வந்த நர்மதாவுக்கு, வேறொரு டாக்டர் மருத்துவம் பார்க்க வேண்டிய நேரம்!

மகப்பேற்றுக்காக மருத்துவமனையில் நர்மதாவைச் சேர்ப்பித்துவிட்டு அமைதியின்றி அறைவாசலில் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கிறான் மணிவாசகன்.

ஆணா? பெண்ணா?

என்ன குழந்தை பிறக்கும்!.. யாருடைய ஜாடையைக் கொண்டிருக்கும்?... எத்தனை பவுண்டு எடை இருக்கும் என்பதைப் பற்றி ராதையும் மணிவாசகனும் பரபரப்புக்கும் தவிப்புக்கும் மத்தியில் சர்ச்சை செய்து கொண்டிருக்கும் நேரம்.

ஆபரேசன் தியேட்டரின் அறையைத் திறந்து கொண்டு பெரிய டாக்டர் வருகிறார்...

''டாக்டர்! என்ன குழந்தை.. ஆணா? பெண்ணா?'' என்று பரபரப்பாகக் கேட்கிறாள் ராதை.

''ஆணா பெண்ணா என்ற சர்ச்சையைவிட, பிழைக்க வேண்டியது பெரிய உயிரா, சின்ன உயிரா என்ற பிரச்னைக்கு முடிவு சொல்லுங்கள். சீக்கிரம்!'' என்கிறார் பெரிய டாக்டர்.

மணிவாசகனின் இதயம் அதிர்கின்றது?

பிற குடும்பங்களுக்காக, பிற மனிதர்களுக்காக, சிறிதும் அதிர்ச்சியோ ஆயாசமோ அடையாத சட்ட மூளைக்குள் சஞ்சலம் கொதிக்கிறது.

அவன் மனிதனாக — கணவனாகக் கண் கலங்கி நிற்கிறான்.

(வளரும்)





கண்டாலே நாவில் நீர் சுரக்க வைக்கும் ஐஸ்கிரீமும் அழகிய வெள்ளி மென்தாளில் சுற்றப்பட்ட இனிப்பு வகைகளும் காண்போர் கருத்தைக் கவரும் வண்ணம் கடைகளில் காட்சியளிக்கின்றன. ஆனல் இவற்றை வாங்கித் தின்றல் கொஞ்ச நாட்களுக்கோ அன்றி ஆயுள் முழுவதுமோ நோயினல் அவதிப்படும் நிலைமை நேரிடலாம் என்பதைப் பலர் அறிய மாட்டார்கள். சில சமூக விரோத தயாரிப்பாளர்களும், வியாபாரிகளும் இந்தத் தின் பண்டங்கள் மட்டுமின்றி வேறு பல உணவுப் பொருட்களிலும் மனிதர் உண்ணத் தகாத பொருட்களைக் கலப்படம் செய்துவிடுகிறர்கள். நச்சுத் தன்மை வாய்ந்த பொருட்கள் கூட உணவுப் பொருட்களில் கலக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கல்கத்தாவுக்கு அருகே டம்டம் என்னுமிடத்தில் நடந்த துன்ப நிகழ்ச்சி இன்னும் நம் நெஞ்சை விட்டு அகலவில்லை. பிளாஸ்டிக் பொருட்கள் செய்வதற்கு உபயோகிக்கப்படும் ஒரு வித நச்சுத் திரவம் கலந்த கடுகு எண்ணெயை உட்கொண்டதால் ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக 275 பேர் பாதிக்கப்பட்டனர். நச்சுப் பொருளை உட்கொண்டதால் அவர்களது கால்களில் முடக்கு வாதம் ஏற்பட்டது. இந்த மாதிரிச் சம்பவங்கள் நமது நாட்டில் அடிக்கடி நடக்கின்றன. டம்டம் சம்பவத்தில் ஏராளமான பேர் பாதிக்கப்பட்டதால் பத்திரிகைகளின் கவனத்தையும், பொதுமக்களின் கவனத்தையும் அது கவர்ந்தது. உணவுப் பண்டங்களில் நச்சுப் பொருட்களைக் கலப்படம் செய்வதாலேயே இம்மாதிரித் துன்ப நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன.

பொதுவாக பால், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், தேயிலை, காப்பி, மசாலாப் பொருட்கள், வெள்ளி மென் தகடு போன்றவற்றில் கலப்படம் அதிகமாகக் காணப்படுகிறது. நச்சுக் கசகசா எண்ணெய் கலந்த கடுகெண்ணெயை உட்கொண்டால் கண் பார்வை பாதிக்கப்படும். இதய நோய், கட்டி போன்றவையும் ஏற்படும். சில சமயத்தில் மரணமும் ஏற்படக் கூடும். கனிஜ எண்ணெய் கலந்த சமையல் எண்ணெய்களை உட்கொண்டால் ஈரல் பாதிக்கப்படும். புற்று நோய் ஏற்படக்கூடும். நச்சுத் தன்மை வாய்ந்த ஒருவகைப் பருப்புக் கலந்த கடலைப் பருப்பை உட்கொண்டால் கால்களில் முடக்குவாதம் ஏற்படும். உண்ணத் தகாத நிறம் கலந்த இனிப்புப் பண்டங்களையும், சோடா முதலிய சுவை நீர்களையும் அருந்தினல் புற்று நோய் ஏற்படும்.

நமது நாட்டில் மிகப் பெரிய அளவில் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படுகிறது என்ற உண்மையை எப்படி மறுக்க முடியும்? கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் உணவுப் பொருள் ஆய்வாளர்கள் பரிசோதனைக்கென்று தெரிந்தெடுத்த உணவுப் பண்டங்களில் பெரும்பாலானவை கலப்படம் செய்யப்பட்டவையாக இருந்தன. மக்களின் நல்வாழ்வுக்குச் சுத்தமான உணவுப் பொருட்கள் தேவை; இதிலும் சத்துணவின் தரம் மிகவும் குறைவாக உள்ள இந்திய நாட்டில் உணவுப் பொருட்கள் மேலும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற உண்மை எல்லாருக்கும் தெரிந்திருந்தும் கூட இங்கு இந்த நிலைமை நீடிக்கிறது.



அதிகாரிகளும், பொதுமக்களும் இந்த விஷயத்தில் ஒரு மித்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதை இந்திய அரசு உணர்ந்து கொண்டிருக்கிறது. மத்திய சுகாதார சபை, உள்ளாட்சி நிர்வாகங்கள், திட்டக்குழு ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் 1954–ம் ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. சட்டத்தை மேலும் பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்காக உணவுப் பொருள் ஆய்வாளர்களையும், ஆராய்ச்சி நிபுணர்களையும் நியமிப்பதற்கு சட்டத்திருத்தம் வகை செய்கிறது. தடுப்புச் சட்டத்தை மீறுபவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை மேலும் கடுமையாக்கப்பட்டது. கலப்படம் செய்பவர்களுக்குக் குறைந்த பட்சம் 6 மாதச் சிறைத் தண்டனையும், 1000 ரூபாய் அபராதமும் விதிப்பதற்குச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. உணவு ஆய்வாளர், ஒரு தயாரிப்பாளர் அல்லது கடைக்கார




ரின் உணவுப் பொருளில் இருந்து ஆய்வுக்காக மாதிரி எடுத்தால், கடைக்காரர் தம்மிடமுள்ள சரக்கின் மொத்த மதிப்புக்கு இணையான தொகைக்கு உத்தரவாதப் பத்திரம் கொடுக்க வேண்டும் என்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம், மாதிரி எடுக்கும்போது இரண்டு சாட்சிகள் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. திருத்திய சட்டத்தின்படி, ஒரு சாட்சி இருந்தாலே போதும்.

கலப்படம் செய்வோரைத் தண்டிப்பதற்குச் சட்டத்தில் கடுமையான தண்டனைகள் இருந்தாலும் எல்லா இடங்களிலும் எப்போதும் போலவே நிலைமை மோசமாக இருப்பது ஏன்? உணவுக் கலப்படத்தின் தீமைகளால் பாதிக்கப்படும் சாதாரண மனிதனுக்கு இது புரியாத புதிராகவே உள்ளது. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றும் முக்கியப் பொறுப்பு உள்ளாட்சி நிர்வாகங்களுக்குத்தான் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் நிதிவசதி போதாததால் முழுநேர உணவு ஆய்வாளர்களை நியமிக்க இந்த நிர்வாகங்களால் இயலவில்லை. ஆகவே, சுகாதார ஆய்வாளர்களே (சானிடரி இன்ஸ்பெக்டர்கள்) மற்றப் பணிகளோடு இந்த வேலையையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மகாராஷ்டிரத்தில் மட்டும் இந்தத் தீமையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை மாநில அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பறிமுதல் செய்யப்பட்ட மாதிரி உணவுப் பண்டங்களை உடனடியாக ஆராய்வதற்குப் போதிய ஆய்வுக்கூட வசதிகள் இல்லாததும் பெரிய குறையாக உள்ளது. இவ்வளவு பெரிய நாட்டில் 66 உணவு ஆய்வுக்கூடங்களே உள்ளன. இவற்றுள் 22 ஆய்வுக்கூடங்கள் உள்ளாட்சி நிர்வாகங்களின் பொறுப்பிலும் எஞ்சியவை மாநில அரசாங்கங்களின் பொறுப்பிலும் உள்ளன.




இவற்றில் பெரும்பாலானவற்றில் போதிய ஆராய்ச்சி வசதிகள் இல்லை; தகுதிவாய்ந்த ஆட்களும் இல்லை.

மத்திய சுகாதார, குடும்ப நல அமைச்சகம் இந்தத் துறையில் சில நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. புது தில்லியில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் 5415 என்ற இலக்கமிட்ட சிறப்புத் தபால் பெட்டி நிறுவப்பட்டிருக்கிறது. நாடெங்கிலும் உள்ளவர்கள், உணவுக் கலப்படத்தைத் தடுக்கும் பணியில் மாநில அரசாங்கங்களும், உள்ளாட்சி நிர்வாகங்களும் தத்தம் பகுதியில் மட்டுமே இயங்க முடியுமாதலால், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்துக்கு நகர்ந்து பணிபுரிவதற்காக மத்திய உணவு ஆய்வாளர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவிற்குச் சட்ட ரீதியில் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் இந்தக் குழுவினர் 134 மாதிரி உணவுப் பண்டங்களைப் பறிமுதல் செய்து ஆராய்ச்சி நடத்தினர். பெரிய அளவில் கலப்படம் செய்யும் பல முக்கிய நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு இவர்கள் உதவினர்.



உணவில் கலப்படம் செய்வது மனித குலத்துக்கு எதிராக இழைக்கும் பாவமாகும். செல்வந்தர்களாயினும் சரி, ஏழைகளாயினும் சரி, எங்கோ மூலையில் இருப்பவர்களாயினும் சரி, இந்தப் பாவச் செயலை ஒழித்துக் கட்டுவதற்கு நாமெல்லாரும் உதவ வேண்டும். அரசாங்கத்தால் தனித்து எதுவும் செய்ய முடியாது. பொதுமக்கள் இந்த விஷயத்தில் அக்கறையில்லாமல் காணப்படுகிறார்கள். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூட ஏனோதானோ வென்று இருந்து விடுகின்றனர். கலப்படம் செய்யும் கயவர்களைக் கண்டுபிடித்து, காட்டிக் கொடுக்கும்படி பொதுமக்கள் மனத்தைத் தட்டியெழுப்ப வேண்டும். தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் ஆகியோரின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இந்த முக்கியப் பணியில் பொதுமக்கள் அனைவரும் ஒருமித்துச் செயல்பட வேண்டும்.






வளமான வளர்ச்சிக்கும்
அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

மற்றும்

## ரோவிஸால் ஓரல்







**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:**
உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் குறைந்த செலவிலும் அளிக்க [illegible] கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் கலவையை நன்றாகத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு:**
ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிக சூடு, அதிக குளிர்ச்சி, [illegible] அல்லது [illegible], சிறகுகள் உதிர்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.


தயாரிப்பாளர்கள்:
ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
[illegible] பம்பாய்-[illegible]



# முத்தான முத்தல்லவோ...!



குமரன்



கடல்தரும் பல்வேறு செல்வங்களுள் முத்தும் ஒன்று! முத்து, வரலாற்றுக் காலத்திற்கு முன்னமேயே மனிதனைக் கவர்ந்த மதிப்பு மிக்க சொத்து! கிறிஸ்து பிறப்பதற்கு 2,300 ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது, இன்றைக்கு 4,275 ஆண்டுகளுக்கு முன்பே, சீனர்கள் முத்துக்களை அலங்காரப் பொருளாகப் பயன்படுத்தினர். பிற்காலத்தில், முத்து செல்வச் செழிப்பின் அறிகுறியாகக் கருதப்பட்டது. அரசக் குடும்பத்தினரும், மேட்டுக் குடியினரும் முத்துக்களை அணிந்திருந்தனர். எழிலரசி கிளியோபாத்ரா ஏறத்தாழ 60 ஆயிரம் பொன் மதிப்புள்ள முத்துக்களை அணிந்திருந்தாள். பிரெஞ்சுப் பேரரசி யஜின், 12,500 பொன் மதிப்புள்ள முத்துக்களை வைத்திருந்தாளாம்.

கவிஞர்களுக்கு மிகவும் விருப்பமான பொருள் முத்து! முத்துப் பிறக்கும் இடங்களாகக் கவிஞர்கள் பல்வேறிடங்களைச் சொல்வார்கள்.

'பனிமதி கதலி மேகம்
பைந்தொடிக் கழுத்து ஆவின்பல்
தனியானை யேனக் கொம்பு
தடங்கரா வுடும்பு கொக்கு
விளையராச் சலஞ்ச லந்நந்
திப்பிமீன் மூங்கில் பூகம்
நிணசெந்நெல் கரும்பு கஞ்ச
நிகழிரு பதின்முத் தாகும்!'

என்று, முத்து விளையும் இடங்களாக இருபது இடங்களைச் சொல்கிறது பழந்தமிழ்ப் பாடல் ஒன்று! இன்னொரு தமிழ்ப்பாடல் — முத்தொள்ளாயிரப் பாடல், கனிமொழிக் கோதையரின் கண்ணீரையே முத்தாக்கிக் காட்டுகிறது.

பாண்டியன் மீது காதல் கொண்டாள்பைங்கிளிஒருத்தி! நீண்ட நெடு நாட்களாகவே அவள் காதல் நிறைவேற வில்லை! நாளாக நாளாகக் காதல் கனல் அந்தக் கோதையைச் சுட்டெரிக்க ஆரம்பித்தது! தன்னுடைய காதல் கனவு நிறைவேறாமலேயே போய் விடுமோ? தான் இப்படியே ஏங்கித் தவித்துச் சாகவேண்டியதுதானா? என்று எண்ணி எரியிடைப்பட்ட புழுப்போலத் துடித்தாள்! இதயம் வெடித்துவிடும்போல் இருந்தது. அவளது, கயற் கண்கள் குளமாயின! அவை கண்ணீரை அருவியென வழிந்தோட விட்டன! கன்னத்தில் சில துளிகள்! அவை ஒன்றையொன்று முந்திவந்து ஒளி சிந்தின. அவளது உயிர்த்தோழி இதனைக் கண்டாள்! அவள் நிலைக்குமனமிரங்கினாள்! அந்த இரங்கத்தக்க நிலையை இன்னொரு தோழிக்கு எடுத்துச் சொல்கிறாள்!

'தோழி! ஒளிமுத்துக்கள் பாண்டிய மன்னனின் கொற்கைத் துறையில் மட்டுமா கிடைக்கின்றன? இல்லை? அந்தக் கொற்கைத் துறைக்குத் தலைவனும் பேரில் மாற்றாரைப் புறங்காணச் செய்வதால் குருதி தோய்ந்து தோன்றும் கூர்வேலைக் கையகத்துக் கொண்டவனுமாகிய பாண்டிய மன்னனின் அத்தாணி மண்டபத்து மார்பினை ஆரத்தழுவ எண்ணி ஏங்கித் தவித்துக் கிடக்கும் ஏந்திழையாரின் கண்களிலும் முத்துக்கள் பிறக்கின்றனவே. என்கிறாள். ஆம்! இங்கே கண்ணீர்த் துளிகளைக் கவின் முத்துக்களாக்கிக் காட்டுகிறாள்! கண்ணீர்த் துளிக்கு முத்தை உவமையாக்கிக் காட்டும் முத்தொள்ளாயிரப் பாடலைப் பாருங்கள்:

'' இப்பியீன்று இட்ட
எரிகதிர் நித்திலம்
கொற்கையே யல்ல
'படுவது — கொற்கைக்
குருதிவேல் மாறன்
குளிர்சாந் தகலம்
கருதியார் கண்ணும்
படும்! ''

என்பது முத்தொள்ளாயிரப் பாடல், இவ்வாறு, கவிஞர்கள் காட்டும் கற்பனை முத்துக்கள் கருத்துக்கு இன்பம் பயப்பன என்பதில் ஐயமில்லை ! எனினும் கை நிறைய அந்நியச் செலாவணியை அள்ளித்தருகிற முத்துக்கள் கடல்தரும் முத்துக்களே !

பொதுவாக, நாம் வாழும் இவ்வுலகத்தின் பெரும் பகுதி 70 விழுக்காடுப் பரப்பு கடல் நீரில்தான் அமிழ்ந்துள்ளது. நாம் வாழும் நிலப்பரப்பில் 36 கோடி கிலோ மீட்டர் தூரம் கடல் நீர்ப் பரப்பாகவே உள்ளது. இதில் இயற்கையாக, ஒரு ஹெக்டேர் கடற் நீர்ப் பரப்பில் 4 முதல் 5 டன் வரை சிப்பிகள் — முத்துச் சிப்பிகள் கிடைக்கும் என்றும், சிப்பி வளர்ப்பு முறையைக் கைக்கொள்வதன் மூலம் ஒரு ஹெக்டேர் கடல நீர்ப் பரப்பில் 300 மெட்ரிக் டன் அளவிற்குச் சிப்பிகள் பெறலாம் என்றும் கணக்கிட்டுள்ளனர்.

வரலாற்றுக்கு முந்திய — பழங்காலந்தொட்டே தென்னகத்தின் கடல் முத்துக்கள் எங்கும் சிறப்பாக மதிக்கப்பட்டன. கிரேக்கத்திலும் ரோமாபுரியிலும் தமிழகக் கடல் முத்துக்கள் மான்விழி மங்கையரின் மதிப்பு மிக்க அணிகலன்களாகி, மாமன்னர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன : பிரிட்டனிலுள்ள மன்ஹாட்டனில் தமிழகத்துக் கடல் முத்துக்கள் முதல் வரிசையில் இடம் பெற்றன என்பது உலகறிந்த செய்தி. தமிழக முத்து வளத்தையும் அதன் சிறப்பையும் அம்முத்துச் செல்வத்தைத் தங்கள் நாடுகளுக்கு அள்ளிச் செல்வதற்காக அந்நிய நாட்டு வணிகர்கள் பலர், இங்கு வந்து காத்துக் கிடந்தனர் என்ற வரலாற்றுச் செய்தியை நாம் இலக்கியங்களில் காண்கிறோம்.

முத்துக் குளிப்பதொரு
தென்கடலி லே
மொய்த்து வணிகர்பல
நாட்டினர்வந் தே
நத்தி நமக்கினிய
பொருள்கொணர்ந் தே
நம்மருள் வேண்டுவது
மேல்கரையி லே ''

என்னும் பாரதியாரின் பாடல் வரிகள் முத்துக்காகப் பன்னாட்டு வணிகர்கள் இங்கு வந்து மொய்த்துக் கிடந்த செய்தியைக் கூறுகிறது.

முத்துக்கள் எப்படிப் பிறக்கின்றன ?

கடலில் எத்தனை எத்தனையோ வகை வகையான வியக்கத்தக்க பிராணிகள்— உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் முத்துச்சிப்பி. இந்த முத்துச்சிப்பி என்னும் ஒருவித ஆளியின் சிப்பிக்குள்ளே ஒரு நுண்ணிய சிறு மணலோ அல்லது வேறு உறுத்தும் பொருளோ புகுகின்றது; அப்போது அந்தப்பிராணி தன் புறத்தோல் அடுக்காகிய எப்பித்திலியம் என்னும் ஒருவகையான படலத்தால் அதனைப் பொதிந்து கொள்கின்றது. பிராணி அந்தப்பையினுள் சுரக்கும் நீர், மெல்லிய அடுக்கடுக்காக வந்து சேர்ந்த பொருளைப் பொதிகின்றது ; இவ்வாறு முற்றிலும் நன்கு பொதியப் பெற்ற பொருள்தான் முத்து. அடுக்குகள் மிக மிக மென்மையானவை ; அவை ஒளியை உள்ளே நுழைய விடுவனவாகவும், அதனைப் பிரதிபலிக்கச் செய்வனவாகவும் உள்ளன. இதனாலேயே முத்து அழகாக ஒளிர்கின்றது.

முத்துக்களில் வெண் முத்துக்களைத் தானே நாம் பார்க்கிறோம் ; கறுப்பு நிறமான முத்துக்களும் உள்ளன. ஆனால், அவை கிடைப்பது அருமை. எனவே கறுப்பு முத்துக்களின் விலை மதிப்பு மிக மிக அதிகம்.

பொதுவாக முத்தில் ஏதேனும் கீறல் ஏற்பட்டால், மேல் அடுக்கை மெதுவாக உரித்து எடுத்து விடலாம். அதன் பின் அம்முத்து முன் போலவே நன்றாக ஒளிவிடும்.

முத்துக்களில் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அவற்றுள், முற்றிலும் உருண்டை வடிவான முத்துக்களே பெரிதும் விரும்பப்படுகின்றன. முட்டையின் வடிவுடையனவும், பொத்தான் வடிவுடையனவும் வரிசைப்படி மதிப்பிடப்படுகின்றன.

முத்து மிகவும் மென்மையான பொருள். கீறல்பட்டாலும் எளிதில் கெட்டுப் போகும். நீண்ட நாள் காற்றுப்பட்டால் ஒளி மங்கிப் போகும் ; அமிலம், தூசி, வேர்வை, ஈரம் ஆகியன சேர்ந்தாலும், முத்து பழுதுபட்டுப் போகும்.

இவ்வளவு அருமையான— விலை மதிப்பு மிக்க முத்துக்

### வேலைக்கு ஆட்கள் தேவைப்படும் பணிப் பிரிவுகள்

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகை வேலைகளுக்குப் போதிய பணியாளர்கள் கிடைக்காத நிலைமை இருந்து வருகின்றது.

உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்—ஹையர் கிரேடு (பெண்கள்); துப்புரவு ஆய்வாளர்கள் (சேனிடரி இன்ஸ்பெக்டர்) (தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்) ; சுகாதார உதவியாளர்கள் ; பி.டி. ஆசிரியர் (கன்னடம்), ஹையர் கிரேடு ஆசிரியர் (உருது) டிரில் ஆபரேட்டர் ; மருந்து கலக்குவோர் ; சுருக்கெழுத்தர்கள் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ; தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்) ; கர்னாடக இசையில் வித்வான் தகுதியுடன் இசை ஆசிரியர் ; எலெக்ட்ரீஷியன் ; பவர் டிரில் டிரைவர் ; பி. டி. ஆசிரியர்கள் (கணிதம்) (பெண்கள்) ; விமான மெக்கானிக்குகள் ; லைன் ஆபரேட்டர் ; நூலகர் ; அராபிக் முன்ஷி ; மெயின்ஸ் சூபர்வைசர் ; போட்டோ டார்க் ரூம் உதவியாளர்கள் ; ரேடியோகிராபர் ; தெலுங்கு பண்டிட் கிரேடு 1.

தேசிய வேலை வாய்ப்புப் பணி 1973 ஜூன் மாத அறிக்கையில் மேற்கண்ட விவரம் தரப்பட்டுள்ளது.

## கம்பியில்லா டெலிபோன்

கம்பியில்லாத் தொலைபேசி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது கையடக்கமானது! எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லக்கூடியது; வழியில் சாலையிலிருந்து பேசலாம். எடையோ 28 அவுன்சுதான்.

“டைனா டி-ஏ-ஸி” என்ற இந்தப் புதுமைத் தொலைபேசியை அமெரிக்க நாட்டிலுள்ள மோட்டரோலா இன்கார்ப்பரேட்டடு என்ற நிறுவனம் இயக்கிக் காட்டியிருக்கிறது.

எஃப். எம். ரேடியோ அலை வரிசையில் இது இயங்குகிறது.

மிகு நுணுக்கமான கம்ப்யூட்டர் கணக்கிடு பொறிமுறை அமைப்பு, இந்தத் தொலைபேசியை இயங்க வைக்கிறது. சாலையில் போய்க் கொண்டிருக்கையிலும் ஊர்தியில் சென்று கொண்டிருக்கையிலும் அலுவலகத்திலோ இல்லத்திலோ இருக்கும் தொலைபேசியின் எண்களை இந்தத் தொலைபேசியில் சுழற்றிப் பேசலாம். இந்த ரேடியோ—தொலைபேசி என்ன செய்கிறது தெரியுமா? முக்கிய இடங்களில் வைத்திருக்கும் பலப் பல ரேடியோ டிரான்ஸ்மீட்டர்களுக்கும் ரிசீவர்களுக்கும் ஒரு மின்காந்த அலையை அனுப்புகிறது. இந்த ரேடியோ டிரான்ஸ்மீட்டர்களையும் ரிசீவர்களையும் ஆட்சி செய்யும் மத்திய கம்ப்யூட்டர் பொறி, தொலைபேசிச் செய்தியை முறையான தொலைபேசி அமைப்புக்குள் அனுப்பி விடுகிறது.

சாதாரணத் தொலைபேசியிலிருந்தும் இந்தக் கையடக்கத் தொலைபேசிக்கு எண்களைச் சுழற்றிப் பேசலாம்.

யம் வைத்துத்தான் முத்துக் குளிக்கிறார்கள். இத்தகைய முத்துக் குளிப்பு எங்கெங்கே நடைபெறுகிறது?

முத்துக் குளிக்கும் இடங்கள் உலகில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள், பாரசீக வளைகுடாவிலுள்ள பாரன், மன்னார் வளைகுடா, தூத்துக்குடிக் கடல், ஐப்பானிலுள்ள டோக்கியோக் கடல், சுலூத் தீவுக் கூட்டம், ஆஸ்திரேலியாவின் வடக்கு மேற்குக் கடற் கரையோரங்கள், கலிபோர்னியா கடற்கரைப் பகுதி ஆகியவை குறிப்பிடத் தக்கன. எனினும் விலை மதிப்புள்ள முத்துக்களை மிகுதியாகத் தருபவை மன்னார் வளைகுடாவும், பாரசீக வளைகுடாவுமே!

பொதுவாக, முத்துக் குளிப்பு எப்போது ஆரம்பமானது என்பதை நாம் தெளிவாக அறுதியிட்டுக் கூற முடியவில்லை. எனினும், தமிழகத்தில் மன்னார் வளைகுடாவில் நடைபெறும் முத்துக் குளிப்புப் பற்றி ரோம, எகிப்திய, கிரேக்கப் பயணிகள் தங்கள் பயணநூல்களில் குறிப்பிட்டுள்ளனர். மன்னார் வளைகுடாவில் முத்துக் குளிப்பது பற்றிய தெளிவான வரலாற்றுக் குறிப்பினை முதன் முதல் தந்தவர் உலகம் சுற்றிய வீரர் மார்க்கோ போலோ தான்.

முத்துக் குளிக்கும் பண்ணைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருப்பதால் அவர்களின் மேற்பார்வையில்தான் முத்துக் குளிக்க வேண்டும். முத்துக் குளிப்பவர் 60 அடி ஆழமுள்ள கடற்படுகையில் சிப்பிகளைச் சேகரிக்க வேண்டும்; அவர் 80-90 சிறு மணித்துளி நேரத்திற்கு அதிகமாகக் கீழே தங்க முடியாது. அவர் மூச்சை அடக்கவும், தம்மீது நிற்கும் நீரின் கனத்தைத் தாங்கவும் வேண்டியவராக இருக்கிறார். அதனால் முத்துக் குளிக்கப் புதிதாகத் தொடங்குவோரின் மூக்கிலும் காதுகளிலும் இரத்தம் வருவதுமுண்டு. முத்துக் குளிப்போர் சுறா மீன்களுக்குத் தப்பித்துக் கொள்ள கருங்காலி மரத் தடிகளை வைத்திருப்பர். முத்துக் குளிப்பவர் தவறாக அதிக நேரம் தங்கிவிட்டால் மூச்சுத்திணறி இறந்துவிடுவர். அதனால், முத்துக் குளிப்பவர்கள் உடல் வலிமை உடையவராக இருத்தல் வேண்டும்.

முத்துக் குளிப்போர் காலை 5 மணிக்குக் கடற்கரைக்கு வந்து, அரசாங்கத்தாரின் அனுமதிச் சீட்டுக்களைப் பெறுவர். தோணிகள் 60-70 ஆக அணிவகுத்து நிற்கும். ஒவ்வொரு தோணியிலும் முத்துக் குளிப்போர் சுமார் பதின்மர் இருப்பர்.

தூத்துக்குடிக் கடலில் பண்ணைகள் 20 மைல் தொலைவிலிருக்கின்றன. தோணிகள் அவற்றை நோக்கிப் புறப்பட்டுப் போகும். முத்துப் பண்ணை இருக்குமிடத்தைக் காட்ட அதில் நீண்ட மூங்கிற் கழிகளில் சிவப்புக் கொடிகள் கட்டி நட்டு வைத்திருப்பர்.

முத்துக் குளிப்போர் ஆடைகளைக் களைந்துவிட்டுக் கோவணத்துடன் மட்டுமே இறங்குவர். முத்துச் சிப்பிகளைச் சேகரிப்பதற்காக இடுப்பில் ஒரு வலையைக் கட்டிக் கொள்வர். அவர் நீரில் குதித்துத் தோணியைப் பற்றி நிற்பர். அப்போது தோணியிலிருப்பவர் சுமையான கல் ஒன்றைக் கட்டிய நீண்ட கயிற்றை நீரில் விடுவர். அப்போது முத்துக் குளிப்பவர் கல்லைக் கட்டிய கயிற்றுச் சுருக்கில் ஒரு பாதத்தை நுழைத்துக் கொண்டு நீரில் மூழ்குவர். அடிப் படுகையில் போய்ச் சேர்ந்ததும் கல்லை விட்டுவிடுவர். தோணியிலிருப்பவர் அதை மேலே தூக்கி, முத்து குளிக்கும் வேறொருவரை இறக்கப் பயன் படுத்துவர்.

முத்துக் குளிப்பவர் கல்லை நீக்கியதும் பரபரப்புடன் முத்துச் சிப்பிகளைப் பொறுக்கி, இடுப்பிலுள்ள வலைப் பையில் போட்டுக் கொண்டு ஒன்றரை மணித்துளி ஆகுமுன் வெளியே வந்து விடுவார். தோணியிலுள்ளவர்கள் இது பற்றிக் கவனித்துக் கொண்டேயிருப்பார்கள். முத்துக்

குளிப்பவர் மேலே வந்ததும் முத்துச் சிப்பிகளைத் தோணியிலிருப்பவரிடம் தந்துவிட்டு சிறிது நேரம் தோணியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே ஓய்வு கொள்வர். பிறகு மீண்டும் முன்போல் இறங்குவர்.

நண்பகலில் முத்துக் குளித்தல் முடிவடையும். முத்துச் சிப்பிகளைக் கடற்கரையில் குவித்து ஏலம் விடுவர். வாங்குவோர் அவற்றைச் சில நாட்கள் அழுகவிட்டுப் பின்னர்த் திறந்து கழுவி முத்துக்களை எடுப்பர்.



**கிடைக்கின்ற சிப்பிக்களை மூன்று சம பங்காகப் பிரித்து, முத்துக் குளிப்போர்க்கு ஒரு பங்கைக் கொடுத்துவிட்டு அரசாங்கம் 2 பங்கை எடுத்துக் கொள்கிறது.**

முத்துக் குளித்தலை ஆண்டு தோறும் நடத்த முடியாது. முத்துக்கள் நன்கு முழு வளர்ச்சியடைந்ததைக் கண்டறிந்த பிறகே முத்துக் குளித்தலை நடத்தலாம். முத்துக்களின் வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கு மத்திய அரசும் மாநில அரசும் ரூபாய் 15,59,400 செலவிடுகின்றன. இந்த முத்து வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கான ஆராய்ச்சி நிலையம் மண்டபத்தில் உள்ளது.

இயற்கையில் கிடைக்கும் இந்த முத்துக்களைப்போல இப்பொழுது ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்கிறார்கள். இவற்றை வளர்ப்பு முத்துக்கள் அல்லது செயற்கை முத்துக்கள் என்கிறார்கள்.

முத்து உற்பத்தி செய்யும் முறையை ஜப்பான் இன்னும் இரகசியமாகவே வைத்திருக்கிறது. இன்று, உலகச் சந்தைகளில் விற்பனையாகும் முத்துக்களில் பெரும்பகுதி ஜப்பானில் வளர்க்கப்படும் வளர்ப்பு முத்துக்களே. இவை இயற்கை முத்துக்களைவிட அழகாகவும் இருக்கும்—உருண்டையாகவும் இருக்கும். எனவே, பலரும் இவற்றை விரும்பி வாங்குகின்றனர்.

பொதுவாக, முத்து விளைச்சலில்—முத்து வளர்ப்பில் ஈடுபட்டுள்ள அயல்நாடுகளுக்குள்ளே கடந்த 50 ஆண்டுகளில் ஜப்பானே தலை தூக்கி நிற்கிறது. இன்று, ஜப்பானின் வருமானத்தில் பெரும் பகுதி செயற்கை முத்து ஏற்றுமதியின் மூலம் கிடைப்பதேயாகும். முத்து ஏற்றுமதியில் ஜப்பானிய அரசாங்கம், முத்துக்களின் தரத்தைக் காப்பாற்றுவதில் பெரிதும் அக்கறை காட்டுகிறது. அது இரண்டாந்தர முத்தை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதில்லை. 'தேசிய முத்து ஆராய்ச்சிக் கூடம்' (நேஷனல் பேர்ல் ரிசர்ச்லேபரட்டரி) என்ற நிறுவனத்தை 1955 லேயே ஜப்பான் ஏற்படுத்தி நடத்தி வருகிறது. அண்மையில் ஜப்பானின் பேருதவியோடு ஆஸ்திரேலியாவில் செயற்கை முத்து உற்பத்தித் தொழில் தொடங்கியுள்ளது. இவற்றைப் பின் பற்றி நாமும் முத்து விளைச்சலில் தீவிரமாக இறங்கினால், ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெற வாய்ப்பு ஏற்படும்!

—சாமி பழ



**பண்டைத் தமிழகத்துத் தலைநகர்கள்**

வஞ்சி: சங்ககாலச் சேர மன்னர்களின் தலைநகர்.

காஞ்சி: சங்ககாலத்தில் திரையர் அரசர்களின் தலைநகராகத் திகழ்ந்தது. கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை 600 ஆண்டுகள் பல்லவர்களின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

தகடூர்: சங்ககாலம் முதல் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை அதியமான் அரசர்களின் தலைநகராக விளங்கியது.

கிடங்கில்: சங்க காலத்தில் ஓய்மானாட்டு நல்லியக் கோடன் என்ற அரசனின் தலைநகராக விளங்கியது.

திருக்கோவலூர்: மலையமான் திருமுடிக்காரி என்னும் அரசனின் தலைநகராகச் சங்ககாலத்தில் திகழ்ந்தது.



# ஒரு தொழில் நகரம் உருவாகிறது!

அம்பத்தூர் நகரியம் ஆற்றும் அரும் பணிகள் குறித்து விளக்கம் தருகிறது இக் கட்டுரை.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பல குக்கிராமங்களைக் கொண்ட கிராமமாக அம்பத்தூர் இருந்தது. ஆனால் இன்று? அதன் வளர்ச்சியில் எத்தனை வேகம்! ரயில் நிலையமும், ஆங்காங்கே பல் வேறு தொழிற்சாலைகளும் நிறைந்த நகரமாக அல்லவா அது காட்சியளிக்கிறது!

வகை வகையான தொழிற்கூடங்கள் நாளுக்கு நாள் வளர்ந்தும், உருவாகியும் வருகின்றன. இப்பகுதியில் வளர்ந்துவரும் அதிவிரைவான தொழில் வளர்ச்சியின் காரணமாகத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் இங்கே குடியேறியனர். அன்று வண்ணமுள்ள கிராமமாகக் காட்சியளித்த அம்பத்தூர் இன்று தொழில் மயமான நகரமாகி வருகிறது. பொதுச் சுகாதார சமூகத் தேவைகளை நிறைவேற்றும் நோக்கோடு, ஊராட்சி ஒன்றியமாக இருந்த இது, நகராட்சியாகி இன்று நகரியமாக மாறி (Township) நற்பணிகள் பல ஆற்றி வருகின்றது.

தொழிலுக்கு ஏற்ற இடமாகத் திகழும் அம்பத்தூரில் சுமார் 1,200 ஏக்கராவில் தொழிற்பேட்டையும், 40 பெரிய தொழிற்சாலைகளும், 78 நடுத்தரத் தொழிற்சாலைகளும், 134 சிறிய தொழிற்சாலைகளும் இருக்கின்றன. தொழிற்கூடங்கள் நிறைந்த சூழ்நிலையில் உள்ள ஓர் நகரியம், தமிழ்நாட்டில் இது ஒன்றே என்று கூடச் சொல்லலாம்.



இந்நகரிய நிருவாகத்தில் அம்பத்தூர் பேரூராட்சி, கொரட்டூர், காக்காப்பாளையம், பாடி, மொகப்பேர், மண்ணூர், பட்டறைவாக்கம், அத்திப்பட்டு, மேனும் பேடு ஆகிய ஒன்பது கிராமங்கள் உள்ளன. இந்நகரியத்தின் பரப்பளவு 12·5 சதுர மைல்கள். மக்கள் தொகை 43,058 நகரியக் குழுவின் மொத்த உறுப்பினர்கள் 26. இவற்றில் அரசு அலுவலர்கள் 14. அரசு அலுவலர் அல்லாதோர் 12. செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர், நகரியச் குழுவின் தலைவராக இருக்கிறார்.

நகராட்சிக்கும் (Municipality), நகரியத்திற்கும் (Township) உள்ள ஒரு வேறுபாடு. நகராட்சி, தேர்தலின் மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது; நகரியம் நியமன உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அங்கே ஆணையர் என்றால், இங்கே நிருவாக இயக்குநர்.

பணிகள் சீராக, சீக்கிரமாக நடைபெறப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை: 1. நியமனக் குழு 2. ஒப்பந்தக்குழு. 3. நகரமைப்புக் குழு. 4. வரி மேல் முறையீட்டுக் குழு 5. நிதிக்குழு. 5. பொதுப் பணிக் குழு. 7. பொதுச் சுகாதாரக்குழு. 8. கல்விக் குழு.

நல்ல நகரமென்றால் முதலில் போக்குவரத்துக்கென வசதியான சாலைகள் இருக்க வேண்டும். இதனை உணர்ந்த நகரியம் புதிய புதிய சாலைகளை அமைத்த வண்ணமிருக்கின்றன. தார்போட்ட சாலைகள் 4,480 கி.மீட்டரும், ஜல்லி போட்ட சாலைகள் 5,975 கி மீட்டரும், கிராவல் போட்ட சாலைகள் 2,425 கிலோமீட்டரும் ஆக 12,880 கி. மீட்டர் புதிய சாலைகள் 1971–72-ல் போடப்பட்டுள்ளன. இவற்றுக்காக ரூ. 92,636 செலவு செய்யப்பட்டுள்ளது. இதே ஆண்டுகளில் பராமரிக்கப்பட்டு வரும் மொத்தச் சாலைகளின் நீளம் 60,154 கி.மீ. இந்தப்

பராமரிப்புக்கு ஆன செலவு ரூ. 24,656. நகரியப் பகுதியினுள் சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை தவிர மற்ற சாலைகள் அனைத்தும் நகரியத்தாலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அறிவு ஒளிக்குக் கல்வியும், இருள் ஒளிக்கு விளக்கும் அவசியம் அன்றோ? 'இளமையிற் கல்' என்பதனைச் செயலாக்கவும், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதனை எடுத்துக்காட்டவும் கல்விச் சாலைகள் வேண்டும். இதனையும் நிறைவேற்றி வருகின்றது இந் நகரியம். இங்கே மூன்று உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளும், ஏழு துவக்கப்பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் சராசரி மொத்த எண்ணிக்கை 2,519. எல்லாப் பள்ளி ஏழை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று தொடங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது அறிவை வளர்க்கும் வகையில் நகரியம் சார்பில் குமரன் பூங்காவிலும், மங்களாபுரம் பூங்காவிலும் படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் நாளிதழ்கள், வார இதழ்கள் முதலியன வரவழைக்கப்படுகின்றன. இவை தவிர செங்கை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு நூலகமும், படிப்பகமும் நடத்தப்பட்டு வருகின்றது. செய்திகள் முதலானவற்றை அறிந்துகொள்ள 15 இடங்களில் வானொலிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் நிறைந்துள்ளதால், இரவு முழுவதும் தொழிலாளர் நடமாட்டம் இருக்கத்தானே செய்யும்? அதற்காக இந்தப் பகுதிகளில் இரவு முழுவதும் தெரு விளக்குகள் எரிந்திட நகரியம் வசதி செய்திருக்கிறது. நகரியக் குழு சார்பில் மொத்தம் 633 விளக்குகள் உள்ளன. மேலும் 203 விளக்குகளை அமைக்க நகரியம் மின்வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. 1971—72-ல் விளக்கு வசதிக்காக ரூ. 45,675 செலவிடப்பட்டுள்ளது. மின் சார விநியோகம், மின் விளக்குகள் பராமரிப்பு ஆகியவை தமிழ்நாடு மின்வாரியப் பொறுப்பில் உள்ளது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

நகரம் நலமுடன் திகழப் பொதுச் சுகாதாரம் மிக்க அவசியமன்றோ?

கடந்த திங்களின் போது சென்னையில் காலரா நோயினால் பாதிக்கப்பட்ட ஏராளமான பேர்களுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டதை நாம் அறிவோம். அதே போன்று அக்காலங்களில் இந்நகரியப் பகுதிகளிலும் நாள்தோறும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு வந்துள்ளன.

வந்த நோயைக் காக்கவும், வரும் நோயைத் தடுக்கவும் மருத்துவமனை மிக முக்கியமன்றோ? நகரியக் குழுவால் ஒரு பகுதி நேர மருத்துவ மனை ஒன்றும், மகப்பேறு மருத்துவ மனை ஒன்றும் இயங்கி வருகின்றது. தொழிலாளர் நலனுக்காக மாநிலத் தொழிலாளர் காப்பீட்டு மருத்துவ மனை ஒன்றும், தனியார் துறையில் இவான் ஸ்டேட் போர்ட் மருத்துவமனை ஒன்றும் இப்பகுதியில் இயங்கி வருகின்றது. இது பொது மக்களுக்கும் பயனளித்து வருகின்றது.

துப்புரவுப் பணிகளின் மூலம் 1971—72-ல் 399 டன் உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 51 டன் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர்களுக்காகக் குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வருகின்றன.

*தண்ணீர்!*

தலையாயப் பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. இதனை முழு அளவில் தீர்த்து வைப்பது எத்தனை அரிய செயல் என்பது ஊராட்சி, நகராட்சி, நகரியம் போன்றவைகளின் விடா முயற்சியிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. இந்நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதியளிப்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதற்காக ரூ. 80 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பெற்று அதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவை தவிர இந்நகரியத்தில் மொத்தம் 6,235 தனியார் கிணறுகளும், 44 பொதுக் கிணறுகளும் உள்ளன. மின்சாரம் மூலம் தண்ணீர் இறைக்க 13 பம்பு இல்லங்களும் இந் நகரியத்தால்பராமரிக்கப்பட்டு வருகின்றன. பாதாளச் சாக்கடைத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.



நகரியத்துக்கு வருவாய்தரத்தக்க தொழில்கள் பெரிய அளவில் ஏதுமில்லை என்றாலும், சிறிய அளவில் காய்கறி, இறைச்சி அங்காடி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ரூ. 1,122.75 வருமானம் கிடைத்து வருகிறது.

மேலும் இந்நகரம் புதுப் பொலிவும், வலிவும் பெற பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினரால் நகரியப் பகுதியில் வீடு கட்டும் திட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. நகரமைப்புத் திட்டங்கள் போன்றவை இத்தகைய வளர்ச்சிப் பணிகளுக்குப் பெருந்துணை புரியும் என்று நிச்சயமாக நம்பலாம்.

நகரிய ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்ட ரூ. 80 ஆயிரம் செலவில் பணிகள் நடந்து வருகின்றன. இது மூன்று திங்களில் முடிந்துவிடும். ரூ. 30,400 செலவில் துப்புரவுப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1973—74-ல் அலுவலகம், குடியிருப்புகள் போன்ற கட்டடங்கள் கட்ட ரூ. 3,10,000 ஒதுக்கப் பெற்றுள்ளது. சாலைகள் அமைக்க ரூ. 5,00,000ம், படிப்பகங்கள் அமைக்க ரூ. 25,000ம், துப்புரவுச் சாதனங்கள் வாங்க ரூ. 2,50,000ம், தண்ணீர் வழங்கிட ரூ.4,00,000ம், அங்காடிகள், பேருந்துநிலையம் கட்ட ரூ. 2,35,000ம், துவக்கப் பள்ளிகள் கட்ட ரூ. 3,40,000ம் தொகைகள் ஒதுக்கப் பெற்றுள்ளன.

இந்த எதிர்காலப் பணிகளெல்லாம் முழுமை பெற்றால், அம்பத்தூர் ஏற்றமும் தோற்றமும் பெற்ற எழில் நகராக—தொழில் நகரமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி.வி.ஜி.

# உழவனின் தோழன்

உழவே தலை!

இது உலகம் உணர்ந்த உண்மை!

உழவைப் பெருக்கி உலகைக் காக்கும் உன்னதமான தொழிலைப்பற்றி வான் புகழ் வள்ளுவர் கூட, 'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்' என்று உணர்த்தியிருக்கிறார்.

'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற புரட்சித் திட்டம் புத்தொளி பெற்றிட உழவனுக்குப் போதிய உதவிகள் நாம் புரியவேண்டும். இதனை உணர்ந்த தமிழக அரசு உழுபவனுக்குப் பலப்பல உதவிகளைச் சலுகைகளைத் தவறாமல் வழங்கி வருகின்றது.

தமிழகம் முழுதுமுள்ளகிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களும் உழவர் பெருங்குடி மக்களுக்கு ஏற்ற வகையில் உதவிகள் பல புரிந்து வருகின்றன. அவற்றுள் ஒன்றுதான்செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நூம்பல் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், செங்கற்பட்டு மாவட்டத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கமாக நூம்பல் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தைத் தமிழக அரசு அங்கீகரித்து, விவசாயக் கிடங்கு கட்ட ரூ. 36,000 அனுமதி அளித்துள்ளது. இதுபோல் தமிழ் நாட்டில் பிற மாவட்டங்களில் 16 விவசாயக் கிடங்குகள் கட்டவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.




ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிடங்கு கட்டத் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாறு செங்கற்பட்டு மாவட்டத்தில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பரிந்துரை செய்யப்பட்ட நூம்பல் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் ஒன்றுக்குத்தான் இந்த நிதியுதவி கிடைத்திருக்கிறது.

கிடங்கு கட்டுவதற்காகத் தமிழக அரசு அளிக்கும் உதவி ரூ. 18,750; கடன் ரூ.11,250 இதோடு கூட்டுறவுச் சங்கம் ரூ. 6,000 சேர்த்து ரூ.36,000, செலவில் விவசாயக் கிடங்கு கட்டப்படும். இப்பணி இவ்வாண்டு சூலைத் திங்களில் ஆரம்பிக்கப்படுகிறது. ஓராண்டுக்குள் கட்டடப்பணி முடிந்துவிடும்.

இந்தக் கிடங்கினால் உழவர்களுக்கு என்ன நன்மை?

நாம் பல வகைகளில் சேமிக்கிறோம்; எதிர்கால நல்வாழ்வுக்காகச் சேமிக்கிறோம். பணத்தைமட்டுமின்றி உணவுத் தானியங்களையும் சேமிக்கும் பழக்கம் ஒரு சிறந்த பழக்கம் என்பதை உழவர்களுக்கு எடுத்துக்காட்டவும், அவர்களின் வருங்கால வாழ்வுக்கு வழி வகுக்கவும் இந்தக் கிடங்கு பயன்படும்.

ஏழை உழவனுக்கென்று உணவு தானியங்களைச் சேமிக்க இடமிருக்கிறதா? இவற்றைச் சேமிக்க இடவசதி இல்லாததால்தானே மழைக்காலத்தில் அவர் உழைத்த உழைப்பெல்லாம் வீணாகிறது? இக்குறை.

# ஒழித்துக் கட்டுவீர் பூஞ்சண நோயை! பன்மடங்கு ஓங்கச் செய்வீர் பருத்தி விளைச்சலை. உறுதுணை புரிவது இண்டோ:பில் டைத்தேன் M-45



பருத்தி நோய்கள் பலவற்றைத் ' ு, பயிர் விளைச்சலைப் பன்மடங்காக்குவ ، புகழ் பெற்ற பூஞ்சணங்கொல்லி: இணடோ:பில் டைத்தேன் M-45. பயிர்களின் நலனை எவ்வகையிலும் பாதிக்காமல், நீடித்திருந்து காக்கும் திறனுள்ளது. வளப்பமான பருத்தி விளைச்சலுக்கு வாய்ப்பானது டைத்தேன் M-45 உங்கள் தேவைகளுக்கு இண்டோ:பில் விற்பனையாளரோடு தொடர்பு கொள்வீர்.

**இண்டோ:பில்—பசுமை நிறைந்த எதிர்காலத்திற்கு**




**இண்டோ:பில் கெமிக்கல்ஸ் லிமிடெட்,**

பம்பாய்-25

® டைத்தேன் M-45. மற்றும் :ப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனியின் ட்ரேட் மார்க்குகளாகும். இவை யூ எஸ். பேடெண்ட் ஆபீஸ் மற்றும் இதர நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IF 6212

யைப் போக்குகிறது விவசாயக் கிடங்குகள்.

நெல், கேழ்வரகு, வேர்க்கடலை போன்ற தானியங்களைப் பாதுகாக்கவும், தேவையான விதை நெல், பூச்சி மருந்து, மேல்உரம், அடி உரம் இவைகளை விற்பனை செய்யவும் இந்தக் கிடங்கு தக்க உதவிகளைச் செய்யும். விவசாயிகளின் விரோதிகளான எலி, கரப்பான்பூச்சி, அந்துப்பூச்சி போன்றவைகள் தானியங்களை அழிக்காமல் பாதுகாக்கவும் அந்தச் சமயத்தில் சுகாதார முறைப்படிப் பார்த்துக் கொள்ளவும் இந்தக் கிடங்குகள் பயன்படுகின்றன.

கிடங்கு வசதி இல்லாத உழவர்கள், அறுவடைக்காலங்களில் உணவுப் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்கின்ற அவல நிலையைக் களைந்திடவும், அடி உரம், மேல் உரம் போன்றவைகளைக் கள்ளச் சந்தையில் வாங்குவதைத் தடுக்கவும் சங்கம் வகை செய்கிறது. குறித்த காலத்தில் குறித்த நேரத்தில், குறைந்த விலையில் உரங்கள் கிடைக்கவும் சங்கம் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

விளைச்சலைப் பெருக்கும் வகையில் உழவர்களுக்குக் கடன்கள் கொடுத்தும் உதவுகிறது சங்கம். ஒரு ஏக்கர் நெற்பயிர் செய்யும் விவசாயிக்கு ரூ. 500 கடன் அளிக்கிறது. பணப்பயிர்களான வாழை, கரும்பு ஆகியவற்றை பயிர் செய்பவர்களுக்கு ரூ. 600, ரூ. 900 என ஒரு ஏக்கருக்குக் கடன் வசதி செய்கிறது. நெற்பயிருக்கு ரூ. 250 விதைநெல், பூச்சி மருந்து, அடி உரம், மேல் உரம், இவற்றுக்கு ரூ. 250 ஆக ஒரு ஏக்கர் நிலத்திற்கு ரூ. 500 கடன் அளிக்கப்படுகிறது. கணவன் மனைவி இருவரும் சேர்ந்து ஒரு குடும்பத்திற்கு அதிகமாக ரூ. 10,000 வரை பிணையம் (ஜாமீன்) மீது கடன் தரப்படுகிறது. கரும்பு, நெல் இரண்டும் சேர்ந்து பயிர் செய்யும் குடும்பத்திற்கு ரூ. 15,000 வரை கடன் தரப்படுகிறது. கடன்கள் மூன்று வகையில் அளிக்கப்படும். (1) குறுகியக் காலக் கடன், (2) மத்தியக் காலக் கடன், (3) நீண்டகாலக் கடன்.

கடன்களைக் குறித்த காலத்தில் செலுத்தியவர்க்கு உடனே கடன் வசதி செய்யப்படும்.



கடன்களைக் குறித்த காலத்தில் செலுத்தியவர்க்கு உடனே கடன் வசதி செய்யப்படும். கடன்கள் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் 10 திங்களுக்குள் வசூல் செய்யப்படும். இதுவரை ஒரு இலட்சம்ரூபாய் வரை கடன்கொடுக்கப்பட்டிருக்கிறது.

1962-ல் துவக்கப்பெற்ற இந்தச் சங்கம் முதலில் 'பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்' என்றபெயரில் இயங்கிவந்தது. இப்போது இதன் தலைவர் திரு. மு. இராமச்சந்திரன் நல்ல உழைப்பாளர், இளைஞர், விடாமுயற்சி இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதற்கு இச்சங்கத்தின் நற்பணிகளே சான்று பகரும்.

உழவனுக்குத் தோழனாக இருந்து, உற்பத்தியில் தன்னிறைவைக் காணும் வகையில் உதவிகள் பலபுரிந்து வரும் இந்தச் சங்கம், பசுமைப் புரட்சித் திட்டம் மேலும் பல வெற்றிகளைக் குவிக்க விரைந்து பணியாற்றுவதைப் பாராட்டவேண்டும். —பி.வி.ஜி.


## மைய கூட்டுறவு வங்கி லிமிடெட், வேலூர்

(வட ஆற்காடு மாவட்டம்)

*சேமிப்பு சிறந்த பழக்கம். சேமிப்பதோ சிக்கலான பணி. உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தாருக்காகவும் மட்டுமின்றி நாட்டின் நலனுக்காகவும் சேமிப்பு மிகவும் அவசியம்.*

## வேலூர் மையக் கூட்டுறவு வங்கி

வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள எல்லாப் பகுதிகளையும் ஒருங்கிணைத்து 32 கிளைகளின் மூலமாக அவரவர் வருமானத்துக்கும், பழக்கத்துக்கும் ஏற்ற வகையில் பல சேமிப்புத் திட்டங்களை அறிமுகப் படுத்திச் செயலாற்றி வருகிறது.

உங்கள் சேமிப்பு, எங்கள் வங்கியில் ஏதாவதொரு திட்டத்தில் சேர்வதின் மூலம் முதலீடு செய்யுங்கள். அது உங்கள் நிலையினை உயர்த்திட உதவுவதுடன், வங்கியின்நிலையினையும் மாவட்ட உழவர் பெருங்குடி மக்களின் நிலையினையும் அதன் மூலம் தமிழகத்தின் நிலையினையும் உயர்த்திட வழிகோலும்.

உங்கள் தேவைக்கு உதவிடக் காத்திருக்கும் எங்கள் வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் பணியாற்றும் பணியாளர்களைத் தயவு செய்து அணுகுங்கள்.

முல்லை பொ. வடிவேல்,
பெருந்தலைவர்.

ஆர். செல்வன், *பி.எல்.பி., பி.காம்.,*
செயலாளர்.

பி. எஸ். சந்தானம்,
துணைத் தலைவர்.

கே. நடராசன், *பி.காம்.,*
தலைமை நிர்வாக அதிகாரி.


வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) — வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5 — ரூ. 355
ரூ. 10 — ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5 — ரூ. 337.50
ரூ. 10 — ரூ. 675.00
தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்கும் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

கடந்த ஆண்டு ஏப்ரல் முதல், டிசம்பர் வரையிலான 9 மாதக் காலத்தில் சுமார் 82 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள, குளிர் சாதனங்களையும் குளிர்பதனப் பெட்டிகளையும் இந்தியா ஏற்றுமதி செய்திருக்கிறது. 1971–72–ல் இந்தச் சாதனங்களின் ஏற்றுமதி மூலம் 85 இலட்சம் ரூபாய் கிட்டியுள்ளது. 1970–71–ல் இந்தச் சாதனங்களின் ஏற்றுமதி 61 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் என்ற அளவில்தான் இருந்தது.

1972 ஏப்ரல் டிசம்பர் மாதங்களில் குளிர்பதனப் பெட்டிகள், உதிரி உறுப்புகள் ஏற்றுமதி அதிகமாக்கப்பட்டது. இப்பொருட்களின் ஏற்றுமதியால் 35 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அந்நியச்செலாவணி கிடைத்தது. குளிர் சாதனம் குளிர்பதன இயந்திரங்கள் ஏற்றுமதியின் மூலம் 26 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அளவும், குளிர் சாதனங்கள, உதிரி உறுப்புக்களின் ஏற்றுமதி மூலம் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், நீர் குளிர்விக்கும் சாதனங்கள், உதிரி உறுப்புக்கள் ஏற்றுமதி மூலம் 10 இலட்சம் ரூபாயும் நமக்கு அந்நியச் செலாவணி கிடைத்தது.

போலந்து, ஈரான், நைஜீரியா, குவாயத், எகிப்திய அரபுக் குடியரசு ஆகியவை நமது குளிர் பதனப் பெட்டிகளை அதிகம் வாங்குகின்றன. இந்தியக் குளிர்சாதனம், குளிர் பதன இயந்திரங்களைச் சிங்கப்பூர், எகிப்திய அரபுக் குடியரசு, ஸ்ரீலங்கா, மலேசியா, துபாய், மஸ்கட், அங்கேரி, ஆகிய நாடுகள் அதிக அளவில் வாங்குகின்றன. குளிர் சாதனங்களும் உதிரி உறுப்புக்களும் முக்கியமாக துபாய், அபுதாபி, நைஜீரியா, போலந்து நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

1973ஆம் ஆண்டில் 10,000 அதிகாரிகள், 24,000 எழுத்தர்களுக்கும் பல்வேறு பயிற்சி வசதிகள் அளிப்பது என்று அரசுத்துறை வங்கிகள் முடிவு செய்துள்ளன. பயிற்சித் திட்டத்தின் வளர்ச்சி பற்றிக் காலாண்டுக் காலத்துக்கு ஒரு முறை ஒவ்வொரு அரசுத்துறை வங்கியின் இயக்குநர்கள் வாரியமும் ஆய்வு செய்யும் என்று வங்கி இயக்குநர்கள் குழு நிச்சயித்துள்ளது.


வங்கிகளின் ஊழியர்கள் பட்டியல் தயாரிப்பது, பயிற்சி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது, அரசுத் துறை வங்கிகளின் நிர்வாகத் துறை அமைப்பது முதலிய பொருள்களையும் இக்குழு வலியுறுத்தியுள்ளது.

# இந்தியாவில்

இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில்
நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாக, எண்
ணெய் நிலவாயுக் குழு, எண்ணெய் அல்லது
நிலவாயு கிடைக்கக்கூடிய 14 இடங்களைக்
கண்டுபிடித்திருக்கிறது. எண்ணெய் வளம்
நிறைந்த இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக
நாட்டில் வாய்ப்பு உள்ள இடங்களில் பற்பல
ஆய்வுகள் நடந்து வருகின்றன. இந்த இடங்
களில் நில அதிர்வு ஆய்வுகள் நடத்தி எண்
ணெய் வாய்ப்புப் பற்றி மேலான தகவல்கள்
பெறுவதற்காக இந்தக் குழு, நில அதிர்வுச்
சாதனங்கள் போன்ற மிக நவீன கருவிகளை
இறக்குமதி செய்துவருகிறது. நில அதிர்வு
ஆய்வின் மூலம் எண்ணெய் கிடைப்பதற்கு
வாய்ப்பு இருப்பதாகத் தெரிந்தால் அந்த இடங்
களில் எண்ணெய்க் கிணறுகள் அகழ்வதற்குக்
குழு நடவடிக்கை மேற்கொள்கிறது.



இந்திய எண்ணெய் நிறுவனம் கடந்த
ஐந்து ஆண்டுகளில் 64 கிணறுகள் தோண்டி
யிருக்கிறது. இந்த எண்ணெய்க் கிணறுகள்
தோண்டுவதில் கிடைத்துள்ள அனுபவமும்,
எண்ணெய் உற்பத்தி விவரங்களும், இந்திய
எண்ணெய் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்
டுள்ள பகுதிகளில் எவ்வளவு எண்ணெய்
தோண்டி எடுக்க முடியும் என்று மதிப்பிடு
வதற்கு உதவியிருக்கின்றன.



இந்திய எண்ணெய் நிறுவனத்தின் தொலை
நோக்குத் திட்டங்கள் 1973 முதல் 1979 வரை
யிலான 7 ஆண்டுத் திட்டத்தின் அடிப்படை
யில் அமைந்திருக்கின்றன. இந்தக் காலத்தில்
60 எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டுவதற்
குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவற்றில்
பெரும்பாலானவை, எண்ணெய் வள ஆராய்ச்
சிக்காகத் தோண்டப்படுபவையாகும்.
ஆண்டுக்கு 30 இலட்சம் டன் என்ற அளவில்
கச்சா எண்ணெய்யை உற்பத்தி செய்வது
இந்திய எண்ணெய் நிறுவனத்தின் நோக்க
மாகும்.



# அவருக்கென்று ஓர் ஆலயம்

பத்தூர் மகாலிங்கம்

சிகாமணியை உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க முடியாது. உங்களுக்கென்ன? அவர் வசிக்கும் தெருவிலுள்ள வர்களுக்குக் கூட வாலிபப் பருவத்தில் அவரை அதிகம் தெரியாது. அந்த அளவுக்கு அடக்கமான மனிதர் அந்தக் காலத்தில்தான்!

அடக்கமா அது?

நாம் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அப்பொழுதெல்லாம் சிகாமணிக்கு அதுதான் கொள்கை, அறநெறி, வாழும் முறை.

உங்களுக்கு இன்னும் புரிய வில்லையா? சிகாமணியின் பக்கத்து வீட்டுக்காரருக்கே அது புரியாதே! அவர் ஒரு 'டைப்'. சாதாரண 'டைப்' இல்லை, காரியக்கார 'டைப்'.

காரணம் இதுதான்—

இயற்கையிலே வசதியான குடும்பத்தில் பிறந்தவர். யாருடனாவது அதிகமாகப் பழகினால் கையிலுள்ள பணம் போகுமோ.... கடன் கேட்பார்களோ என்று நினைப்பார். ஆனால், பணத்தைச் சேர்ப்பதில் மட்டும் அபரிதமான சுறுசுறுப்பு உடையவர். அவருக்குத் தகுந்தாற் போல வளமான நிலம்.... தோட்டம், கோயில் நிலம் குத்தகை வேறு.

தானுண்டு தனது பணப் பெட்டி உண்டு என்றிருப்பவர். தம் மனைவி மங்களத்திடம் கூட அதிகம் பேச மாட்டார். பேசினால் எங்கே அதிகம் செலவு வைத்து விடுவாளோ என்று அஞ்சி நடப்பவர். மனைவியிடம் அதிகம் பேசாவிட்டாலென்ன? மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டார். 'சிகாமணியின் பாடு குழந்தைகள் பாடு' என்று மங்களமும் சீக்கிரமே கண்ணை மூடி விட்டாள்.

சிக்கன சிகாமணிக்கு மூன்று குழந்தைகளை வளர்ப்பதுவும் சிரமமாகத்தான் இருந்தது. எப்படியோ வளர்த்து விட்டார்.

'துப்பாக்கிக்குப் பிறந்தது பீரங்கியாகத்தான் இருக்கும்' என்பார்களே அதுபோல 'டைப் பாய்க்குப் பிறந்தது 'டேபிளா'கவே இருந்தது. ஆமாம், சிகாமணியின் மூன்று பிள்ளைகளும் அப்பாவை மிஞ்சியவை. ஆனால் மூன்று பிள்ளைகளும் ஆளுக்கொரு விதம்.

வளர்ந்து பெரியவர்களாகி விட்டார்கள். வழக்கமான திருமண வைபவத்தை சிகாமணியே செய்து முடிப்பதற்குள் மூவரும் தேடிக் கொண்டனர். அல்லது முடித்துக் கொண்டனர்.

மூவரும் தம்தம் குடும்பங்களுடன் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தி வரும் போதுதான் இகழ்ச்சிப் பொருளாக்கப்பட்டார் சிகாமணி.

அது வழக்கமான குடும்ப நிகழ்ச்சி அல்ல!

பெற்ற பிள்ளைகளே அப்பாவை எட்டி நின்று பேசச் சொன்னார்கள்.

காலத்தின் கோலம் எப்படி விசித்திரமாக அமைந்து விட்டது.

அப்பொழுது எல்லாம் மற்றவர்களைக் கண்டு ஒதுங்கி ஒதுங்கிச் சென்ற சிகாமணி இப்பொழுது எல்லாம் நெருங்கி நெருங்கிச் சென்று பேச விரும்பினார்.

ஆனால் மற்றவர்களோ சிகாமணியைக் கண்டு விட்டால் ஒதுங்கி ஒதுங்கி ஓடினார்கள் அல்லது பதுங்கி மறைந்தார்கள்.

காரணம்—

தொழு நோய்க்காரராக சிகாமணி மாறியதுதான்! உடல் முழுதும் அந்நோயின் அடையாளச் சின்னங்களைத் தாங்கி வலம் வருபவரை வரவேற்றுப் பேசிக் கொண்டிருப்பார்களா மற்றவர்கள்.

ஊரார்தான் இப்படி, வீட்டுக்கு வந்த மாதரசிகளோ கேட்க வேண்டும்.

மாமனாரைக் கண்டவுடன் இஞ்சித் தின்ற மந்தியின் முகமாக மாறிவிடும்.

மூத்தவன் முருகனின் மனைவி மனோகரி இருக்கிறாளே சரியான உபகாரி— மாமனாரை மாட்டுத் தொழுவத்துப் பக்கத்திலே உள்ள கொட்டடியிலேயே குடியேற்றி விட்டாள்.

இரண்டாவது மகன் கனகசபையின் மனைவி கல்யாணியோ மாமனார் வீட்டுக்குள் நுழைந்து சாப்பிடுவதைக்கூட விரும்பவில்லை. சிகாமணி வீட்டுக்குள் நுழைந்தால் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சுவார். அவருக்குள்ள நோயும் குழந்தைகளுடன் கொஞ்சுமென்று விளக்கம் தந்தாள்.

விளக்கத்தின் விளைவு?

ஊர்க் கோடியிலிருக்கும் டீக் கடையில்தான் சிகாமணிக்கு உணவு, அதுவும் வெளியே இருந்துதான் சாப்பிடணும்.

மீதி நேரத்திலே எல்லாம் சிகாமணி மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்திலுள்ள கொட்டடியில் அடைபட்டு கிடப்பார்.

வேறு யாருடைய கண்ணிலும்படக்கூடாது என்பது சிகாமணியின் முடிவு. ஓடியாடி எல்லாருடன் பழக வேண்டிய பருவத்திலேயே அடைந்து கிடந்தவருக்கு இப்பொழுது அடைந்து கிடப்பதில் அவதி ஏதும் தெரியவில்லை.

ஆனாலும் அவருக்கிருந்த மனக்குறை—

தனது பிள்ளைகளும் மனைவி மார்களின் பேச்சுக்கேற்ப ஆடுவதும் தன்னை அலட்சியப் படுத்தி ஒதுக்கியதும்தான்.

ஆனால், மைந்தர்கள் மூவரும், ''மனைவி சொல் மிக்க மந்திரமேதுமில்லை'' என்ற நீதியின் படி நடக்கும் ஞான சிகாமணிகள், ஆமாம் சிகாமணியின் செல்வர்களாச்சே..,

இந்த விஷயங்கள் இப்படியிருந்தாலும் சிகாமணியின் கெட்டிக்காரத்தனம் ஒன்று— அவருக்கென்று பணத்தை யாருக்கும் தெரியாமல் அவர் பெயரில் வைத்துக் கொண்டது.

அந்தப் பணம் சிகாமணியின் கையில் இருக்கும் அந்தஸ்து காரணமாகவே அந்த வீட்டின் பின்புறத்தில் இருக்க சிகாமணிக்கு அனுமதி அளித்தனர் மருமகளாக வந்திருக்கும் மாதரசிகள்.

இந்தஉண்மை சிகாமணிக்குத் தெரியும். தெரிந்தும் அவரால் என்ன செய்ய முடியும்? இப்போழுது தான் எல்லாரிடமும் பழக வேண்டும். பேச வேண்டும் என்ற ஆசை சிகாமணிக்கு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது.

சிகாமணியின் மூன்றாவது மகன் சகாதேவனின் மனைவி ரேவதி உண்மையிலேயே கெட்டிக்காரி. வீட்டிலே யாவருக்கும் தெரியாமல் அடிக்கடி வந்து சிகாமணியிடம் பேசுவாள்.

ரேவதியின் அப்பா ஒரு நியூஸ் பேப்பர் ஏஜெண்ட். அதனாலோ என்னவோ உலக விஷயங்களை எல்லாம் சிகாமணியிடம் சொல்லுவாள். எப்படியாவது சிகாமணியிடம் இருக்கும் பணத்தைப் பெற்றிடவேண்டும். அந்தப் பணம் எவ்வளவு இருக்கும்? அவை எப்படியாவது மற்றவர்களுக்குப் பங்கில்லாமல் தானும் தனது கணவரும் வாங்கிட வேண்டும் என்பது தான் ரேவதியின் குறிக்கோள்.


பாசத்தைவிட பணம்தான் பெரியது என்பதை தன் நோயின் மூலம் அறிந்த சிகாமணியும் ரேவதியின் உள் நோக்கத்தை ஓரளவு புரிந்து கொண்டார். ஜாக்கிரதையுடன் பதிலுரைப்பார்.

ரேவதி வந்து சொல்லுவாள்—

''மாமா உங்களுக்குச் சேதி தெரியுமா? நம்ப அரசாங்கம் தருமபுரி மாவட்டம் பருகூரிலே தொழு நோயாளிகளுக்காக மறுவாழ்வு இல்லம் கட்டியிருக்காங்க.... ஆமா ஆமாம். உங்களை அங்கே சேர்த்துக்குவாங்களோ என்னவோ ஆதரவு இல்லாதவங்களை அங்கே சேர்ப்பாங்க........ உங்களுக்கு நாங்கள் இல்லையா? உங்களிடம்தான் பணமில்லையா? ஏன் மாமா தனியா நீங்கள் எவ்வளவு பணம் வைத்திருப்பீங்க....?

சிகாமணி சர்வ ஜாக்கிரதையுடன் பேச்சைமாற்றி,''போன ஜென்மத்திலே செய்த வினைகளை அனுபவிக்கின்றேன்.... இந்த ஊர்லே பிறந்தவன் இந்த மண்ணிலே மறைஞ்சிடுறேன்'' என்பார்.

சிகாமணியின் இந்த மறுமொழிகளால் ரேவதி மனந் தளர்வதில்லை.



மறுநாள் யாருக்கும் தெரியாமல் ஓடி வருவாள் ரேவதி.

"மாமா, செங்கல்பட்டு மாவட்டத்திலே பரனூர் என்ற ஊரிலே...." அவள் தொடர்வாள்.

சிகாமணியின் வாயிலிருந்து வழக்கமான பதில் தான் வரும்.

இப்படித்தான் புதுப்பட்டி, புதுக்கோட்டை, உளுந்தூர்ப்பேட்டை, மணியேறிப்பட்டி, மல்லவாடி என்று ஒவ்வொரு தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களைப் பற்றியும் செய்திகளைச் சொல்லிக் கடைசியில் தனக்குச் சாதகமான பதிலை எதிர்பார்ப்பாள்.

தன் மனைவி மங்களத்திடமே அதிகம் வார்த்தை பேசாமல், ஏமாறாமலிருந்த சிகாமணி மருமகளிடமா ஏமாறுவார்.

ஆனால் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் எங்கெங்கே தொடங்கப்பெற்றிருக்கின்றன என்றவிவரத்தைக் கவனமாகக் கேட்க ஆரம்பித்தார். அங்கே என்ன செய்யுறாங்க...... என்ன சிகிச்சை அளிக்கிறாங்க.... என்னென்ன தொழில் கற்றுக் கொடுக்கிறார்கள் இந்த விவரத்தை எல்லாம் கேட்பார்.

டீக்கடைக்குச் சாப்பிடப் போகும்போது பக்கத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடைக்குச் சென்று பேப்பர் வாங்கி ஆவலோடு படிப்பார்.

இப்படி நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

● ● ●

ஒருநாள் பேப்பர் கடைக்காரரும் மற்றவர்களும் ஆவலோடு வரவேற்றனர், போட்டோ ஸ்டூடியோ ஆள் ஒருவர் வந்து படம் எடுத்தார். யார் யாரோ இதுவரை சிகாமணியைக் கண்டு நெருங்காதவர்கள் எல்லாம் மிகுந்த நெருக்கத்துடன் வந்து பேசினார்கள். என்னென்னவோ கேட்டார்கள்.

சிகாமணிக்கு உலகத்தின் உயிர்நாடி புரிந்தது.

வீட்டுக்கு வந்து யாரிடமும் எதுவும் சொல்லாமல் கொட்டடியில் அடைக்கலம் புகுந்தார். வெகுநேரம் யோசனை செய்து கொண்டிருந்தார். நள்ளிரவுக்குப் பின்தான் தூங்கினார். விடியற்காலை வெகு நேரம் வரை எழுந்திருக்கவில்லை.

● ● ●

சிகாமணியை அவர் மூத்த மகன் முருகனும், அவன் மனைவி மனோகரியும் வந்து எழுப்பினார்கள். மனோகரி கையில் காப்பியுடன் நின்று கொண்டிருந்தாள்.

சிகாமணிக்கு எல்லாம் புரிய ஆரம்பித்தது.

இரண்டாவது மகன் கனகசபையும் அவன் மனைவி கல்யாணியும்சிகாமணியைவீட்டுக்குள் அழைத்தார்கள். கனகசபை அப்பாவின் கையைப் பிடித்துவீட்டுக்குள்அழைத்துச் சென்றான்.

மூன்றாவது மகன் சகாதேவனும் தந்தை குளிப்பதற்கு ஏற்பாடு செய்தான். மருமகள் ரேவதி சிகாமணிக்கு சிற்றுண்டி பரிமாறத் தயாராக இருந்தாள்.

பிள்ளைகள், மருமகள்கள் ஆகியோரின் 'திடீர் பாசத்தை' உணர்ந்த சிகாமணியும் அவர்கள் விருப்பப்படியே நடந்தார்.

பிள்ளைகளுக்கு அப்படி திடீர் பாசமும் பற்றும் வரக் காரணம் என்ன?

அன்று பத்திரிகையில் வந்திருந்த சிகாமணியின் புகைப் படம் தான்.

சிகாமணியின் படத்தோடு அவருக்குத் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டில்இலட்சம்ரூபாய் பரிசு கிடைத்ததையும் போட்டிருந்தார்கள்.

செய்தித்தாள் வாங்க கடைக்குப் போன பொழுது ஒருநாள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டையும் வாங்கியிருந்தார், சிகாமணி. அதற்குத்தான் முதல் பரிசு கிடைத்திருக்கிறது.

ஆகவே, தீண்டப்படாதவராகக்கருதப்பட்டசிகாமணிக்கு வீட்டில் திடீர் மதிப்பு மரியாதை. புதல்வர்களின் அன்பிலும் மருமகள்களின் உபசரிப்பிலும் மகிழ்ந்தார்.

இரண்டு நாட்கள் இப்படி ஓடியது.

மூன்றாவது நாள் வீட்டை விட்டு வெளியே போன சிகாமணி வீட்டுக்குத் திரும்பவில்லை. தந்தையைக் காணாமல் புதல்வர்கள் துடிதுடித்தார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில் மீண்டும் சிகாமணியின் படத்துடன் செய்திகள் வெளிவந்திருந்தன.

சிகாமணி என்ற தொழுநோயாளி தனக்குத் தமிழ்நாடு பரிசுச் சீட்டு மூலம் கிடைத்த முதல் பரிசுத் தொகை முழுவதையும் தமிழ்நாடு அரசு பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளித்து விட்டார். அத்துடன், இதுவரை அவர் சேர்த்து வைத்திருந்த ரூபாய் முப்பதாயிரத்தையும் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களுக்கு அளித்து விட்டார்.

இனிமேல் மறுவாழ்வு இல்லங்களில் தங்கி கைத்தொழில்கள் கற்று வாழப் போவதாகவும் சிகாமணி தெரிவித்தார். மறுவாழ்வு இல்லமே தமது ஆலயமென்றும் அவர் கூறினார்.

### எழுத்தாளன் என்பவன் யார்?

எழுத்தாளனைப் பற்றி மூன்று மேலைநாட்டு அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

"எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டுமிருந்தால் போதாது; சரக்கும் இருக்க வேண்டும்" என்கிறார் எமர்சன்.


பிரான்டீஸ் என்னும் அறிஞர் கூறுகிறார்: "எழுத்தாளன் தொழில், மிகுந்த மேன்மையுடையது".

"ஆபாச விஷயங்களை எழுதாதிருப்பதே ஆசிரியனுக்குரிய கற்பாகும்" இவ்வாறு கூறுவது அறிஞர் மாண்டன்.

தபால் பெட்டி எண் : 3

தொலைபேசி எண் : 214

தோற்றம் : 1910



# ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட், நெ. 378, திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

தலைவர் : திரு எம். ராமதாஸ் முதலியார், பி.ஏ., பி.எல்.

*(தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப்பாங்குக்குச் சென்னை மாநில அரசு 1964-லும், தமிழக அரசு 1970-லும் கேடயங்கள் வழங்கியுள்ளன.)*

புள்ளி விவரங்கள் : 30–6–1973-ல் உள்ளபடி.

( SUBJECT TO AUDIT )

| | | |
|---|---|---|
| மெம்பர்கள் ... ... ... ... | ரூ. | 13,581 |
| பங்குத் தொகை ... ... ... ... | ரூ. | 10,02,464 |
| டெப்பாசிட்டுகள் ... ... ... ... | ரூ. | 55,71,308 |
| கடன்கள் ... ... ... ... | ரூ. | 49,53,749 |
| 30–6–1973 உடன் முடிந்த ஒரு வருஷ நிகர லாபம் ... | ரூ. | 1,79,528 |

*கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்சட் டெப்பாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.*

| | | |
|---|---|---|
| 3 மாத கெடுவிற்கு ... ... ... | 5 % | P.A. |
| 6 ,, ,, ... ... ... | 5½% | P.A. |
| 12 ,, ,, ... ... ... | 6¼% | P.A. |
| 24 ,, ,, ... ... ... | 6¾% | P.A. |
| 36 ,, ,, ... ... ... | 7¼% | P.A. |
| 48 ,, ,, ... ... ... | 7½% | P.A. |
| 60 மாத கெடுவிற்கும் அதற்கு மேலும் ... | 8 % | P.A. |

*ரூ. 5,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெப்பாசிட்டர்கள் விரும்பினால் மாதாந்திர வட்டி வழங்கப்படும்.*

| | | |
|---|---|---|
| கால் டெப்பாசிட் ... ... ... | 4½% | P.A. |

*பாதுகாப்புப் பெட்டக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

விவரங்களுக்குக் காரியதரிசிக்கு எழுதவும்.

# மாவட்டங்களிலிருந்து...

தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகின்றது. வேளாண்மை, கல்வி, தொழில்வளம் போன்றவை நாளுக்கு நாள் வளம்பெற்று வருகின்றன. ஒரு மாவட்டத்தில் என்னென்ன வளர்ச்சிப் பணிகள் நடக்கின்றன என்பதைப் பிற மாவட்டத்தினரும் தெரிந்து கொள்வது நல்லதல்லவா? இதனை விளக்குகிறது இந்தப் பக்கம்.

மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் நடந்துள்ள நற்பணிகள் பற்றிய விவரங்கள்தான் இவை:

**மதுரை கிழக்கு:** இவ்வட்டாரத்தில் கருணை, காஞ்சி நெல் விதைகள் பயிரிடும்படி விவசாயிகளுக்கு விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 56,645 இம்மாதத்தில் வசூலிக்கப்பட்டுள்ளளது.

மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 797 கிலோ நெல் விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2·064 டன் பூச்சி, பூஞ்சாள மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 725 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. சாகுபடி விளக்கக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 22,800 வசூல் செய்யப்பட்டுள்ளது.

**உசிலம்பட்டி:** தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இலவசக் கண் சிகிச்சை முகாம் 2—6—'73 முதல் 9—5—'73 முடிய உசிலம்பட்டியில் நடைபெற்றது. 482 பேர்களுக்கு இம்முகாமில் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

சேடபட்டியில் குப்பல்நத்தம் கிராமத்தில் மேல்நிலைத் தொட்டியும், பள்ளிக் கூடமும் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் அணியினர் வானொலி மன்றங்கள் அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர்.

**கள்ளக்குடி:** இவ்வட்டாரத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 12,000 வசூல் ஆகியுள்ளது. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த 12 கிராமங்களில் சாகுபடி முன்னோடிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**வேடசந்தூர்:** இவ்வூராட்சி ஒன்றியத்தில் நெல், கரும்பு சாகுபடிக்காக உழவர்களுக்கு 1,913 கிலோ விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தேனியில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 1,365 வசூல் செய்யப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பாலகிருட்டிணபுரம் கிராமத்தில் வெள்ளி விழாச் சீரூர் பள்ளிக் கட்டடமும், பூமலைக் குண்டு குடும்ப நலத் திட்டக் கிளை நிலையக் கட்டடமும், கோவிந்த நகரம் குடும்பநலத் திட்டக் கிளை நிலையக் கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**கம்பம்:** இவ்வூராட்சி ஒன்றிய விவசாயக் கிடங்கிலிருந்து சுமார் 20,945 கிலோ நெல், ராகி விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1,095 மண் மாதிரி எடுத்து பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. 1971—72-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் சிறந்த கிராமமாக இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த காமயக் கவுண்டன்பட்டி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. சிறந்த கிராம நல ஊழியராக திரு. கருப்பையா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**கண் சிகிச்சை முகாம்:** மதுரை தமுக்கம் கலையரங்கில், முதல்வர் டாக்டர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சை முகாம் 15—6—'73 முதல் 30—6—'73 முடிய நடைபெற்றது. இம்முகாமில் 719 பேர்களுக்குக் கண் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. கண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

**தோட்டக் கலை:** தோட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திராட்சை பயிரிட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதம் 10 ஏக்கருக்கு ரூ. 15,000 வரையிலும், மற்றும் பிற பழ வகைகள் பயிரிட ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ரூ. 10,500 வரையிலும் கடன்களாக வழங்க உசிலம்பட்டி வேளாண்மைத் தோட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் காய்கறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கடன் வழங்க ரூ. 18,000 வரையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய உயர்வள நெல்:** பெரியகுளம் வேளாண்மைக் கோட்டத்தில் ஏற்கெனவே பயிரிடப்பட்டு வரும் உயர் வளரக நெல்களுடன் சாகுபடி செய்து ஒப்பிட்டு நோக்க, புதிய உயர் வள நெல் ரகங்களான பவானி, கண்ணகி, கரிகாலன், கோ. 36 போன்றவற்றிற்கு ஆராய்ச்சிப் பாத்திகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மானாவாரி பருத்தி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 15,04,500 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**பூச்சி ஒழிப்பு:** கடலைப் பயிரில் விழும் சிவப்பு கம்பளிப் பூச்சி முதலிய பயிர் நாசினிகளை ஒழிக்க விரிவான அளவில் மருந்து தெளிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1973—74-ஆம் ஆண்டில் புதிதாக 1,000 ஏக்கரில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்யத் திட்டம் தீட்டப்பட்டு இதுவரை 924 ஏக்கரில் விளைச்சல் செய்யப்பட்டுள்ளது. உருளைக் கிழங்கு அமோக விளைச்சல் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 4·28 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**வன வளர்ச்சி:** வன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கம்பம் மெட்டில் குங்கிலியத் தோட்டம் 4 ஹெக்டேரிலும், பண்ணைத்திப் பாறையில் தேக்குத் தோட்டம் 3 ஹெக்டேரிலும் சூன் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளில் பணியாற்றும் துப்புரவு ஊழியர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் வேடசந்தூர் பேரூராட்சி துப்புரவு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மேற்படி பேரூராட்சிக்கு ரூ. 3,000 அரசு கடனாக வழங்கியுள்ளது.

# கோவை, சேலம் மாவட்டங்களுக்கு ஏற்ற புதிய ரக நெல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள கோவை நெல் இனவிருத்தி நிலையத்தில் 1965-ஆம் ஆண்டிலிருந்து உயர்விளைச்சல் நெல் ரகங்களில் இனவிருத்தி செய்து மேலும் அதிக மகசூல் கொடுக்கும் வகைகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆராய்ச்சியின் பயனாக, 'கோ. 29', 'ஏ.டி.டீ. 27', 'டி.கே.எம். 6', 'ஏ.எஸ்.டி. 1' ஆகிய ரகங்களுக்குப் பதிலாக முறையே 'காஞ்சி', 'கருணா' 'காவேரி', 'பெண்ணை' ஆகிய அதிக விளைச்சல் தரும் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால் ஒரு போக நன்செய் நிலங்களில் நடுத்தர வயதுடைய 'கோ. 32', 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20' போன்றவைகள் பயிரிடப்படுகின்றன.

கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் ஒருபோக நன்செய்ப் பட்டத்தில் (ஆடிப் பட்டம்) 'திருச்செங்கோடு சம்பா' எனப்படும் 'கோ. 32' ரகம் வழக்கமாகப் பயிரிடப்பட்டு வருகிறது.

இந்த ரகம் மிதமான உரத்தினால், ஓரளவுக்கு நல்ல விளைச்சல் கொடுப்பதுடன், சன்னமான அரிசியைக் கொடுக்கிறது. ஒரு எக்டேருக்கு 100 கிலோவுக்கு மேல் தழைச்சத்து போட்டால் இந்த ரகத்தின் பயிர் சாய்ந்து, விளைச்சல் குறைந்து விடுகிறது.

'கோ. 32' ரகத்தின் சிறப்புத் தன்மைகளைக் கொண்டும், ஆனால் அதிக உரமேற்றுச் சாயாத தன்மை வாய்ந்த அமோக விளைச்சல் தரும் ரகம் ஒன்றினை உருவாக்கும் பணியில் கோயம்புத்தூர் நெல் இனவிருத்தி நிலையம் ஈடுபட்டது. அமோக விளைச்சல் தரும் குட்டை ரகமான 'ஐ. ஆர். 8'-யும், சன்ன அரிசியுடைய 'கோ. 32' ரகத்தையும் இனக் கலப்பு செய்து, பல வளர்ப்புகள் (கல்சர்) தேர்வு செய்யப்பட்டன. இவற்றில், வளர்ப்பு (கல்சர்) 14466 என்பது 'கோ. 32' நெல்லின் சிறப்பையும், 'ஐ. ஆ. 8' நெல்லின் சாயாத, அமோக விளைச்சல் கொடுக்கும் தன்மையையும் ஒருங்கே அமையப்பெற்றது எனத் தேர்வு செய்யப்பட்டது.

கோவை நெல் இனவிருத்தி நிலையத்தில் நடத்திய விளைச்சல் சோதனையில், கோ. 32 நெல் எக்டேருக்கு சராசரியாக 7,056 கிலோ விளைச்சல் கொடுத்தபோது, வளர்ப்பு 14466 சராசரியாக 8,516 கிலோ விளைச்சல் கொடுத்தது! பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும், கோவை மாவட்ட உழவர்கள் நிலத்திலும் நடத்திய பரிசோதனையில் எக்டேருக்கு 120 கிலோ தழைச்சத்து இட்டதில் 'கோ. 32' ரகம் 4,325 கிலோவும், 'வளர்ப்பு 14466' என்ற புதிய ரகம் 7,453 கிலோவும் மகசூல் கொடுத்துள்ளது.

இந்த வளர்ப்பை ஜூன்–ஆகஸ்டு மாதங்களில் விதைத்ததில் அதிக விளைச்சல் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உரத்திற்கான உழவியல் சோதனையில், இந்த வளர்ப்பு 'கோ. 32'ஐப் போல் அல்லாமல் குட்டையாக உள்ளதால் எக்டேருக்கு 200 கிலோ தழைச்சத்து இட்டபோதிலும் சாயாத தன்மையுடையதாக இருந்தது. ஆனால் 'கோ 32' ரகமானது எக்டேருக்கு 100 கிலோ தழைச்சத்துக்கு மேல் போட்டால் சாய்ந்துவிடும்!

இந்த வளர்ப்பு 14466, கோ. 32 ரகத்தைப் போன்று சன்ன அரிசியைக் கொண்டது. மேலும் எக்டேருக்கு 200 கிலோ தழைச் சத்தை ஏற்று, சாயாமல் அதிக மகசூல் கொடுக்க வல்லது. இந்த வளர்ப்பைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அண்மையில் 'கோ. 36' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களிலுள்ள 60,000 எக்டேர் ஒருபோக நன்செய் நிலங்களில் 'கோ. 36' ரகத்தைக் 'கோ. 32'க்குப் பதிலாகப் பயிரிட்டால் அதிகப்படியாக 50,000 டன் நெல் கிடைக்கும். அதன் மூலம் மூன்று கோடி ரூபாய் உபரியாகப் பெறலாம்!

### கோ. 36 நெல் கட்டுக் கோப்பு சாகுபடி முறைகள்

**வயது:** 125–140 நாட்கள்.

**விதைப்பும், பருவமும்:** ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மட்டும் நாற்றுவிட உகந்தது. மற்ற மாதங்களில் விதைத்தால் வயது அதற்குத் தகுந்தாற்போல் அதிகரிக்கும்.

**விதையளவு:** எக்டேருக்கு 45 கிலோ (ஏக்கருக்கு 18 கிலோ)

**விதை நேர்த்தி:** ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் 'செரசான்' அல்லது 'அக்ரசான்' ஆகிய கரிம பாதரசக் கலவை மருந்துடன் கலந்து விதைக்கவும்.

**நாற்றங்கால்:** எக்டேருக்கு 50 வண்டி (ஏக்கருக்கு 20 வண்டி) தொழு எரு போடவும்.

**நாற்றின் வயது:** 25 முதல் 28 நாட்கள்.

**உரமிடுதல்:** வயலை நன்கு உழுது, எக்டேருக்கு 25 வண்டி (ஏக்கருக்கு 10 வண்டி) தொழு எரு அல்லது 7,000 கிலோ (ஏக்கருக்கு 2800 கிலோ) பசுந்தாள் உரம் போடவும். கடைசி உழவில் எக்டேருக்கு 60 கிலோ மணிச்சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும், நடும்பொழுது 60 கிலோ தழைச்சத்தும் போடவும். (கடைசி உழவில் ஏக்கருக்கு 24 கிலோ மணிச்சத்து, 24 கிலோ சாம்பல் சத்து, நடும்பொழுது 24 கிலோ தழைச்சத்து போடவும்). நட்ட 25–வது நாளில் 30 கிலோ (ஏக்கருக்கு 12 கிலோ) தழைச் சத்தும், 45–வது நாளில் 30 கிலோ (ஏக்கருக்கு 12 கிலோ) தழைச் சத்தும் போடவேண்டும்.

**களையெடுத்தல்:** தேவைக்கேற்ப ஒன்று அல்லது இரு முறை களை எடுக்கவும்.

**பயிர்ப் பாதுகாப்பு:** 1. நாற்றுகள் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு 0·05 சதவிகிதம் 'பாரதியான்', 0·04 சதவிகிதம் 'என்டிரின்'; 0·05 சதவிகிதம் 'ஃபெனிட்ரோதியான்', 0·05 சதவிகிதம் 'ஃபாஸ்பாமிடான்', 0·05 சதவிகிதம் 'ஃபெந்தியான்' இவை

களில் ஒன்றை, முதல் தடவையாகத் தெளிக்கவும்.

2. நடவு செய்து 2 வாரங்கள் சென்றபின் மேற்கூறிய வாறே இரண்டாவது முறை மருந்து தெளிக்கவும்.

3. மற்றும் 3-வது, 4-வது தெளிப்புகள் 3 வாரத்திற்கு ஒருமுறை செய்யவும். தத்துப் பூச்சிகள், இலையைத் தின்னும் புழுக்கள் காணப்படின் பி.எச்.சி. 10 சதவிகிதம் தூளையும், டி.டி.டி. 5 சதவிகிதம் தூளையும், சம அளவில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.

மகசூல்: எக்டேருக்கு 6,000 முதல் 7,500 கிலோ (ஏக்கருக்கு 2,400 முதல் 3,000 கிலோ).

வேண்டுகோள்: 'கோ. 36' என்ற இப்புதிய ரக நெல் மூலம் கோவை, சேலம் மாவட்ட உழவர் பெருமக்களுக்கு மூன்று கோடி ரூபாய் உபரி வருவாய் கிடைக்குமாதலின், 'கோ-36' நெல் ரகத்தை கோவை, சேலம் மாவட்டங்களின் ஒருபோக நன்செய் நிலங்களில் பயிரிடுமாறு, கோவை, சேலம் மாவட்ட உழவர் பெருமக்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர், 641003.

## எது விடுதலை?

விடுதலை விடுதலை என்கிறோம். விடுதலை என்றால் எப்படி இருக்க வேண்டும்? இதற்கு விளக்கம் தருகிறார் பேரறிஞர் அண்ணா...

"சுதந்திர இந்தியாவிலே, வளைவுகளை நிமிர்த்த, படு குழிகளை மூட, பாதைகளைச் செப்பனிட, சூது மதியினரை அடக்க, சொந்த மதியற்றோருக்கு அறிவு புகட்ட, சுரண்டுபவனை அடக்க, சோர்ந்திருப்பவனுக்கு உரம் ஊட்ட, பஞ்சம் வராமல் தடுக்க, படிப்பைப் பரப்ப, தொழிலை வளர்க்க, வாலிபத்தை வளமாக்க—எண்ணப் போனால் மளமளவென்று பலப்பல வேலைகள் தெரியும் மனக் கண் முன், இவைகளைச் செய்ய வேண்டும். அதற்கான உறுதி செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும்.

"உரிமைக்காகப் போராடிய உத்தமர்கள், அக்கிரமங்களை அழிக்க அனைத்தையும் அர்ப்பணித்த தியாகிகள், மக்கள் வாழ உழைத்த மாவீரர்கள் ஆகியோர் பற்றிய வரலாறு படித்தறிந்த அவர்கள் சிந்தனையிலே நம்மாலாவதென்ன பராபரமே, என்ற பஜனைப் போக்கு ஏற்பட முடியாதல்லவா? ஆகவேதான் வாலிபர்கள் விறுவிறுப்புடன் காணப்படுகின்றனர்.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்று பாரதியார் சொன்னபடி அனைவரும் உரிமையுடன் உவகையுடன் வாழ வேண்டும். நாடு பூந்தோட்டமாக விளங்கி, நானிலத்தோர் கண்டு புகழும் நிலை அடைதல் வேண்டும்.

"சுதந்திரம்—விடுதலை—என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை—புது அழகு—புது உருவம்—புதிய மகிழ்ச்சி—நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான்; உண்மையும் அதுதான்.

"மக்களின் சுதந்திரம் காக்கப்பட வேண்டுமானால் மக்களாட்சி ஏற்பட வேண்டும். ஓநாயைச் சாதுவாக்கி ஆட்டுக்குக் காவல் வைக்கவும் முடியாது; உருத்திராட்சம் அணிந்ததாலேயே பூனை, போதகாசிரியனாகி விடாது!

"மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக் கூடிய, வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும், சுதந்தரத்தின் பரம விரோதிகளே!"

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு. கே. ஆர். வெங்கடாசலம் **பிஎஸ்ஸி., பி.டி.,**
**அரசுயர் பள்ளி,**
**ஆலாம்பாளையம் (அஞ்சல்)**
**(வழி) அந்தியூர், ஈரோடு ஆர். எம். எஸ்.**

பட்டிமுதல் பட்டினமும் பாலைமுதல் சோலைகளும்
ஒட்டி உறவாடி ஓங்குதற்குத்—திட்டங்கள்
தீட்டியே நம்மரசு திக்கெலாந் தார்ச்சாலை
போட்டுவக்கும் நற்செயலைப் போற்று.

—கே. ஆர். வெங்கடாசலம், ஆலாம்பாளையம்.

ஒற்றையடிப் பாதையிலே ஒண்டி நடந்தோமே !
இற்றைத் தமிழரசின் ஏற்றங்கேள் !—பொற்சிலையே !
செப்பனிட்ட நற்சாலை சேர்த்துவிட்டார் நம்மூர்க்கும்
ஒப்பரிய பாதையிலே ஓடு !

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

பேரறியா ஊருக்கும் பேருந்துப் பாதைகள் ;
சீருறவே நீண்டபெருஞ் சாலைகள் ; —பார்புகழ்மேம்
பாலங்கள் பாங்காய் அமைத்த தமிழரசை
ஞாலமிசை நாம்வாழ்த்து வோம் !

—சீ. புனிதவதி; கீழ்நாயகன் பாளையம்.

கல்லுமுள்ளு மல்கிய காடெலாம் பேருந்து
செல்லும் வழியாகச் செப்பனிட்டு—நல்லரசு
நாட்டுப் புறமும் நகரமும் ஒன்றாகக்
காட்டும் பணியினையே காண்.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

மக்கள் நலனுக்கே மாநகரும் சிற்றூரும்
எக்காலும் சேர்த்தே இணைந்திட—தக்கபெருஞ்
சாலைபல செப்பனிட்டுத் தந்துதவும் நம்மரசை
மாலையிட்டு வாழ்கவென வாழ்த்து.

—நா. செயக்கனி, பெருமாள்தேவன்பட்டி.

கொட்டும் மழைமீதும் கொள்ளி வெயில்மீதும்
சட்டித் தயிரைத் தலைசுமக்க—எட்டுக்கல்
சென்றுவிற்றோம் கல்வழியில் செந்நாக் கலைஞரின்று
வென்றமைத்தார் எங்கள் விதி.

—சு. மலர்க்கொடி, குளக்காநத்தம்.

வெண்பாப் போட்டி

நாட்டுப் பணிகளிலே நாட்டம் உடையதமிழ்
நாட்டை இனிதாளும் நம்கலைஞர்—ஆட்சியேதான்
பாதை பலசாலை பாங்காகப் போட்டமைத்துச்
சாதனையைக் கண்டதெனச் சாற்று !

—கா. உ. கிருட்டிணமூர்த்தி, சென்னை, 7.

காட்டு வழிமாற்றிக் கள்ளர் பயம்போக்கிப்
போட்ட பெருவழியால் பூங்கொடி ! நாட்டினில்
சிற்றூரும் பேரூரும் சீராம் பெருநகரும்
தெற்றென வொன்றான தே.

—புலவர் க. சு. தமிழ்ப்பிரியன், ஆலாம்பாளையம்.

நீர்தேங்காத் தீஞ்சாலை, நீள்பாதை, மேகந்தான்
ஊர்கின்ற மேம்பாலம், ஊர்மக்கள்—சீராகச்
செல்வதற்கு நற்சுரங்கம், செம்மையுறச் செய்ததால்
எல்லோரும் ஏத்துகின்றார் இன்று.

—ஞான. அமரேசன், வடமாதிமங்கலம்.

ஆக்கப் பொருள்குவித்(து) ஆர்வமுடன் நாடெங்கும்
போக்கு வரவாலே பொன்கொழிக்கத்—தேக்கமிலா
மேம்பாலம் கட்டி விரைந்துநலம் செய்வதனால்
ஓம்பிடுவோம் நம்மரசை ஓர்ந்து.

—சு. பொன்னுராசு, பெரியவாளவாடி.

வண்டியும் மாடும் வழிச்செல்ல ஒல்லாத
பண்டைநாள் ஒற்றையடிப் பாதைகளை—இன்று
பெருவழிக ளாக்கிநற் பேருந்தை யோட்டும்
அருஞ்செயலைச் செய்த தரசு.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

ஆற்றின்மேற் சாலைகள் ; ஆகா வெனவியந்து
மேற்றிசையார் போற்றும்மேம் பாலங்கள்—நாற்றிசையும்
நல்லநெடுஞ் சாலையிட்டு நாட்டோர் நலங்காக்கும்
வல்லரசை வாழ்த்தி வணங்கு !

—சண்முக. தாயுமானவன், திருச்சி 8.

# வெண்பாப் போட்டி

நண்பா, உனக்கொரு வெண்பா மொழிவதற்(கு)
என்பால் பொருள்கிடைத்த ஏற்றம்பார்—இன்றேநீ
பாதைகள் தாமமைத்துச் சாலைக ளோடிணைத்து
வாதை தவிர்த்தோரை வாழ்த்து

—மா. சே. இராசு, திருப்பூர்.

காலத்தை வென்றுநலம் கண்டுவரும் நல்லரசு
பாலங்கள் பாதைகள் பாங்குமிகு—சாலைகள்
இல்லாத சிற்றூரே இல்லையென ஆக்குமுயர்
நல்வழியை நீவாழ்த்து நன்று.

—புலவர் சு. விசுவநாதன், ஆ. தெற்கூர்.

எத்திக்கும் சென்றுவர ஏற்றவழி உண்டென்றால்
தித்திக்கும் செல்வமெலாம் சேர்ந்திடுமே;—முத்தமிழின்
சீரோடு சாலைகளைச் செப்பனிடல் இல்லையெனில்
ஈரோடு காஞ்சிஆரூர் ஏது ?

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

சிற்றூர்க்கும் பேரூர்க்கும் சீராம் நெடுஞ்சாலை
கற்றுத் தெளிந்த கலைஞரின்—கொற்றம்
நடைபாதை செப்பனிட்டு, நற்றொழில் உய்ய ;
இடையறா இப்பணியை ஏத்து !

—இல. பழ. முருகுதாசன், சின்னாளப்பட்டி.

அண்ணாமேம் பாலம், அடுக்காய் இருபாலம்
கண்கண்ட சாலைகள், கால்வாய்கள் ;—வண்ணமிகும்
கூவத்தில் நம்தோணி ஊர்ந்திடவும் நம்முதல்வர்
ஏவலராய் நின்றார் இயம்பு.

—ஜி. சந்திராஏஞ்சலின், சாத்தூர்.

அண்ணாமேம் பாலம் அழகா யமைத்துள்ளார்
கண்ணாரக் கண்டு களிப்போமே—கண்ணாளா!
பாதைகள் சாலைகள் பற்றாக் குறையொழித்துச்
சாதனை செய்த தரசு.

—ப. தண்டபாணி, சென்னை-5.

கள்ளத்தை நெஞ்சினின்று நீக்கிக் கருணையெனும்
வெள்ளத்தைப் பாய்ச்சுகின்ற விந்தைபோல்—பள்ளத்தை
மேவிப் பலபாதை மேலாய்ச் சமைத்தோரைப்
பாவின் கருப்பொருளாய்ப் பாடு

—த.ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

மலைக்கும் மடுவுக்கும் பாதைகள் ! எங்கோ
தலைதெரியா வூருக்கும் பாதை !—நிலைத்துநிற்குந்
தார்ப்பாதை ! நீள்தூரச் சாலைகளுந் தண்ணென்று !
'பார்' குறுக்கு மிந்தப் பணி !

—சு. சுந்தரராசன், கருங்காலக்குடி.

எல்லா வளங்களுமே எம்நாட்டில் உண்டென்று
சொல்லி மகிழ்ந்திடவே சொன்னபடி—நல்லரசு
பாலைவனப் பாதையெலாம் பாங்கான நற்சாலை
சோலையென ஆக்குவதைச் சொல்.

எஸ். தியாகராசன், திருப்பத்தூர்.

பாட்டனார் காலத்துப் பாதைகள் சாலைகள்
காட்டென்றான் பேரன் ; கலைஞரோ—வாட்டமிலா
கண்மாய்கள், மேம்பாலம், கல்வெட்டாய் மாறினவே
எண்ணிப்பார் என்றார் ; இனிது.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

மழைநீர்ப் பெருக்கால் வழித்தடம் சற்றும்
பழுதடை யாதிருக்கப் பாலம்—பலகட்டி
நாற்றிசையும் நல்லிசை நாட்டும் கலைஞரைப்
போற்றுகபா மாலை புனைந்து.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

வேற்றூர்ப் பயணம் வெயிலிலும் சென்றிட
ஏற்றபடிச் சாலை இருமருங்கும்—மாற்றாரும்
கண்டுவக்கத் தின்தீங் கனிமரங்கள் நாட்டியதை
நண்பநம் நாடறியும் நன்கு.

—சு. மாரியம்மாள், முதலிப்பட்டி.

ஏழைக்கு வாழ்வென்னும் பாதையீந் தேற்றமிலாச்
சாலைக்குப் புத்தழகைத் தந்திடுவோர்—வேலைக்கும்
காப்பளித்த மேலான நம்மரசைத் தூற்றியிங்கு
நாப்பழிப்ப தில்லையே நம்பு.

—செ. த. சின்னசாமி, சென்னிமலை பாளையம்.

ஆலைத் தொழில்பெருக அன்றாடம் ஏழைமக்கள்
வேலையினைத் தேடி வெளிக்கிளம்ப—மூலை
முடுக்கெல்லாம் நாகரிகம் முன்னேறச் சாலை
அடுத்தடுத்துச் செய்தாரிங் காய்ந்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

## வெண்பாப் போட்டி

சிற்றூர்க்குப் பாதை; சிறப்பார்ந்த பேரூர்க்கு,
நற்றமிழ்போல் நீண்டநல நற்சாலை,—குற்றமின்றிப்
பல்லிடத்துந் தானமைத்த பண்பார் தமிழரசு
செல்வமுடன் வாழ்க சிறந்து !

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

சிற்றூரும் பேரூரும் சேர்ந்து வளமாக்கி
வற்றா நலமாகும் வாழ்விற்கே—சுற்றுலா
செல்வதற்கும் செய்தபொருள் சேர்வதற்கும் நம்மரசு
நல்லபணி செய்ததின்று நன்று !

—மு. ஜாபர்அலி, கிருஷ்ணகிரி.

அண்ணாமேம் பாலம் அழகுத் திருக்கோலம்
கண்ணாரக் கண்டு களித்தவர்கள்—எந்நாளும்
சாலை விபத்துக்கள் சற்றுமிலை என்றுரைக்குங்
'காலைக் கதிரவ'னைக் காண்.

— ம. சக்குபாய், உடுமலை.

ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் மூலமாய்
நேராய், வளைவாய், நெடியதுமாய்—பேரூர்கள்,
சிற்றூர்கள் சேர்த்திணைக்கும் சாலைகளைப் போட்டதால்
பெற்றோர் தமிழரசார் பேறு.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

அமரா வதியில் அமைத்தீரோர் பாலம்
எமக்கினிமேல் வெள்ளத்தால் ஏதும்—இமிசையிலை
பிள்ளைகுட்டி பள்ளி செல்லும் பேருந்தும் ஓடிவரும்
உள்ளநிறை நன்றி உமக்கு.

—கா. அப்துல்லா, கணியூர்.

உந்திலே செல்வோர்க்கும் ஊர்ந்து நடப்போர்க்கும்
எந்தவித ஆபத்தும் இல்லாமல்—இந்தஆட்சி
சென்று வரவே சிறப்பான சாலைகளை
நன்றாய் அமைத்தார் நனி.

—நா. ரெங்கராஜு, பொன்மலை.

எல்லார்க்கு மெல்லாமென் றின்கொள்கை கொண்டாடி
இல்லார்க்குப் போய்ச்சேர இந்நாளில்—நல்லார்க்கு
வாய்க்கும் நலம்போல் வழித்தடங்கள் செய்தரசு
தாய்க்கு மொருபுடிமேற் றான்.

—ஜெயாதங்கமுத்து, வே. கள்ளிப்பாளையம்.

பட்டணமும் சிற்றூரும் பாங்கோ டிணையநல்
திட்டமுடன் பாதை திருத்திமக்கள்—கட்டமின்றிச்
சென்றுவர நம்மரசு செய்திட்ட இப்பணியை
என்றுமற வோமென் றியம்பு.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

நான்மாடக் கூடலிலே, நம்மருமைச் சென்னையிலே
நான்காணும் மேம்பாலம், நற்சாலை—கோளுள்வோர்
ஏழைக்குப் பாலம்போல் என்றும் இலங்குவதைக்
காணப்பறை சாற்றும் காண்.

—சோ. முத்துமாணிக்கம், அமரப்பூண்டி.

பேருந்து செல்லாத பேரூர்இல் ; பாதைகள்
ஊருக்குள் செல்லவிடா ஒன்றியம்இல்—சேரும்சீர்ச்
சாலை அமைப்பில் தமிழ்அரசின் சாதனை
வேலைவாய்ப் பிறகான வித்து.

—புலவர் சுப. கலைச்செல்வி, அருப்புக்கோட்டை.

தேக்கமின்றிப் பண்டங்கள் தேவையுள்ள மாந்தர்க்கே
போக்கு வரத்தால் போயடைய—வீக்கமிலாச்
சீரான சாலையுடன் செப்பனிட்ட பாதைகளும்
பாராய் தமிழரசின் பண்பு!

—து. ம. இராமசாமி, துடியலூர்.

நாடி நரம்புகளாம் நாட்டிற்குச் சாலைகள்தாம் ;
ஓடிச்சிற் றூரும் உறவாக்கிக்—கூடுநலம்
காக்கும் மருத்துவராய், காவிரியாய்த் தொண்டாற்றல்
மாத்தமிழர் ஆட்சிக்கோர் மாண்பு.

—புலவர் சீரான், கோம்பை.

பாதையெலாம் செப்பனிட்டோம் பைந்தமிழில் போர்வைத்தோம்
மேதைகள் பாராட்டும் மேம்பாலம்—தீதின்றிக்
கட்டிவைத்தோம், சாலையெலாம் கண்காட்சி சேர்த்தமைத்தோம்
நட்புச்சூழ் ஆட்சியிலே நாம்.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

உன்னதச் சாலைகள் ஒண்சுரங்கப் பாதைகள்
வன்மைப்பா லங்கள் மகிழ்ந்தமைத்து — அன்பாக
ஆளுந் தமிழரசின் ஆற்றலினை எண்ணியெண்ணி
நாளும் புகழ்தல் நலம்.

—உ. தாமோதரன், சென்னை-7.

# பல்லவன் போக்குவரத்துக் கழகம்

**தமிழக அரசின் ஓர் நிறுவனம்.**

*பல்லவன் போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதியை முன்னிட்டு ஞாயிறுதோறும் நகரில் பல்வேறு இடங்களில் இருந்து திருவேற்காட்டிற்குக் கீழ்க் கண்ட நேரப்படி தனிப்பேருந்துகளை இயக்குகிறது.*

| ஹாமில்டன் பாலம்—திருவேற்காடு | | திருவேற்காடு—ஹாமில்டன் பாலம் | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 06·00 | (முதல் வண்டி) | 07·20 |
| (கடைசி வண்டி) | 20·35 | (கடைசி வண்டி) | 21·50 |

*(கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| வில்லிவாக்கம்—திருவேற்காடு | | திருவேற்காடு—வில்லிவாக்கம் | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 06·00 | (முதல் வண்டி) | 07·20 |
| (கடைசி வண்டி) | 20·40 | (கடைசி வண்டி) | 22·00 |

*(கட்டணம் 65 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| பெரம்பூர்—திருவேற்காடு | | திருவேற்காடு—பெரம்பூர் | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 05·45 | (முதல் வண்டி) | 07·05 |
| (கடைசி வண்டி) | 20·25 | (கடைசி வண்டி) | 21·45 |

*(கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| வள்ளலார் நகர்—திருவேற்காடு | | திருவேற்காடு—வள்ளலார் நகர் | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 05·10 | (முதல் வண்டி) | 06·30 |
| (கடைசி வண்டி) | 19·35 | (கடைசி வண்டி) | 20·50 |

*(கட்டணம் 65 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| மந்தவெளி—திருவேற்காடு | | திருவேற்காடு—மந்தவெளி | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 05·50 | (முதல் வண்டி) | 07·10 |
| (கடைசி வண்டி) | 20·15 | (கடைசி வண்டி) | 21·30 |

*(கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| சைதை—திருவேற்காடு | | திருவேற்காடு—சைதை | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 05·45 | (முதல் வண்டி) | 07·00 |
| (கடைசி வண்டி) | 20·40 | (கடைசி வண்டி) | 21·55 |

*(கட்டணம் 75 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| திருவல்லிக்கேணி—திருவேற்காடு | | திருவேற்காடு—திருவல்லிக்கேணி | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 05·35 | (முதல் வண்டி) | 06·50 |
| (கடைசி வண்டி) | 20·10 | (கடைசி வண்டி) | 21·30 |

*(கட்டணம் 65 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

| சென்னை (பிராட்வே)—திருவேற்காடு | | திருவேற்காடு—சென்னை (பிராட்வே) | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 06·00 | (முதல் வண்டி) | 07·00 |
| (கடைசி வண்டி) | 19·35 | (கடைசி வண்டி) | 20·40 |

*(கட்டணம் 60 பைசா : பயண நேரம் : 50 நிமிடம்)*

| வடபழனி—திருவேற்காடு | | திருவேற்காடு—வடபழனி | |
|---|---|---|---|
| (முதல் வண்டி) | 06·10 | (முதல் வண்டி) | 07·30 |
| (கடைசி வண்டி) | 20·35 | (கடைசி வண்டி) | 21·50 |

*(கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்)*

**இர. தில்லைநாயகம்,**

*நிர்வாக இயக்குநர்.*

வழிகாட்டும் தமிழ்நாடு

சாம்...

# போலீசார் ஓய்வு பெறும் நாளிலேயே

# அனைத்தும் கிடைக்கும் அருமையான திட்டம்

மூப்பது ஆண்டுகளுக்கு மேலாக உழைத்துவிட்டு, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, ஓய்வு பெறும் அதே நாள் மாலையில் பணிக்கொடைத் தொகை, ஓய்வூதிய ஆணைக் கடிதம், வருங்கால நல நிதித் தொகை ஆகிய முப்பலன்களையும் பெறுகின்ற நிலை அந்தந்தத் துறைகளுக்குத் தனிப் பெருமையும், அந்தப் பணியாளர்களுக்கு நிறைவான நிம்மதியும் தருவதாகும். அரசுப் பணி வரலாற்றில் குறித்து வைக்கத் தகுந்த அத்தகைய சாதனையைச் செயல்படுத்தி வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசின் காவல் துறை.

1973 ஜூலை 6-ஆம் நாளன்று, காவல் துறையின் பல்வேறு சார்நிலைப் பிரிவுகளைச் சேர்ந்த 50 பேர்கள், இப்படி முப்பலன்களையும் பெற்றபோது, சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகம் எந்த அளவுக்கு முன்கூட்டியே, பல மாதங்களுக்கு முன்னதாகவே திட்டமிட்டு, விடாப்பிடியாக உழைத்து இதனை முடித்துக் கொடுத்தது என்பது தெரியவந்தது. அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் ஆகியவற்றை முறைப்படி அணுகி எல்லாருடைய ஒத்துழைப்பையும் பெற்று, இப்பணியினை முடித்து, ஓய்வு பெறுவோருக்கு அதே நாளில் அதே இடத்தில் பணத்தைப் பட்டுவாடாச் செய்து பாராட்டுப் பெற்றனர் அந்த அலுவலகத்தினர். ஓய்வு பெறும் சென்னை நகரக் காவல் படையினர் 50 பேர்களுக்கு ஜூலை 6-ஆம் நாள் நடந்த பிரியா விடை அணி வகுப்பில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், சென்னை போலீஸ் கமிஷனரும் நிகழ்த்திய உரையில், ஓய்வு பெறும் ஊழியர்களுக்காக, மற்ற ஊழியர்கள் எந்த அளவுக்கு அரும்பாடு பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துரைத்தார்கள்.

### இது போன்ற மகிழ்ச்சி

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எப்.ஜி. அருள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

இந்த விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். காவல் துறையினர் நலனுக்காக நடவடிக்கைகள் போன்று மகிழ்ச்சியும் மனநிறைவும் எனக்குத் தரக் கூடியது வேறு எதுவுமே இல்லை. சென்னை நகரப் போலீஸ் கமிஷனர், அக்கவுண்டன்ட் ஜெனரல், சம்பளக் கணக்கு அலுவலர் ஆகிய மூன்று அலுவலகத்தினரும் இணைவாக மேற்கொண்ட நிருவாகச் செயல் முறைகள் காரணமாக, இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் போலீசார் உருவான நன்மைகளை அடைந்திருக்கிறார்கள். இந்தச் செயல், சென்னை நகரப் போலீசாருக்கு மட்டுமல்ல, மாநிலம் முழுதிலுமுள்ள போலீசாருக்கும் புதிய ஊக்கமும் தெம்பும் அளிக்கும். காவல் துறையிலேயே மேல் வகை அணிகளைச் சேர்ந்தவர்களுக்கும் அடிமட்ட அணிவகைகளைச் சேர்ந்தவர்களுக்குமிடையே நல்லெண்ணத்தையும் பரஸ்பரம் நன்மதிப்பையும் இது வளர்க்கும்.



ஒய்வு பெறும் போலீசார், உடனடியாக ஓய்வூதியம், ஒய்வு நிதி வசதிகள் கிடைக்கப் பெருமல், சொல்லொணு அவதிகளுக்கு உள்ளாகி வந்தனர். ஒய்வூதிய ஆணை, பணிக் கொடைத் தொகை, வருங்கால நல நிதி ஆகியவைகளைப் பெற மாதக் கணக்கில், சில சமயங்களில் ஒராண்டுக்கு மேலாகக் கூட அலைய வேண்டிய நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, அவதியில்லாமல் நிம்மதியைத் தருகின்றன ஒரு வழிமுறையை இன்று கண்டோம். ஒய்வு பெற்றதற்கும், ஒய்வு காலத் தொகைகள். கிடைப்பதற்கும் இடையே உள்ள இடைப்பட்ட காலத்தில் வறுமைக்கும் துன்பங்களுக்கும் ஆளானவர்கள், அந்தக் கஷ்டத்தினூடே, கிராமத்திலிருந்து பலமுறை நகரத்துக்கு வந்து அலுவலகம் அலுவலகமாக ஏறி இறங்க வேண்டியிருந்தது. இடர் மிகுந்த இந்தக் கால கட்டத்திலே, கிராமத்திலே அவர்கள் குடும்பம் பசி பட்டினியை எதிர்நோக்க வேண்டிய நிலை இருக்கும், ஏதோ நாடக வசனம்போல இதை நான் சொல்லுவதாக எண்ண வேண்டாம். அப்பட்மான உண்மை நிலையைத் தான் சொல்லுகிறேன். இந்தத் துன்பமான நிலையை மாற்றியமைக்க வேண்டிய கடமை, நிருவாக அலுவலர்

களாகிய நம்மைச் சேரும். தேவையில்லாமல் துன்பங்களை ஏற்க வைக்கிற பழங்கால விதி முறைகளுக்கு இடமில்லாமல் விரைந்து செயல்பட்டு நல்லனவற்றை உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு.

**இவர்கள் உழைப்பு**

இன்று ஒய்வு பெறுகின்ற சப் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டபிள்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 52 பேர்களும் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இரவு பகலாக, எங்கெங்கெல்லாமோ பணிகளில் ஈடுபட்டு உழைத்தவர்கள். தங்கள் அரும்பணியின் மூலம் அவர்கள் இந்தக் காவல் துறையின் பெருமையை உயர்த்திஞர்கள். மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள்.

கஷ்டங்களைக் காண்பித்துக் கொள்ளாமல், அதற்காகக் குறைகூறிக் கொண்டிருக்காமல் காவல் துறையினர் சோதனைகளையும் நெருக்கடிகளையும் சமாளிக்கிருர்கள். காயங்களையும் மரணத்தையும் கூட ஏற்றவர்கள் பலர். இன்று ஒய்வு பெறும் இந்த 50 பேர்களும் அதே போல, பகல் இரவு பாராமல், மழை என்றும் வெய்யில் என்றும் பாராமல் உழைத்து இப்போது கடைசிக் கட்டமாகப் பணியில் நிறைவும் ஒய்வும் கண்டிருக்கிருர்கள். ஒய்வு பெற்ற 6 நாட்களுக்குள்ளாக, ஓய்வூதிய ஆணை, மற்றும் ஒய்வு கால நிதிகள் ஆகியன வழங்கப் பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று ஒய்வு பெறுகின்ற நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அமைதியும் நிறைவும் கண்டு மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று இந்த நல்ல பணிகளை நிறைவேற்றித் தந்த பெருமை முழுவதும், உழைப்பில் வல்லவரான சென்னை நகரப்போலீஸ் கமிஷனர் திரு.கே.ஆர்.ஷெணுய்அவர்களைச் சாரும். இப்பணியைத் தொலை நோக்குடன் திட்டமிட்டு, ஆர்வத்துடனும் விடா முயற்சியுடனும் பணியாற்றி

தமது நல்ல எண்ணத்தைச் செயல் வடிவமாக்கிக் காட்டியிருக்கிறார் அவர். திரு. ஷெணுய் இன்று இங்குச் செய்திருப்பது மாநிலம் முழுவதிலும், இந்திய மாநிலங்கள் அனைத்திலும் காணப்படாத ஒரு சாதனை, இது ஒரு சிறந்த முன்மாதிரி ஆகும்.

இந்த நேரத்தில், அக்கவுண்டன்ட் ஜெனரல், அவரது அலுவலகத்தினர், குறிப்பாக திரு. எட்வின், மற்றும் சம்பளக் கணக்கு அலுவலர், தலைமை நிலையத்தைச் சேர்ந்த போலீஸ் டிப்டி கமிஷனர், போலீஸ் கமிஷனர் அலுவலகத்தைச்சேர்ந்த சார் நிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும். துறைகளுக்கிடையே ஒத்துழைப்பின் மூலம் இன்று நாம் சாதித்திருப்பது வருங்காலத்துக்கு, ஒரு நல்ல அறிகுறியாகும். இத்தகைய ஒத்துழைப்பு தொடர்ந்து வளரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதன் மூலம் காவல் துறையின் முதுகெலும்பாக விளங்குகின்ற பல்லாயிரக் கணக்கான கான்ஸ்டபிள்கள் பெரிதும் நன்மையடைவார்கள். இன்று ஓய்வு பெறும் அனைவரும் வாழ்வில் மகிழ்வும் வளமும் பெற்று இனிது வாழ மீண்டும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.


**எடுத்துக்காட்டான திறன்**

சென்னை நகர போலீஸ் கமிஷனர் திரு. கே. ஆர். ஷெணுய் இந்த விழாவில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டதாவது :

இன்று நடைபெற்ற பிரியாவிடை அணிவகுப்பு 3 சப்-இன்ஸ்பெக்டர்கள், 3 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 16 தலைமைக் கான்ஸ்டபிள்கள், 27 போலீஸ் கான்ஸ்டபிள்கள், ஒரு புகைப்படகாரர், மருந்து கலக்குபவர் ஒருவர் ஆகியோரைப் பெருமைப்படுத்துவதற்கு நடந்த அணிவகுப்பாகும். சார் நிலைப் பணியாளர்கள் என்று இவர்கள் அழைக்கப்பட்ட போதிலும், இவர்களே சேவை அணியில் முக்கியப் பிரிவினர்.

பணியில் சேர்ந்த நாள் தொட்டு, ஓய்வு பெறும் காலம் வரையில் பணியாளர்களின் நலன்களைக் கவனிக்க வேண்டியவர்கள் அலுவலர்கள் என்ற நெறியை உணர்ந்து நானும் எனது அலுவலர்களும், பணியாளர்களுக்கு—குறிப்பாக சென்னை நகரப் போலீஸாருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அதனைச் செய்வதில் ஆர்வம் கொண்டிருக்கிறோம். நமது காவல் துறையினர் திறமையிலும், உழைப்பிலும் கடமை உணர்விலும், நாட்டின் எந்தப் பகுதியினருக்கும்—ஏன் உலகிலேயே எந்தப் பகுதியினருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு கால நிதி வசதிகளைப் பெற நகரப் போலீஸ் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலர் அலுவலகம், அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம், அத்துடன் தலைமைச் செயலகத்துக்கும் கூட, மாறி மாறிச் சென்று அலைய வேண்டிய நிலை பலகாலமாக இருந்து வந்திருக்கிறது. ஓய்வூதியம், பணிக் கொடை, வருங்கால நல நிதி சம்பந்தப்பட்ட ஆணைகளைப் பெறவும் சான்றிதழ்கள் பெறவும் வாரக் கணக்கில், ஏன் மாதக் கணக்கிலும் கூட காத்திருக்க



வேண்டிய நிலை இருந்தது. நாளாக ஆக அவர்கள் சோர்வுற்றுக் குன்றிப் போகின்ற நிலையும் கண்கூடான உண்மை. அந்த நேரத்தில் அவர்கள் ''இத்துறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்ததற்குப் பலன் இதுதானா ?'' என்றும் எண்ணியிருக்கக் கூடும். ஓய்வு பெறுகின்றவர்கள் விஷயத்தில் சார்நிலைப் பணியாளர்களுக்கு உள்ளார்ந்த அனுதாபம் உண்டு என்றாலும் அன்றாட வேலைப் பளுவின் காரணமாக, ஓய்வு பெறுவோர் விஷயத்தில் உரிய கவனம் செலுத்த முடியாத நிலை இருந்தது. ஓய்வு பெற்றவர்கள், சில விஷயங்களை நேர் செய்வதற்காகப் பல மணி நேரம் காத்திருந்தும் கூட அலுவலர்களைச் சந்திக்க இயலாமல் போன நிலை இருந்திருக்கலாம். இந்தச் சங்கடமான நிலைமைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்பதற்காக ஒய்வூதியப் பட்டுவாடாவுக்கும், ஓய்வு நிதிகளுக்கும் பூர்வாங்க ஆணைகளை, ஓய்வு பெறும் அதே நேரத்தில் தந்துவிடுவது நலம் என்று கருதினோம். ஓய்வு பெறுவோருக்கு இதுவே ஒரு உகந்த நன்மையாக அமையும் என்று எண்ணினோம்.

### வேறு சங்கடங்கள்

ஓய்வு பெற்றவர்கள் தாங்கள் குடியிருந்து வந்த அரசினர் குடியிருப்பைக் காலி செய்து விட்டுச் செல்வதிலும் பல சங்கடங்கள் உள்ளன. வேறு வீடு வாங்குவதற்கோ அல்லது வேறு வாடகை வீட்டுக்கு முன்பணம் கொடுக்கவோ இயலாத நிலை இருந்தது. எனவே, இருக்கும் வீட்டிலேயே இன்னும் சில காலம் தொடர்ந்து வசிக்க அனுமதிக்க வேண்டும் என்ற முறையீடுகளும் வந்தபடி இருக்கும். இதனால் பணிபுரிவோருக்கு, வீட்டு வசதி அமைத்துத் தருவதில் சங்கடங்களும் ஏற்படும். பல நேரங்களில் இது காரணமாக, மனத்துக்குச் சங்கடமான இக்கட்டுகளும் ஏற்பட்டு வந்தன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் இப்பணியைத் தலைமை நிலைய டிப்டி கமிஷனரிடமும், எனது அணுக்க உதவியாளரிடமும் ஒப்படைத்தேன். பணியை முடித்துத் தர வேண்டிய நாளையும் குறிப்பிட்டுச் சொன்னேன். இதனால் அவர்களுக்கு அதிகமான கூடுதல் வேலை. ஆனால் அவர்களும் மற்றப் பணியாளர்களும் உற்சாகத்தோடு இக்கடமையை மேற்கொண்டனர். பூர்வாங்க ஒய்வூதிய ஆணையையும், பூர்வாங்கப் பணிக் கொடை ஆணையையும் குறித்த நாளில் தந்துவிட முடியும் என்று அவர்கள் உறுதி கூறினர். வருங்கால நல நிதி (Provident Fund) விஷயத்தில் (அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம் பார்த்து அனுப்ப வேண்டிய பணி ஆகையினால்) அதனை உடனே பட்டுவாடாச் செய்வது என்பது 'இயலாது' என்று அவர்கள் பதிலளித்தனர். இங்கு நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். நம்மில் சிலருக்கு அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம், மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகம் ஆகியவை மீது பழி போடும் இயல்பு உண்டு. அந்த நிலைமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று விரும்பினேன். அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகத்திலும் சம்பளக் கணக்கு அலுவலர் அலுவலகத்திலும் நமது கணக்குகளை ஒழுங்கு முறைப்படி வைப்போமானால் அவர்களும் நம்முடன் ஒத்துழைப்பார்கள் என்று அலுவலாளர்களிடம் எடுத்துரைத்தேன். அதன்படியே காரியம் வெற்றிகரமாக நடந்தேறியது. இந்த இனிய நேரத்தில் அக்கவுண்டன்ட் ஜெனரல், சம்பளக் கணக்கு அலுவர் ஆகியோருக்கும் அவர்களுடைய அலுவலகத்தினருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பால் தான் இந்த நாளில் இத்தகைய நல்ல பலனை அடைய முடிந்தது. அக்கவுண்டன்ட் ஜெனரலும், சம்பளக் கணக்கு அலுவலரும் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறார்கள். ஆதலால் இவ்விழாவில் அவர்கள் கலந்து கொள்ள இயலாது போனது பற்றி வருந்துகிறேன். ஆயினும் சீனியர் டிப்டி அக்கவுண்டன்ட் ஜெனரல் திரு. எட்வின், உதவிச் சம்பளக் கணக்கு அலுவலர் திரு. பாண்டுரங்கராவ் இருவரும் இங்கு வந்திருக்கிறார்கள். தங்களுடைய உதவி பெற்றவர்களின் நன்றியுணர்வை அவர்கள் இவ்விழாவில் நேருக்கு நேர் காண முடிகின்றது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மிகக் குறுகிய காலத்தில் அவர்கள் ஓய்வு கால நிதி சம்பந்தப்பட்ட பணிகளை முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அரிய பணிக்கும் அரிய ஒத்துழைப்புக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**1973 ஜூலை 1-ல் ஓய்வு பெற்றோர் இன்னும் சிறிது நேரத்தில் பூர்வாங்க ஒய்வூதிய ஆணையைப் பெற இருக்கிறார்கள். ஒய்வூதிய மொத்தத் தொகையில் 90 சதவிகிதத்**தைப் பெற இந்தப் பூர்வாங்க ஆணை வழி செய்கின்றது. பணிக் கொடைத் தொகையில் 75 சதவிகிதம் இந்தப் பூர்வாங்க ஆணையின் மூலம் கிடைத்துவிடும். மொத்தம், இன்று ரொக்கமாகப் பட்டுவாடாச் செய்யப்பட இருக்கும் பணிக் கொடைத்தொகை ரூ. 1,27,118 ஆகும். வருங்கால நல நிதியில் போட்டிருந்த பணமும் வட்டியுடன் தரப்படும். ஏற்கனவே வாங்கிவிட்ட தொகை மட்டும் கழிக்கப்பட்டுவிடும். இவற்றுடன் கூட வேலையிலிருந்து விடுவிக்கப் பெற்றதற்குச் சான்றிதழ், நடத்தைச் சான்றிதழ் ஆகியனவும் தரப்படுகின்றது.

### பணப் பாதுகாப்பு

ஓய்வு பெற்ற நீங்கள் இன்று பெருந் தொகையை எடுத்துச் செல்லுகின்ற நேரத்தில் நான் சொல்ல வேண்டிய யோசனை ஒன்று உண்டு. பணத்தைப் பத்திரமாக வையுங்கள். இதனை வீட்டுக்குக் கொண்டு போகும்போதும், அடுத்துச் செலவுகள் செய்யும்போதும் மிகுந்த விழிப்புடன் இருங்கள். எனது வேண்டுகோளின்பேரில் இந்திய ஸ்டேட் பாங்கினர் இதே திடலில் சேமிப்பு வைப்புத் தொகையை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டினை இங்கு அன்புடன் செய்திருக்கிறார்கள். பணத்தை, இங்கு இந்த பாங்கியில் நீங்கள் வைக்கலாம் என்பது என் யோசனை.

உங்களுடைய நல்ல பணிக்காகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துகிறேன்.

## தி. சி. புட்ஸ் எக்ஸ்போர்ட் கார்ப்பரேசன்

குளிர்சாதன மீன் பதனிடுவோர், உலர்ந்த மீன் தயாரிப்போர், சகல கடற் பொருட்களும் ஏற்றுமதி செய்வோர்.

**41, கொக்கோப் தெரு,**
**தூத்துக்குடி-1.**

தந்தி: சிறுமலர்.

தொலைபேசி: அலுவலகம்: 146
இல்லம்: 1315


சகோதர பகுதி: **தி கல்ப்பிஷ் எக்ஸ்போர்ட் அவுஸ்**

தொழிலிணக்கம்:
**தி ஸ்டேட்டிங் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட்**
**இந்தியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட்**

தூத்துக்குடி பகுதியில் மீன் பதனிடுவதற்கென முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் ஏக குளிர்சாதன தொழிலகம் (FREEZING PLANT) எமதென்பதில் பெருமிதமடைகிறோம்.

குளிர்சாதன முறையில் பதனிடப்பட்ட இரால், சிங்கிரால், மீன் முதலிய கடலுணவுகளுக்கும், உலர்ந்த மீன் வகைகளுக்கும் ஏனைய கடற்பொருட்களுக்கும் எம்மை அணுகுக.





## மீன்வளம் பெருக தாயின் பணி!

மீன் பிடித்தொழில் வளர்ச்சி பெற, மீனவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தாய்—நிறுவனம் பல்வேறு வழிகளில் அரும்பணி ஆற்றுகிறது.

* மெல்லிய நைலான் இழைகள், மற்றும் மீன்பிடி வலைகளை அமைத்தல்.
* இறக்குமதி செய்யப்பட்ட மீன் பிடிபடகுகளின் மூலம் ஆழ்கடலில் அபரிமிதமான மீன்வளம் பெற பெரும் பணி ஆற்றுதல்.
* மீன்களைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் பொருட்டுச் சென்னையில் நூறு டன்கள் கொள்முதல் உள்ள மீன் பதனிடும் நிலையம் செயல் புரிதல்.

தாய்—தருவது வளர்ச்சிக்குச் சேவை

**தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், வேளான் இல்லம்,**
**தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032.**

# மீன் வளம் பெருக்குவோம் மீனவர் வாழ்வினை வளப்படுத்துவோம்



நமது நாடு மிகவும் தொன்மை வாய்ந்தது! ஆனால் ஒரு புதிய நாடாகும்- விரைந்து வளரும் ஒரு நாடாகும்! நமது பொருளாதாரம், ஈட்டும் பணிகளில் சிலவும், தொழில்களும் உலகிலேயே மிகவும்பழமையானவைகளாகும். ஆனால் பொருளாதார வளர்ச்சியானது நமக்குப் புதிய சவால்களை விடுக்கின்றன.

மீன் பிடிக்கும் தொழில் நமது கடலோரப் பகுதிகளில் நீண்டகாலமாக நிலவிவரும் தொழிலாகும். அது போலவே, கடல் வாணிபமும் நமது புராதனத் தொழில்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

சிலகாலத்திற்கு முன்பு நான் பூம்புகார் சென்றிருந்த பொழுது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் இருந்த நிலைமையைப் பற்றிய எண்ணத்திலாழ்ந்தேன். அப்பொழுது, கடல் வாணிபத்திலும், மீன் பிடிக்கும் தொழிலிலும், சிறப்புற்று விளங்கிய பூம்புகார் துறை முகத்தை என் மனத் திரையில் கண்டு மகிழ்ந்தேன்! ஆனால் இன்று அந்தப் பூம்புகார், தூங்கிவழியும் ஒரு குக்கிராமமாக உள்ளது. அங்குள்ள மீனவப் பெருங்குடி மக்கள் இன்றும், நமது பழந் தொழில்களில் ஒன்றான மீன் பிடிக்கும் தொழிலைப் பரம்பரையாகச் செய்து வரும் பாணியிலேயே செய்து வருகின்றார்கள். அவர்களைச் சுற்றியுள்ள உலகம் பெரிதும் மாறியுள்ளது! ஆனால் அவர்கள் அந்த மாற்றங்களால் ஒரு சிறிதும் மாற்றப்படவில்லை! பூம்புகாரின் பண்டையச் சிறப்புகளில் சிலவற்றை உயிர்ப்பிக்க அண்மையில் தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். பூம்புகாரில் வாழுகின்ற மீனவர்களுக்கு ஏதும் பலனளிக்காமல், பூம்புகாரின் பழஞ் சிறப்புகளுக்கு மட்டும் உயிரோட்டம் கொடுப்பதினால் எந்தவித பயனும் இல்லை என்று எண்ணினேன்! அதனாலேயே, நான் அங்கே உள்ள மீனவப் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்கள் நவீன வாழ்க்கையின் அறைகூவல்களைச் சமாளிப்பதற்கும் உரிய திட்டங்கள் சிலவற்றை அப்பொழுது அறிவித்தேன்.

## முதல்வர் கலைஞர்

நான் சென்றிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான் முதலிய அயல் நாடுகளில், மீன் வளப் பெருக்கம் அந்நாடுகளின் பொருளாதாரா முன்னேற்றத்தில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளது! நமது நாட்டில் அவ்வாறில்லை! இதற்காக யார் மீதும் நான் பழிசுமத்த விரும்பவில்லை! கடல் மீன் வளத்தைப் பெருக்கிட நாம் இதுவரை செய்துள்ளதை விட இனிமேல் மிகவும் வேகமாகக் கடல் மீன் வளத்தைப் பெருக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை வலியுறுத்திட விரும்புகிறேன்.

### உலகப் படத்தில் மேல் இடம்!

இக்கருத்து தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, நமது நாடு முழுவதற்குமே பொருந்தும்! மீன் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களும், மைய, மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து அவர்களுடைய முயற்சியை முனைப்பாக்கவேண்டும். அப்பொழுதுதான் மீன் பிடிக்கும் தொழில் தொடர்புடைய உலகப் படத்தில் நமது நாடு மேல் இடம் வகிக்க முடியும்! நீண்ட கடலோரப் பகுதியையும், கடல் வளத்தையும் தொன்றுதொட்டு மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளதால் நல்ல அனுபவமும், பயிற்சியும் பெற்றுள்ள மீனவப் பெருமக்களையும், இத் தொழிலுக்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் உற்பத்தி செய்யக் கூடிய அடிப்படைத் தொழில் அமைப்புகளையும் நாம் கொண்டுள்ளதால், இவை அனைத்தையும் உடனடியாக உபயோகப் படுத்திட முடியும்!

தமிழ்நாட்டில் நாம் இதை உணர்ந்து செயலாற்றுகின்றோம். மீன் பிடிக்கும் தொழிலை இயந்திரமயமாக்கும் நமது திட்டம், கட்டு மரம் கட்டிக் கொண்டு, கடல் கடந்து சென்று மீன்பிடித்து வந்து கொண்டிருந்த ஏராளமான மீனவப் பெருமக்கள் சிறு சிறு விசைப் படகுகளைப் பெற்றிட உதவியுள்ளது. மீன் பிடிக்கும் தொழிலில் தனிப்பட்ட தொழிலதிபர்களை ஈடுபடுத்திட ஊக்குவிக்கக் கூடிய திட்டம் ஒன்றை வைத்துள்ளோம். கடலோரப் பகுதிகளில் மீன்களைப் பதப்படுத்துவதற்கும், குளிர்பதனப் படுத்துவதற்கும் உரிய நிலையங்களை அமைத்து வருகிறோம். பதப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும், பொது மக்கள் இந்நிலையங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்!

மண்டபம் படகு கட்டும் தளத்தில், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு உதவும் இழுவைப் படகுகளை விரைவில் தயாரிக்க விருக்கின்றோம். சிறு சிறு மீன் பிடிக்கும் துறைமுகங்களையும், மீன் பிடி படகுகள் வந்து சேருவதற்கான தகுந்த கரையமைப்புகளையும் ஏற்படுத்திடுவதில் தமிழ்நாடு அரசு சிறப்பாகப் பணியாற்றி உள்ளது. தூத்துக்குடி மீன் பிடித் துறைமுகம் விரைவில் பயனுக்கு வரவிருக்கின்றது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினம், கோடிக்கரை, ஆகிய ஊர்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டம் என்ற ஊரிலும் மீன் பிடிக்கும் படகுகள் வந்து சேருவதற்கும், தங்குவதற்கும் உரிய வசதிகளை ஏற்படுத்தவிருக்கின்றோம். இத்தகைய வசதிகளைக் கொளச்சல், பழவேற்காடு, வாலிநோக்கம், பரங்கிப்பேட்டை மற்றும் சில இடங்களில் ஏற்படுத்திடத் திட்டமிட்டுள்ளோம். மீன் பிடிக்கும் தொழிலை இயந்திரமயமாக்குவதற்கு வேளாண்மை மறுநிதிக் கழகம், வணிக வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பெருமளவு நிதி உதவியை எதிர்பார்த்திருக்கின்றோம்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீனளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மீனளத்தை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்! உள்நாட்டு மீன்கள் மற்றும் கடல் மீன்கள் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்குவதற்குத் தேவையான முதலீடு செய்ய எண்ணியுள்ளோம். பெருகிவரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவினை வழங்க வேண்டும், அவ்வாறு வழங்கப்படவிருக்கும் உணவும் ஊட்டச் சத்து மிகுந்ததாக இருக்க வேண்டும் என்ற இரு நோக்குடன், மீனளத்திற்கு அதிக அளவு முதலீடு செய்ய எண்ணியுள்ளோம்.

தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்டுள்ள இத்தகைய முயற்சிகளிலெல்லாம், மிகவும் முக்கியமானது தங்கள் வாழ்வுக்குக் கடலையே நம்பியுள்ள மீனவப் பெருமக்கள் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்பதேயாகும்! நவீன முறையில் மீன்பிடிப்பதற்கு அதிக அளவு முதலீடு செய்ய வேண்டியுள்ளது. தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் மீனள மேம்பாட்டில் தங்களுக்கென ஒப்புக் கொள்ளப்பட்ட பணியைச் சிறப்பாக நிறைவேற்றுவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை! இதனால் தனியார் தொழில் நிறுவனங்களின் நிருவாகத் திறமையும், நவீன தொழில் நுட்பமும் மீனளத் துறைக்குக் கிடைக்கக்கூடும்! ஆனால் தனியார் தொழில் நிறுவனங்கள் தொன்றுதொட்டு மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவப் பெருமக்களுக்குப் போட்டியாக இருக்கக் கூடாது என்றும், மீனவப் பெருமக்களின் பரம்பரைத் தொழில் திறமைக்கும், கடல் அனுபவத்திற்கும் ஏற்பத் தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் மீனவப் பெருமக்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு விரும்புகிறது.

### மீனவர் நன்மைக்கு மீன்பிடிக்கும் துறைமுகங்கள்!

தமிழ்நாடு அரசு, தொன்றுதொட்டு மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவப் பெருமக்களுக்கு ஊக்கமளிக்க விரும்புகிறதே தவிர, அவர்கள் தொன்றுதொட்டு மீன் பிடிக்கப் பயன்படுத்தி வருகின்ற முறையையோ, சாதனங்களையோ ஊக்குவிக்க விரும்பவில்லை. மீனவப் பெருமக்கள் பயன்படுத்திவரும் சாதனங்களை விரைவாக நவீன மயமாக்கத் தமிழ்நாடு அரசு விரும்புகின்றது! மீனவப் பெருமக்களுக்குச் சிறு இயந்திரப் படகுகளைக் கொடுத்திடுவதுடன், மீன் பிடிக்கப் பரம்பரையாகப் பயன்படுத்தி வரும் கட்டுமரத்தில் நவீன இயந்திரங்களைப் பொருத்தி மேம்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு உதவுகிறது. மீனவச் சமுதாயத்தில் உள்ள ஆள்பலத்தைக் கொண்டு, பெரும் பெரும் இயந்திரப் படகுகளைப் பயனுக்குக் கொண்டு வரவும், பதப்படுத்தல், குளிர்பதனப் படுத்தல்

போன்ற பணிகளில் ஈடு படுத்திடவும் தமிழ்நாடு அரசு விரும்புகிறது.

தற்பொழுதுள்ள மீன் பிடிக்கும் பயிற்சிப் பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு, நவீன மய மாக்கப்படும்!

இதனால் மீனவர்கள் நவீன இயந்திரப்படகுகள், 'கியர்' போன்றவைகளைப் பயன் படுத்துவது பற்றிய பயிற்சி பெற இயலும். இதுபோலவே தனிப்பட்ட தொழில் நிறு வனங்களும் மீனவர் சமு தாயத்தில் உள்ள ஆள் பலத்தைப் பயன் படுத்தி, மீன் தொடர்புடைய தொழி லில், அவர்களைப் பல்வேறு வகைகளில் பயன் படுத்திடப் பயிற்சி அளித்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. இப்பயிற்சி யினால், மீனவர்கள் தங்கள் பொருளாதாரத்தினை மேம் படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறாகத் தமிழ்நாடு அரசு மீன்பிடிக்கும் தொழிலை நவீன மயமாக்க விரும்புகிறதே தவிர, தங்கள் பிழைப்புக்குக் கடலோடு போராடி வரும் மீனவர்களுக்குச் சங்கடம் ஏற்படும் அளவுக்கு நவீன மயமாக்க விரும்பவில்லை! மீனவர் சமுதாயத்தையும், நவீன தொழில் நுட்பத்தை யும் ஒருங்கிணைக்க வேண்டிய அவசியத்தை மனத்திற் கொண்டே, திட்டம் தீட்டு பவர்கள் திட்டமிடுவார்கள் என்று நம்புகிறேன்!

### மீன் ஏற்றுமதியை ஊக்குவிப்போம்

எறால், செங்கெறால் போன்ற விலைமதிப்புள்ள கடல் மீன்கள் நம்நாட்டிலிருந்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப் படுகின்றன. இவ்வகையில் தமிழ்நாடு சிறப்பாகப் பணி யாற்றி வந்துள்ள போதிலும் தமிழ் நாட்டிலிருந்து எறால், செங்கெறால் போன்றவை மட்டுமன்றித் தரமான மீன் களின் ஏற்றுமதியையும் பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நம் மாநிலத்தில், ஏற்றுமதி செய் வதற்குத் தகுந்தாற்போல் பதனப்படுத்துவதற்குரிய வசதி படுத்திடத் தொழில் நிறு வனங்கள் முன்வர வேண்டும் கள் போதிய அளவில் இல்லை! இத்தகைய வசதிகளை ஓரள வுக்கு அரசே செய்து கொடுக்க முடியுமெனினும், நம் மாநிலத்தில் இத்தகைய வசதிகளைப் பெருமளவில் ஏற் படுத்திடத் தொழில் நிறு வனங்கள் முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உள்நாட்டில் மீன் விற்பனை செய்வதற்குரிய அமைப்பினை ஏற்படுத்துவதும் அவசிய மாகும். தற்பொழுது பிடிக்கப் படும் கடல் மீன்களில் பெரும் பகுதி, கடலோரப் பகுதி களிலேயே உண்ணப்பட்டு விடுவதாகக்கேள்விப்பட்டேன்! மீன்கள், நம் மக்களுக்குத் தேவையான புரத உணவை அளிக்கின்றன. எனவே, கடல் மீன்களை உள்நாட்டிற்குக் கொண்டு செல்ல ஆவன செய்யவேண்டும். இதற்குத் தேவையான போக்குவரத்து, பதப்படுத்தல், பாதுகாத்து வைத்தல் ஆகிய வசதிகளைச் செய்வதற்குரிய முக்கிய அமைப்புகள் ஏற்படுத்தப் பட வேண்டும். மக்களின் நன்மைக்காக இத்துறையில் தனியார் தொழில் நிறுவனங் கள் தங்களுடைய வருவாயை முதலீடு செய்ய முடியும். இவ்வகையில் பணியாற்றத் தனியார் தொழில் நிறுவனங் கள் முன்வரும் என்று நம்பு கின்றேன்.

### கடல் வளம் பெருக்குவோம்

கடல் மீன்வள மேம்பாட் டைப் பொறுத்தமட்டில் பல் வேறு பணிகள் நம் முன்னால் நிற்கின்றன! நாம் அப் பணிகளை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செய்ய வேண் டிய நிலையில் உள்ளோம்! இத்துறையில் வளர்ச்சி ஏற் படுத்த பெரும் வாய்ப்பு உள்ளது! இது ஒரு அறை கூவலாகவும், கிடைத்தற்கரிய வாய்ப்பாகவும் உள்ளது! இக்கருத்தரங்கில் நீங்கள் கூறப்போகும் பரிந்துரைகள் அறைகூவலைச் சமாளிக்கவும், வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும் என்று நம்புகின் றேன்.

**[மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னையில் 1-8-1973 அன்று, இராஜாஜி அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு கடல் வளப் பெருக்கக் கருத்தரங்கைத் துவக்கி வைத்து ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்]**

## வெண்பாப் போட்டி 62

ஈற்றடி : நெஞ்சமே யஞ்சாதே நீ

முடிவு நாள் 1—9—73

## வெண்பாப் போட்டி 63

ஈற்றடி : இருந்துண்டு வாழோம் இனி

முடிவு நாள் 10—9—73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை–600002.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை–600002.


வண்ணத்துப் பூச்சியின்
வண்ணமிகு கோலங்கள்!
• அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
• பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
• வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
• பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப்-பூச்சி!
Criterion CO 2882




# தமிழகம் ஒரு பொற்காலத்தை உருவாக்கிவருகிறது!

உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!

● ● ● ● ● ●

இரத்தப்புரட்சி இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்

**இந்தத் திட்டங்கள்**
**இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க**
**நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட**
**தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட**
**நாம் ஆற்றவேண்டிய பேருதவி**

## அளவான குடும்பம்

சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு




# கருத்தோவியம்

தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

# கருத்தோவியம்

தமிழக முதல்வர்

டாக்டர். மு. கருணாநிதி

# பதிப்புரை

தமிழ்நாடு சட்டப் பேரவையில் சுதந்திரக் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானத்தின் மீதும் ஆகஸ்டுத் திங்கள் 7, 8, 9, 10 ஆகிய நாட்களில் விவாதம் நடைபெற்றது. இந்த விவாதங்களுக்குப் பதிலளித்து 10-8-1973 அன்று மாலை, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையினைத் தொகுத்துக் 'கருத்தோவியம்' என்னும் சிறு நூலாக வெளியிட்டுள்ளோம்.

வழக்கம்போல், இச்சிறு நூல் தமிழரசு 16–8–1973, இதழின் இலவச இணைப்பாக வெளிவருகிறது. தமிழ் மக்கள் கருத்து விளக்கம் பெறக் "கருத்தோவியம்" பயன்படும் எனப் பெரிதும் நம்புகிறோம்.

சென்னை–2 செய்தி—மக்கள் தொடர்புத்துறை
13–8–1973 தமிழ்நாடு அரசு.

---

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநரால்.
சென்னை, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# முதல்வர் உரை

பேரவைத் தலைவர் அவர்களே!

இந்தத் தீர்மானங்களில் இறுதியாகப் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், நானும் அமைச்சர்களும் உடனடியாக வெளியேற வேண்டுமென்று கூறிவிட்டு, அதற்கு முன்பு பல கடிதங்களையும் தந்திகளையும் எடுத்துப் படித்துக் காட்டி, இவைகளுக்கெல்லாம் முதலமைச்சர் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதிலேயிருந்து, நாங்களே இருந்து அந்தக் காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று................

**Thiru Ponnappa Nadar**:—Sir, I don't want to appeal to the Chief Minitser—I don't want any mercy from the Chief Minister. The wonderful Government does not need any mercy for me. I don't want any favour from this Government.


**மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி**: நான் என்ன சொன்னேன் என்பதையே அவர்கள் அவசரத்திலே புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். ஈரோடு சமாசாரம், வேறு பல கல்லூரிகள் சமாசாரம் இவைகளையெல்லாம், இந்தத் தந்திகளையெல்லாம் படித்துக்காட்டி, முதலமைச்சர் இவைகளை கவனிப்பார் என்று நம்புகிறேன். கவனிக்கவேண்டும் என்றெல்லாம் சொன்னதன் வாயிலாக, நாங்களேயிருந்து அவைகளையெல்லாம் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்; ஆகவே 'நீங்கள் வெளியேறுங்கள்' என்று சொன்னது, வெறும் உபசாரத்திற்குச்; சம்பிரதாயத்திற்குத்தானே தவிர, இந்தக் கடமைகளை ஆற்றுவதற்கு இப்போது நாங்கள் தான் தகுதி படைத்தவர்கள் என்று உணருகிறார் என்பதை நான் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் சுதந்திராக் கட்சியின் தலைவர் அவர்கள் முன்மொழிந்து அதற்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே கொள்கையை மறுக்கின்ற கண்டனத் தீர்மானம் ஒன்று முன்மொழியப்பெற்று, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களும், ஆளும்கட்சி வரிசையிலே உள்ளவர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்தத் தீர்மானங்களின்மீது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது பேசிக்கொண்டிருக்கிற என்னையும் சேர்த்து 46 பேர் இந்தத் தீர்மானத்திலே கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அதிலே தி. மு. க. சார்பில் 16 பேர்களும், மற்றக் கட்சிகளின் சார்பில் 30 பேர்களும் உரையாற்றி இருக்கிறார்கள்.

நான் பேசி முடித்த பிறகு, தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் மீண்டும் பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே பேசுகின்றவர்களுடைய எண்ணிக்கைக் கணக்கில் கூட நல்ல ஜனநாயக முறை இந்தஅவையிலே, தலைவரவர்களே! தங்களால் பின்பற்றப்பட்டு, அனைவருக்கும் நல்ல வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுக் கருத்துக்களைக் கடுமையாகச் சொல்வது, காரசாரமாகச் சொல்வது என்கிற வகையிலே கடந்த இரண்டு மூன்று நாட்களாக இந்த மன்றம் சில நேரங்களில் பரபரப்படைந்தாலும், பிறகு நாம் கட்டிக்காத்து வருகிற பண்பாட்டை உணர்ந்து, தன்னைத் தானே திருத்திக்கொள்கிற அளவிற்கு இந்த மன்றத்தின் நடவடிக்கைகள் அமைந்தன என்பதையும் இன்று மாலையிலே நடைபெற்ற இந்த நிகழ்ச்சி இரண்டு மூன்று நாட்களாகக் காலையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை விடக் கொஞ்சம் குளிர்ச்சியைத் தரும் வகையில் அமைந்திருக்கிறது என்பதையும் நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். இதைப் பார்க்கும்போது ஒவ்வொரு நாளும் மாலையிலேயே நம்முடைய சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டால் மிக அமைதியான முறையில், கொஞ்சம் சூடு குறைந்த அளவில் நம்முடைய பேரவை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று கூட நான் கருதுகிறேன்.

இந்த அரசுக்குக் கொள்கை இல்லை என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்கள் கூறித் தன்னுடையவாதத்தைத் தொடங்கினார்கள். என்னுடைய அருமை நண்பர் மதியழகன்




அவர்கள் நான்தான் இவரை முதலமைச்சராக முன்மொழிந்தேன். இப்போது நானே அவரை வெளியேறச் சொல்கிறேன் என்று குறிப்பிட்டார்.

முன்மொழிந்த ஒரே ஒரு காரணத்திற்காகவே வெளியேறச் சொல்கிற உரிமை இருக்கிறதா என்று பார்த்தால் இருப்பதாகத் தெரியவில்லை.

திருமணத்திற்கு நான்தான் புரோகிதத்திற்கு வந்தேன். ஆகவே இப்போது நான் உத்தரவு இடுகிறேன். நீங்கள் விவாகரத்துச் செய்துகொள்ளுங்கள் என்று சொல்வதற்கு எப்படிப் புரோகிதருக்கு உரிமையில்லையோ, அதைப் போலவே கட்சிக் கூட்டத்தில் என்னை முதலமைச்சராக இருக்க வேண்டுமென்று முன்மொழிந்த ஒரே ஒரு காரணத்திற்காக இப்போது என்னை வெளியேறச் சொல்கிற உரிமை இருக்கிறதா என்று பார்த்தால் இருப்பதாகச் சொல்ல முடியாது.

ஆனாலும் அவர்கள் மிகுந்த பரிவு உணர்ச்சியோடும், பாச உணர்ச்சியோடும் எனக்கிருக்கிற பல சங்கடங்களை உணர்ந்து இவ்வளவு சங்கடங்களுக்கிடையே இருந்து நீங்கள் ஏன் இந்தத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டும்? ஆகவே

நீங்கள், எல்லாம் வெளியேறி விடுங்கள் என்கிற வகையிலே அவர்கள் இங்கே தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ஆம் ஆண்டு இந்த அவையிலே தலைமைப் பொறுப்பை ஏற்றுத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, எங்களையும் தமிழ்நாட்டு மக்களையும் வழி நடத்திச் செல்வதற்காகச் • சூளுரை மேற்கொள்வதற்கு முன்பு கட்சியின் தேர்தல் பிர கடனத்தை விருகம்பாக்கத்திலே நடைபெற்ற மாநாட்டிலே வெளியிட்டார்கள்.

அந்த நேரத்திலே அண்ணா அவர்கள் ஆற்றிய உரை தமிழ்நாட்டிலே வரலாற்றுப் புகழ்மிக்க உரையாகும். அந்த உரையின் சில மணிவாசகங்களை இந்த இடத்தில் நினைவுகூர்வது நலம் என்று நான் கருதுகிறேன். அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் 30—12—66 அன்று மாலையிலே பேசும்போது குறிப்பிட்டதாவது :—

'' தரணி புகழ வாழ்ந்திருந்து புகழ் பெற்றது, தமிழ் மரபு ! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு—எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு—அவர்கள் அரசு என்ற ஒன்று ஏற்படுத்தாததற்கும் முன்பு—அரச நீதிகளை வகுப்பதற்கும் முன்பு — காடுகளில் அவர்கள் உலவிக்கொண்டிருந்தபோது—உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறி பெற்றுத் திகழ்ந்தது தமிழகம் !

'நமது மூதாதையர் யவனம் வரை தொடர்பு கொண்டிருந்தனர்—நமது மூதாதையர் சீனம் வரை சென்று திரும்பினர்—தூரக்கிழக்கு நாடுகளில் கலாச்சாரத் தொடர்பு மேற்கொண்டிருந்தனர்.

'அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்ற வகையில் நம்மைத் தயார்படுத்திக்கொள்ளக் குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும் !

'இன்னும் நமது மொழியை இலக்கியச் செறிவுள்ளதாக ஆக்கி —நமது பொருளாதாரத்தைச் சீராக்கி—உரிமைகளை நிலைநாட்டி—இந்த நாட்டுத் தமிழர்களைத் தமிழ்ப் பரம் பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டு களாவது ஆகும் !

'வெறும் அரசியல் நடத்த—67-ல் ஆட்சி அமைக்க மட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல்—67-க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டுக் காலத்திற்காவது நமது பணி இருக்கிறது என்ற கடமை உணர்ச்சி நம் மனத்தில் ஆழப் பதியவேண்டும்!

1967-மட்டும் நம் கண் முன் நிற்பதென்றால்—67-ல் ஆட்சி பீடம் ஏறுவது மட்டும் நமது நோக்கம் என்றால்—அதற்கு யாரைப் பிடிக்க வேண்டுமோ அவர்களைப் பிடித்து—எதைக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்து—யாரை அணைத்துப் பேச வேண்டுமோ அவர்களை அணைத்துப் பேசினால், அது ஒன்றும் முடியாத காரியமல்ல!




ஆகவே, அமைச்சரவை அமைப்பது மட்டுமல்ல நமது நோக்கம்!

தமிழ் மக்கள் தமிழ் மரபைப் புரிந்து கொண்டு—தமிழ் வரலாற்றைப் புரிந்துகொண்டு—புது வரலாற்றைப், புதிய செய்தியை, புதிய பண்பை உலகுக்கு வழங்க வேண்டும் என்பதற்குத்தான் நாம் பணியாற்றுகிறோம்.

ஐக்கிய நாடுகள் சபை என்று உலகத்திலுள்ள நாடுகளை எல்லாம் ஒன்று சேர்த்து—எல்லாக் கொடிகளையும் பறக்க விட்ட பிறகும் சர்வதேச ஒற்றுமையைச் சில நேரங்களில் காண முடியாமல் நாம் தத்தளிக்கிறோம்.

ஆனால், இந்த உலக ஒருமைப்பாட்டை—ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, '' யாதும் ஊரே : யாவரும் கேளிர்'' என்ற அரியதோர் கருத்தைத்—தமிழ் மரபு தந்தது.

அதுமட்டுமல்ல : 'ஒன்றே குலம் ! ஒருவனே தேவன்!!' —என்று தமிழர்கள் தரணியாண்ட காலத்திலேயே தமிழகம் கூறியது !

இவை போன்ற கருத்துக்களை—பண்புகளை மீண்டும் தமிழகம் உலகுக்குத் தர வேண்டும்.

அப்போதுதான் தமிழினம் தலை நிமிர்ந்து வாழும்; புதிய வரலாற்றை—புதிய அத்தியாயத்தைச் சமைக்கும் !

அவ்விதம் சமைக்கத் தக்கவாறு தமிழினத்தை ஆக்கும் பொறுப்பு — காலத்தின் கரத்தாலே நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆகவே, தமிழ் மரபு காப்போர் அமரவேண்டும் என்பதற் காகத்தான் தி.மு. கழகம் ஆட்சியில் அமர வேண்டும் என் கிறோம்.

தமிழ் இனம்—தமிழ்மொழி—தமிழ் மரபு—இவைகளைக் காப்பாற்றும் புதிய அரசு, புதிய ஆட்சி தோன்றவேண்டும்''

—இதைத்தான் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில், பொதுத் தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற அந்த மாநாட்டில், எடுத்துரைத்தார்கள்.

அண்ணா விரும்பிய தமிழ் மரபைக் காப்பாற்ற—தமிழ்ச் சமுதாயத்திற்குப் பணியாற்ற—தமிழ் மொழிக்கு ஏற்றம் தர—அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலும், அண்ணா அவர் களுடைய மறைவிற்குப் பிறகும் இந்த அரசு பணியாற்றி யிருக்கிறதா இல்லையா என்பதற்கு நிறையப் புள்ளி விவரங் களை நாம் பெற்றிருக்கிறோம் : சான்றுகளை உடையவர் களாக நாம் இருக்கிறோம் ; என்றாலும் ஒன்றிரண்டை நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்.

தமிழ்நாடு என்று இந்த மண்ணுக்குப் பெயர் வைத்தது. அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் பேசிய பேச்சின் எதிரொலியாகும் !

வள்ளுவருக்குச் சிறப்புத் தருகின்ற வகையில் பேருந்து வண்டிகளில் எல்லாம்—தமிழகத்தில் உள்ள பயணிகள் விடுதி களில் எல்லாம் திருக்குறளின் மணம் பரப்புகின்ற பணியைச் செய்தது—அண்ணா அவர்களுடைய விருகம்பாக்கம் மாநாட் டுப் பேச்சின் எதிரொலியாகும்.




உலகத் தமிழ் மாநாடு கண்டு, உலகத்து அறிஞர் பெரு மக்களை எல்லாம் அழைத்துத் தமிழின் தொன்மையை, பெருமையைப் பாரறியச் செய்தது—அண்ணா அவர்களது விருகம்பாக்கம் மாநாட்டினுடைய பேச்சின் எதிரொலியாகும்.

தமிழகத்தில் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் இரண்டிற்கும் தான் இடம், இந்திக்கு இடமில்லை என்று வரையறுத்துச் சொன்னது—அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டிலே ஆற்றிய உரையின் எதிரொலியாகும்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டிய இராசராச சோழனுக்குச் சிலை—எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கிடையே அமைத்ததும், இளங்கோ அடிகளுக்கு—கரிகாலனுக்கு—கண்ணகிக்கு-தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலை எடுப்பதுஎன்பது சாதாரணமாகப் பேசப்பட்டாலும், எத்தனையோ ஆண்டுக் காலமாக நடைபெறாத முயற்சியை, யாருக்கும் தோன்றாத அந்தக் கருத்தைத் தமிழக அரசின் துணையோடு, இன்றைக்கு நாம் செய்திருக்கிறோம் என்றால், தமிழின்பால், தமிழ்ச் சான்றோர்களின் பால், தமிழ் வரலாற்றின்பால், இந்த அரசுக்கு இருக்கிற பற்றினை, பாசத்தினைக் காட்டுவதாகும்.

அண்மையில் நடைபெற்ற பூம்புகார் விழாவினைப்பற்றிக் கூடச் சில பேர் கேலி பேசினார்கள்; ஆனால் அந்தப் பூம்புகார் விழா இன்றைக்கு எத்தனை ஆயிரம் மக்களைக் கரிகால் பெருவளத்தானுடைய வீரமிக்க வரலாற்றை நினைத்துப் பார்க்கத் தூண்டியிருக்கிறது என்பதும், ஒவ்வொரு நாளும் எவ்வளவு நூற்றுக் கணக்கான மக்கள் காவிரிப்பூம்பட்டினம் சென்று அங்கே அமைந்திருக்கிற சிலப்பதிகாரக் கலைக்கூடத்தைப் பார்த்து, சிலப்பதிகாரத்தின் கதையை, சிலப்பதிகாரக் கலை மேன்மையை, ஒரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் இருந்த மகிமையை உணர்ந்து வருகிறார்கள் என்பதும் மிகமிகச் சாதாரணமாகக் கருதிவிடக்கூடிய ஒன்றல்ல.

சென்னை மாநகரத்தில் எத்தனையோ ஆண்டுக் காலமாக இடிபாடுகளுக்கிடையே, இங்கே திருவள்ளுவர் வாழ்ந்தார் என்றும், இங்கே அடக்கமானார் என்றும், பிரச்சினைகளுக்கு உரியதாக இருந்து, யாரும் நாட்டம் செலுத்தாத அளவிற்கு இருந்த ஒரு இடத்தை இன்று புதுப்பித்து, அது உலகத்தார் அனைவரும் வந்து யாத்திரை செய்து, கண்டு களிக்கும் இடமாக—திருக்குறளைப் புரிந்து கொள்ளும் ஒரு இடமாக—திருவள்ளுவர், உலகத்திற்கே மறை யாத்தவர் என்ற அந்த உயர்ந்த காரியத்தைச் செய்வதற்குத் திருவள்ளுவருக்காக ஆலயம் ஒன்றை நிர்மாணிக்கப் பல இலட்சம் ரூபாயிலே திட்டமிட்டு, அதற்குத் தமிழக அரசு தன்னாலான உதவிகளைச் செய்ய முன் வந்திருப்பதும்—பேரறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டிலே பேசிய பேச்சின் எதிரொலி என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

ஆகவே, இந்த அரசுக்குக் கொள்கை உண்டா? இல்லையா?—என்ற கேள்வி எழுகிற நேரத்தில் இந்த அரசு எந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறதென்றால், விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா பேசினாரே; தமிழ் இனம் காக்க—தமிழ் மரபு காக்க—தமிழ் செழிக்க—தமிழைப் பாதுகாக்க இந்த அரசு அமைகிறது என்று சொன்னாரே; அந்த ஒரு பெரும் கொள்கைக்காகத்தான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது; அடுத்து மற்றக் கொள்கைகள்!

சமுதாயத்தில் சமத்துவம் வேண்டும். இது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வேதவாக்கு. அந்தச் சமத்துவத்தை இந்த அரசு காரியத்தில் சாதித்துக் காட்டியிருக்கிறதா இல்லையா என்பதை இங்கே பேசிய ஆளும் கட்சியைச்

சேர்ந்தவர்கள், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

அரிசன மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் பேசிய நேரத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தக்க பதில்களை எடுத்துச் சொன்னார்கள்.

பொதுவாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பொருளாதார உதவிகளைச் செய்வது ஒருபுறம் இருந்தாலும், முதலில் சமுதாயத்தில் இருக்கிற இழிவைப் போக்க வேண்டும் என்பது தான் தமிழ்நாட்டிலே சுயமரியாதை இயக்கம் கண்ட தந்தை பெரியார் இராமசாமி அவர்களின் கொள்கையும், அவருடைய தானைத்தலைவராக இருந்து பணியாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையுமாகும்.

ஆகவே சமுதாய இழிவுகளை முதலில் நீக்க வேண்டும் என்று எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவுதான் இன்றைக்கு அர்ச்சனை செய்கிற தகுதி பெற்றிருக்கிற அரிசனச் சகோதரனாக இருந்தாலும், அவன் ஆலயத்திற்குள் சென்று அர்ச்சிப்பதற்கு உரிமை படைத்தவன் என்கிற சட்டத்தைச் செய்திருக்கிறோமென்றால், அது சாதாரணமான விஷயமல்ல; ஒரு அரிசனச் சகோதரனுக்கு அர்ச்சனை செய்கின்ற வேலை தான் பெரிய வேலையா என்று கேட்கலாம். ஆனால் அது எவ்வளவு பெரிய சமுதாயப் புரட்சி என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இன்றைக்கு, அம்பேத்காருடைய பெயரால் சென்னை மாநகரத்தில் ஒரு கல்லூரியை உருவாக்குகிறோம்; அந்தக் கல்லூரி உருவாவதற்கு—வேறு பல இடங்களில் கல்லூரிகள் உருவாகும் நேரத்தில் கட்ட வேண்டிய மொத்தப் பணத்தை மற்றவர்கள் கட்டினால்தான் அங்கே கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்போம் என்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் மிகக்கண்டிப்பாக இருந்தாலும் கூட, அம்பேத்கார் கல்லூரி என்ற மாத்திரத்தில், அந்தக் கல்லூரி கட்டியவரையில் பணம் போதும், பிறகு மெதுவாகப் பணம் கட்டலாம் என்ற சலுகை அளித்து, இன்றைக்குச் சென்னையில் அம்பேத்கார் பெயரால் கல்லூரி உருவாகி வருகிறது.

தில்லையாடி வள்ளியம்மாள், அரிசனச் சகோதரிதான்! அந்த அம்மையினுடைய தியாகத்தை நினைவுபடுத்துவதற்

காக இன்றைக்குத் தில்லையாடியிலே வள்ளியம்மை நகர் ஒன்று கண்டு, அந்த அம்மையாரோடு தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த அரிசனச் சகோதரர் கள்—நாகப்பன், நாராயணசாமி இவர்களுக்கெல்லாம் அங்கே நினைவுச் சின்னங்கள் எழுப்பியிருப்பதும் இந்த அரசு தான்.

ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிக்கும்போது, அந்த அறங்காவலர்களில் ஒருவர் நிச்சயமாக அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமென்று சட்டம் செய் திருப்பதும் இந்த அரசுதான்.

அதைப்போலவே, பின்தங்கிய சமுதாய மக்களுக்காகப் பாடுபடும் இந்த அரசு அவர்களுக்காக ஒரு நலக்குழுவை அமைத்து, அதனுடைய சிபாரிசுகளை ஏற்று எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறது என்பதையும் அனைவரும் நன்றாக உணர்வார்கள்.

காலையில் பேசிய நண்பர் வடிவேல் அவர்கள் கூடச் சொன்னார்கள்:— 18 சதவிகிதம் என்று அரிசனங்களுக்கு ஒதுக்கி யிருக்கிறீர்கள், ஆனால் அந்த 18 சத விகிதத்தை அரிசனங்களால் உத்தியோகங்களைப் பெற முடியவில்லை என்று சொன்னார்.



நான் அவர்களுக்குச் சொல்வேன். சில இடங்களில் அரிசனத் தோழர்கள், சகோதரர்கள் வராமல் அந்த இடங்கள் நிறைவு செய்யாமல் இருக்கிற குறை இருக்க முடியுமே தவிர, வந்து அவர்களுக்கு இல்லை என்கிற குறை எங்குமே ஏற்பட்டது கிடையாது. ஓர் உதாரணத்தை உங்களுக்குச் சொல்லமுடியும்.

கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக, நம்முடைய தமிழ் மாநிலத்தில், குரூப்—1 சர்வீஸ் எழுதுகிறார்களே, தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறதே, அதில் எப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு டெபுடி கலெக்டர் களாக, டெபுடி சூப்பரின்டெண்டுகளாக, ஜே. சி. டி.ஓ.க் களாக, டெபுடி ரிஜிஸ்டிரார்களாக, அஸிஸ்டெண்ட் கமாண் டண்ட்களாக (எஸ்.ஏ.பி.) டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்டிரார்களாக யார் யார் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

—வகுப்புகளைப் பிரித்து நான் சொல்கிறேன் என்பதற் காக யாரும் வருத்தப்படக்கூடாது, என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும், வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், பிரிக்கப்பட்டால்தான் பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர் என்று தெரியும் என்கிற காரணத் தால், நான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

கிட்டத்தட்ட 98 அல்லது 99 பேர்கள் 1967-லிருந்து இந்த ஆண்டு வரையில் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆதித் திராவிடர்கள்—தாழ்த்தப்பட்டவர்கள்—டெபுடி கலெக்டர் வேலைக்கு 5 பேர், டெபுடி சூப்பரிண்டெண்ட் ஆப் போலீஸ் 4, ஜே. சி. டி. ஓ. 3, டெபுடி ரிஜிஸ்டிரார் 4, அஸிஸ்டெண்ட் கமாண்டண்ட் (எஸ். ஏ.பி) 1, டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 18 பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த 99 பேர்களில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 2, டி.எஸ்.பி. 1, ஜெ. சி. டி. ஓ. 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, (எஸ். ஏ. பி.) அஸிஸ்டெண்ட் கமாண் டண்ட் 1, ஆக மொத்தம் 6 பேர் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

அடுத்து, மறவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 1, டி. எஸ். பி. 1, ஜெ. ஸி. டி. ஓ. 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 2, ஆக மொத்தம் 5 பேர்கள்.

அடுத்து அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர்கள் 5, ஜெ. ஸி. டி. ஓ. 1 ஆக மொத்தம் 6 பேர்கள்.

வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர்கள் 4, டி. எஸ். பி. 3, ஜெ. ஸி. டி. ஓ 3, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 11 பேர்கள்.

நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 2, ஜெ. ஸி. டி. ஓ 5, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 8 பேர்கள்.

பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் ஒருவர்.

முஸ்லிம் (லப்பை வகுப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட): டெபுடி கலெக்டர்கள் 2, டி. எஸ். பி. 2, ஜெ. ஸி. டி. ஓ. 2, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 7 பேர்.

செங்குந்தர்: டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, அஸிஸ்டண்ட் கமாண்டெண்ட் 1, ஆக மொத்தம் 3 பேர்.

கௌரா என்ற மிகப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, (எஸ். ஏ. பி.) அஸிஸ்டண்ட் கமாண்டெண்ட் 1, ஆக மொத்தம் 3 பேர்.

படகா: டெபுடி கலெக்டராக ஒருவர். வீரக்குடி வெள்ளாளர் டெபுடி கலெக்டராக 2 பேர். சலவைத் தொழிலாளி டெபுடி கலெக்டராக இரண்டுபேர். பரக்கவகுல நத்தமான் டெபுடி கலெக்டர் 1, டி. எஸ். பி. 1, ஆக இரண்டு பேர். துளுவ வெள்ளாளர். டெபுடி கலெக்டராக ஒருவர். குறும்பர்: டெபுடி கலெக்டராக ஒருவர்; இதுவரை யாரும் குறும்ப வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டராக இருந்ததே கிடையாது.

மூப்பனர் : டெபுடி கலெக்டர் 1. தொண்டமான் டெபுடி கலெக்டர் 1. வடுகர் டெபுடி கலெக்டராக ஒருவர். டி.எஸ். பி. ஒருவர் ஆக இரண்டு பேர்கள்.

தேவாங்கர்: டி. எஸ். பி. ஒருவர். வலையர்: டி. எஸ். பி. ஒருவர். சக்கிலி; ஜெ. ஸி. டி. ஓ. ஒருவர். யாதவர்; ஜெ. ஸி. டி. ஓ. 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 2, டிவிஷனல் பயர் ஆபீசர் 1, ஆகமொத்தம் 4 பேர், சேனைத் தலைவர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1. செட்டி பாலாஜி: டெபுடி ரிஜிஸ்டிரார் 1, வேட்டுவக் கவுண்டர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1. மருத்துவர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1. ஒட்டர் : டிஸ்ரிக்ட் ரிஜிஸ்டிரார் ஒருவர்.

ஆக இப்படி மிகமிகப் பின்தங்கிய சமுதாயத்தில் உள்ள வர்கள்—தாழ்ந்தப்பட்ட மக்கள் இவர்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன அடையாளச் சின்னம் வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள் இந்த ஆட்சி—பின் தங்கிய மக்களுக்காகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிறது என்பதற்கு என்ன அளவுகோல் என்று கேட்டார்களே, இதைவிட வேறு எந்த அளவுகோலை வைத்து, இந்த இயக்கம் பின் தங்கிய மக்களுக்குத்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு—நடுத்தர மக்களுக்காகப் பாடுபடும் என்று முழக்கமிட்டு ஆரம்பிக்கப்பட்டதே, அந்த முழக்கம் இன்று செயல் படுத்தப்படுகிறதா இல்லையா என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும் ?

தமிழ்நாட்டில் நீதிமன்றம் உருவான பிறகு, நீதிமன்றச் சரித்திரத்திலேயே—இந்த ஆட்சிக் காலத்தில் தான் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு சகோதரர் இன்றைக்கு நீதிபதியாக வீற்றிருக்கிறார் என்பதை யாராவது மறுக்க முடியுமா ?

இவைகள் எல்லாம் சமுதாயத்தில் சமத்துவத்தை உருவாக்க—சமுதாயத்தில் புரையோடியிருக்கிற பல கொடுமைகளை நீக்குவதற்கு, அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நின்று இந்த அரசு இதுவரையில் நடத்தியிருக்கிற அருமையான சாதனைகளாகும்.

அண்ணாவின் அடுத்த கொள்கை சமதர்மம்: சமதர்மத் திட்டங்களை நாம் நிறைவேற்றி யிருக்கிறோமா இல்லையா என்பதைச் சமதர்மத்தின் அடிப்படையில் நான் பலமுறை இங்கே விளக்கியிருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசிய நேரத்திலும், முன்பு ஒருமுறை நம்பிக்கையில்லாத்தீர்மானம் வந்த நேரத்திலும் நான் வெகு விளக்கமாகச் சொல்லியிருக்கின்றேன். நிலச்சீர்திருத்தம் சமதர்மத்தின் அடிப்படையில்—ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்குப் பட்டா அளித்தது. இதற்கு முன்பு உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற ஒரு சட்டம்.




குடியிருப்பு மனைச் சட்டத்தின் மூலம் ஏறத்தாழ இரண்டு லட்சம் மக்களுக்குக் குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கியது சமதர்மத்தினுடைய அடிப்படையில்.

பஸ்களைத் தேசியமயமாக்கச் சட்டம் கொண்டு வந்தது சமதர்மத்தின் அடிப்படையில். இந்தியாவிலேயே முதன் முறையாகத் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும், நிர்வாகத்தில் பொறுப்பும் தமிழ்நாட்டில் அளித்திருப்பது, சமதர்மத்தினுடைய அடிப்படையில். பஸ் தொழிலாளர்களுக்கு ஊக்கப் போனஸ் திட்டத்தை அளித்து அவர்களுடைய பாராட்டைப் பெற்றிருப்பது இவைகள் எல்லாம் சமதர்மத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டவை.

பல நண்பர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, கண்ணொளி வழங்குதல், பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வளித்தல், கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குதல் இவைகளை எல்லாம் என்னுடைய பிறந்த நாள் விழாக்களில் நாம் சாதனைகளாகச் செய்திருக்கிறோம்.

ஒரு நண்பர் கூடச் சொன்னார். அடுத்த ஆண்டு முதலமைச்சருக்குப் பிறந்த நாளே வரக் கூடாது; அது ரொம்ப ஆபத்தாக இருக்கிறது என்று கூடச் சொன்னார். நம்முடைய நண்பர் தம்பி தேவேந்திரன் அவர்கள், அவர் கூறியது பற்றிக் கூட ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டார், இப்படியெல்லாம் பேசலாமா என்று!

எனக்கு அடுத்த ஆண்டு பிறந்த நாள் வந்தாலும் பரவாயில்லை. அல்லது நினைவுநாள் வந்தாலும் பரவாயில்லை. ஆனால் அந்த நாளைக்குள்ளாக நாம் என்னென்ன செய்ய வேண்டும்; என்னுடைய அமைச்சரவை நண்பர்களின் ஒத்துழைப்போடு, தமிழ்நாட்டு மக்களுடைய ஆதரவோடு என்னென்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறேனென்றால், இப்போது நான் படித்துக்காட்டினேனே, இந்த இந்த மக்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்று. "அது குற்றம், ஆகவே உங்கள் மீது நம்பிக்கை இல்லை, வெளியே போ" என்று சொன்னால், இந்தக் குற்றத்தை நான் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பேன். என்பதை நான் திட்ட வட்டமாகச் சொல்லுவேன்.

இது குற்றமென்றால், இந்தக் குற்றம் இந்த நாட்டிற்குத் தேவையான குற்றம். இந்தச் சமுதாயத்தை வாழ வைக்கத் தேவையான குற்றம். நான் இந்தக் குற்றத்தைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பேன்; இந்த அமைச்சரவையின் ஒத்துழைப்போடு, என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்வேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதி, நிலையான ஆட்சி இப்படி எல்லாம் இன்றைக்குத் தமிழக அரசு பாராட்டப்படுகின்ற நேரத்தில் இங்கு ஒன்றிரண்டு குறைகள் சொல்லப்பட்டன.

அதிகாரிகளைப் பற்றிக் குறைகள் சொன்னார்கள். எந்தவொரு அரசிலும் எல்லா அதிகாரிகளும் நல்லவர்க

ளாகவே இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக வக்காலத்து வாங்கமாட்டேன். என்னுடைய அருமை நண்பர் சுப்பு அவர்கள் இங்கே பேசினார்கள்—அருமைநண்பர் என்று சொல்கிற காரணத்தால் அவருக்கு ஆபத்து வந்தாலும் வரலாம். அவர், அதிகாரிகளைப் பற்றி எல்லாம் சொன்னார். நான் அவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்கிறேன். எந்தெந்த அதிகாரிகள் தவறு செய்தாலும், அவர்கள் எப்படிப்பட்ட பெரிய இடத்தில் இருந்தாலும், அல்லது அவர்கள் சாதாரண அதிகாரிகளாக இருந்தாலும், அவர்கள்மீது புகார் கூறப்பட்டு, அவைகள் மெய்ப்பிக்கப்படுமானால், அவர்களுக்குத் தயவு தாட்சண்யம் காட்டுகிற அரசு இந்த அரசல்ல என்பதைப் பலமுறை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.


இப்போதும் சொல்கிறேன். அதிகாரிகளோ, அல்லது ஆட்சியில் இருக்கிற நாங்களோ குறைகள் செய்தால், சுட்டிக் காட்டப்பட்டால், திருத்திக் கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அடுத்து, மிக முக்கியமாகப் பேசப்பட்ட விஷயம்; இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தவர்களும், பிறகு வழி மொழிந்தவர்களும் மிக முக்கியமாக எடுத்துக் காட்டியது; நம்முடைய நண்பர் மதியழகன் அவர்களும் கடைசியாக எடுத்துக் காட்டியது, இன்று தமிழ்நாட்டிலே விலைவாசி வேகமாக உயர்ந்து விட்டது. உணவு நிலை திருப்திகரமாக இல்லை. என்கிற இந்தக் குறைபாடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டது.

ஆனால், விலைவாசி ஏற்றத்திற்கு யார் காரணம்? எந்த நிலை காரணம்? என்பதை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து தீர்மானத்தை வழி மொழிந்து பேசியவர்களே கூட மத்திய அரசுக்கும் ஓரளவு பொறுப்புண்டு என்பதை இங்கே ஒத்துக் கொண்டார்கள். கே. டி. கே. தங்கமணி அவர்கள்பேசுகிற நேரத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் விலைவாசி அதிகம். அதை நான் மெய்ப்பிக்க முடியும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

முதலில் உலகத்திலே விலைவாசி நிலவரத்தில் இந்தியா எங்கேயிருக்கிறது என்று பார்ப்போம். பிறகு இந்தியாவில் தமிழ்நாடு எங்கேயிருக்கிறது என்று பார்ப்போம்.



உலகத்தில் விலைவாசி நிலவரத்தைப் பற்றி 'ஐ. எல். ஓ.' என்று சொல்லப்படுகிற இண்டர்நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் வெளியிட்டிருக்கிற புள்ளி விவரத்தைப் பார்ப்போம்—1963 மார்ச் முதல் 1972 வரை உலகத்திலே உள்ள விலைவாசி நிலவரங்களை அது வெளியிட்டிருக்கிறது.

தாய்லாந்து 21 சதவீதம்; மொராக்கோ 22 சதவீதம்; கென்யா 25 சதவீதம்; ஈரான் 28 சதவீதம்; எதியோப்பியா 32 சதவீதம்; மெக்சிகோ 35 சதவீதம்; இலங்கை 36 சதவீதம்; பாகிஸ்தான் 45 சதவீதம்; மேற்கு ஜெர்மனி 32 சதவீதம்; கனடா 33 சதவீதம்; அமெரிக்கா 35 சதவீதம்; ஆஸ்திரேலியா 37 சதவீதம்; இத்தாலி 39 சதவீதம்; பிரான்சு 43 சதவீதம்; ஜப்பான் 55 சதவீதம்; இங்கிலாந்து 46 சதவீதம்; இந்தியா 95 சதவீதம்; இது ஐ.எல்.ஓ. வெளியிட்டிருக்கிற புள்ளி விவரப் பட்டியலாகும்.

இதிலே இந்தியா 95 சதவீதம். எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கிறது. அந்த இந்தியாவில் நம்முடைய தமிழ் நாட்டின் நிலவரம் என்ன? பொது விலைக் குறியீடு. உணவுக் குறியீடு (General index, Food index) என்ற இந்த இரண்டையும்

எடுத்துக்கொண்டால் மத்திய சர்க்கார் வெளியிட்டிருக்கிற அந்தப் பட்டியலின்படி, ஜூலை 72-ல் இந்தியாவின் பொது விலைக் குறியீடு 205 புள்ளியாக இருக்கும் போது, சென்னையில் 201 புள்ளியாக இருந்திருக்கிறது. அதைப் போலவே உணவு நிலைக்குறியீட்டில் 220 புள்ளியாக இந்தியாவில் இருந்தபோது சென்னையில் 205.8 புள்ளியாக இருந்திருக்கிறது. நான் அதிலே அதிக விவரங்களைச் சொல்ல விரும்பவில்லை.

மே '73-ல் பொதுவிலைக் குறியீடு அகில இந்தியாவிலே 228 புள்ளியாக இருந்தபோது, சென்னையிலே 217 புள்ளியாக இருந்திருக்கிறது. உணவு நிலைக் குறியீடு அகில இந்தியாவில் 273 புள்ளியாக இருந்தபோது சென்னையில் 224.6 ஆக இருந்திருக்கிறது.

ஆக இந்த விவரப்படி பார்த்தால் சென்னை உணவு நிலைக் குறியீட்டின் நிலை அகில இந்தியாவின் உணவு நிலைக் குறியீட்டைவிடக் குறைவாக உள்ளது என்பதை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

அத்தியாவசியப் பொருள்களுடைய மொத்த விலை நிலவரம்—அல்லது சில்லறை விலை நிலவரம் ஆகியவற்றைத் தென் மாநிலங்களைப் பொறுத்தும், ஏனைய வட மாநிலங்களைப் பொறுத்தும் நாம் அறிந்து கொள்ள வேண்டுமேயானால், அதற்கான விவரங்களை இந்த அவை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அரிசி, நடுத்தர அரிசி, பச்சரிசி, பெங்களூரில் குவிண்டால் ஒன்றுக்கு விலை ரூபாய் 212 (31-7-73 அன்றைய நிலவரப் படி); திருவனந்தபுரத்தில் இதே அரிசி விலை ரூபாய் 380 (4-8-73 அன்றைய நிலவரம்); சென்னையில் 6-8-73 நிலவரப் படி ரூபாய் 133.

புழுங்கல் அரிசி, குவிண்டால், பெங்களூரில் 195 ரூபாய்; திருவனந்தபுரத்தில் 365 ரூபாய் ; சென்னையில் 126 ரூபாய்.

சோளம், பெங்களூரில் 139 ரூபாய் ; திருவனந்தபுரம் 210 ரூபாய் ; சென்னை 92 ரூபாய்.

கம்பு; பெங்களூர் 138 ரூபாய் ; திருவனந்தபுரம் 226 ரூபாய் ; சென்னை 89 ரூபாய்.

கேழ்வரகு, பெங்களூர் 112 ரூபாய்; திருவனந்தபுரம் 205 ரூபாய்; சென்னை 89·75 ரூபாய்.

கடலை, பெங்களூர் 177 ரூபாய் (குறைவு); திருவனந்த புரம் 235 ரூபாய்; சென்னையில் 202 ரூபாய்.

துவரை, பெங்களூர் 188 ரூபாய்; திருவனந்தபுரம் 210 ரூபாய்; சென்னை 175 ரூபாய்.

பச்சைப் பயிறு, பெங்களூர் 288 ரூபாய்; திருவனந்த புரம் 323 ரூபாய்; சென்னை 207 ரூபாய்.

தேங்காயெண்ணெய், பெங்களூர் 837 ரூபாய்; திரு வனந்தபுரம் 825 ரூபாய்; சென்னையில் அதை விட அதிகம்; இது ஒன்றில். அதாவது 941 ரூபாய்.

உளுந்து, பெங்களூரில் 266 ரூபாய்; திருவனந்தபுரம் 335 ரூபாய்; சென்னை 195 ரூபாய்.

இவை நிலவரங்கள்; இதிலே மற்ற வடபுறத்து மாநிலங்க ளோடு ஒப்பிட்டால் சில்லறை விற்பனையிலே பார்த்தால் கூட, சென்னையில் அரிசி விலை ஒரு கிலோ ரூ. 1·22; அகமதா பாத் (குஜராத்) 3·25; அமிர்தசரஸ் (பஞ்சாப்) 2·00; ஜோத்பூர் (ராஜஸ்தான்) 2.25; உத்தரப்பிரதேசத்தில் (ஆக்ரா) 1·95 ; சிம்லாவில் 2·60: கான்பூர் (உ.பி.) 1·75; மேற்கு வங்கத்தில் 2.25; இது அரிசியைப் பொறுத்த வரையிலாகும்.

சர்க்கரையைப் பொறுத்தவரை சென்னையில் 3·65, குஜராத் 3·95, பஞ்சாப் 3·85, ராஜஸ்தான் 3·75, சிம்லா 4·00 கான்பூர் 3.60.

நல்லெண்ணெய், சென்னையில் 8·50; குஜராத் 9·00; பஞ்சாப் 8·80; ராஜஸ்தான் 8·50; சிம்லா 8·50. ஆக்ரா; 9·25 கான்பூர் 9·50.

இந்தச் சில்லறை விற்பனையைப் பார்த்தாலும், அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களையும் விடத் தமிழ்நாட்டில்தான் விலை அதிகம் என்ற அந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை அல்லது தவறானவை என்பதை விளக்குவதற்குத்தான் நான் இந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன்.

அவர்கள் பேசும்போது, மாநில அரசுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் விலைகளை நிர்ணயம் செய்யும் முழு அதிகாரத்தையும், மத்திய அரசு அளித்திருக்கிறது என்று சொன்னார்கள். மதி . அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த அதிகாரங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றெல்லாம் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் எப்படி வரையறுக்கப் பட்டிருக்கின்றன என்பதை புது டில்லியிலிருந்து 72-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20-ஆம் தேதி எழுதப்பட்டுள்ள அரசு ஆணையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில உரிமைகளைக் கொடுத்துவிட்டு


**That such powers shall be exercised by a State Govt. subject to such direction if any as issud by the Central Government in this behalf.**

என்று சொல்லிவிட்டு, கீழே ஒரு ஐந்தாறு விவரங்களைத் தருகிறார்கள்.

அவை எவையெவை என்றால், விலைக் கட்டுப்பாடு—உற்பத்திக் கட்டுப்பாடு—கொள்முதல்—போக்குவரத்துக் கண்ட்ரோல் இவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்காருடைய அதிகாரத்தை, அனுமதியைப் பெறாமல் எதுவும் செய்ய முடியாது என்கிற நிலைமையில்தான் அவைகள் இருக்கின்றன.

விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. ஆகவே இந்த மந்திரிசபை பதவி விலகவேண்டும்; இது எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து எடுத்து வைக்கப்பட்ட ஒரு வாதம். ஆனால் விலைவாசி எப்படி ஏறுகிறது? விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு காரணமா? மத்திய அரசு காரணமா? என்ற இந்தக் கேள்வியை நாம் கேட்டு, அதற்கு ஒரு சரியான பதிலை நாம் வரவழைத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல், மாநில அரசு மீது குற்றஞ்சாட்டுவதற்கு இதைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்ற அளவில் மாநில அரசின்மீது குற்றஞ் சாட்ட இதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நான் நிச்சயமாக விரும்பவில்லை.

மாநில அரசு விலைவாசி உயர்ந்திருப்பதை உணர்ந்திருக்கிறது. நாங்கள் மறுக்கவில்லை. '' அப்படித்தான் உய




ரும். ''சினிமாவிற்கு க்யூ நிற்கவில்லையா? அதைப்போல அரிசி வாங்க க்யூ நில்லுங்கள்!'' என்று இந்த அரசில் உள்ள அமைச்சர்கள் யாரும் பேசமாட்டார்கள்.

''சினிமா டிக்கெட் உயரவில்லையா? அந்த டிக்கெட்டை வாங்கிப் படம் பார்க்கவில்லையா? அதைப் போல உணவுப் பண்டங்களுடைய விலையும் உயர்ந்திருக்கிறது. ஆகவே அதை வாங்கிச் சாப்பிடுங்கள்'' என்று அலட்சியப் பேர்க்கில் இந்த அரசில் உள்ள யாரும் பேசுவதற்குத் தயாராக இல்லை.

விலைவாசி உயர்ந்திருப்பதை ஒத்துக் கொள்கிறோம். ஆனால் எல்லா மாநிலங்களிலும் இந்தியா முழுவதும் இப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை நாம் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

அதை மறந்துவிட்டு, இந்த மாநில அரசு மீது மாத்திரம் பழி போடுவது சரியானதில்லை என்பதற்காகத்தான் இந்த விவரங்களை நான் எடுத்துச் சொன்னேன்.

உற்பத்தி குறைந்து பணப்புழக்கம் அதிகமானால் விலைகள் ஏறும். அது ஒரு வாதம்.

உற்பத்தி அதிகரிக்கப்பட்டுப் பணப்புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டால் விலைகள் குறையும். அதுவும் ஒரு வாதம்.

உற்பத்தி என்பது வேளாண்மைத் துறையிலே மட்டும் குறிப்பிடப்படுவதல்ல. தொழில் துறையிலும் தேவை என்பதைக் குறிக்கின்ற வாதம்தான் அந்த வாதம்! வேளாண்மைத் துறையில் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமானால் அந்த உற்பத்திக்குத் தேவையான உரம், டிராக்டர், மற்றும் ஏனைய சாதனங்கள், விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்கவேண்டும்.

இத்தகைய மூலப்பொருள்களை—விவசாய உற்பத்திக்கு அத்தியாவசியமான பொருள்களை விநியோகிக்கிற அதிகாரத்தையும் அது பற்றிய கொள்கைகளை வகுக்கின்ற உரிமையையும் படைத்திருப்பது யார்? மாநில அரசா? மத்திய அரசா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காண வேண்டாமா?

அதேபோல் தொழில் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களை இறக்குமதி செய்கின்ற அல்லது செய்வதற்குரிய லைசென்ஸ் கொடுக்கின்ற அதிகாரமும், தொழில் கொள்கைகளை வகுக்கின்ற அதிகாரமும், இந்தத் தொழில்கள் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ இருக்க வேண்டுமென்ற முடிவைச் செய்கின்ற அதிகாரமும் மத்திய அரசினுடைய கையிலே இருக்கிறபோது மாநில அரசு விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்று கூறுவதில் நியாயம் இருக்க முடியுமா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே இதிலிருந்து நமக்குத் தெரிகிற உண்மை என்னவென்றால் உற்பத்தியை நிர்ணயித்து, கட்டுப்படுத்திப் பொருளாதார வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற வாய்ப்பும் அதிகாரமும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது.

நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரமும், மத்திய அரசின் கையிலேயே இருக்கிறது.

நாணயப் புழக்கக் கட்டுப்பாடு, உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றிய கொள்கை, பொருளாதாரக் கொள்கை.

இந்தப் பொருளாதாரக் கொள்கைகளைத் தெளிவாகவும், வெற்றிகரமாகவும் அமல் செய்கின்ற அரசு ஒன்றுதான் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

எனவே நல்ல பொருளாதாரக் கொள்கை விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும்; நல்ல நாணயக் கட்டுப்பாடு உள்ள பொருளாதாரக் கொள்கையில் கறுப்புப் பணத்திற்கு இடமே இல்லை என்ற கருத்தைத் தேசிய வளர்ச்சி மாநாடு நடைபெற்ற போதுகூட நான் தமிழக அரசின் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

இன்றைக்கு ரிசர்வ் வங்கி அவர்களிடம் இருக்கிறது. அது உனக்கு வேண்டுமென்று கேட்கிருயா என்று யாரும் தயவுசெய்து எண்ணக் கூடாது. நிலைமையைச் சொல்கிறேன். அங்குதான் இருக்க வேண்டும். அவர்களிடம் இருக்கிறது.

தேசிய வங்கிகள் அவர்களிடம் இருக்கிறது. பெரிய வரி விதிப்புக் கருவிகள், ஆயுதங்கள் அவர்களிடத்திலே இருக்கின்றன. நோட்டு அடிக்கிற அச்சு இயந்திரம் அவர்களிடத்திலே இருக்கிறது.



...ண்மையில் அந்த அச்சு இயந்திரம் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருப்பதாகக்கூடப் பத்திரிகையிலே செய்தி பார்த்தோம். அதற்குத் தேவையான காகிதம் கூடக் கிடைக்காமல் வெளிநாடுகளிலிருந்து காகிதம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி கூட இந்துப் பத்திரிகையில் வந்தது. நாம் படித்தோம். அந்த அளவிற்கு அந்த அச்சு இயந்திரம் வேகமாக வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையில் நாம் நுணுகி ஆராய வேண்டியவைகளில் ஒன்று, இந்த நாணயத்தைக் கட்டுப்படுத்துகின்ற முறை.

அடுத்தது, வரி விதிப்புக் கொள்கையை நாம் ஆராய்ந்து தீரவேண்டும். வரிவிதிப்புக் கொள்கையில் இந்த ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட் 4,800 கோடி ரூபாய். அதிலே அவர்களுடைய வரிகளில் எக்சைஸ் வரி மூலம் மாத்திரம் திரட்டப்படுவது, 2,741 கோடி ரூபாய். அதாவது பண்டங்களின் உற்பத்தியின்மீது விதிக்கப்படுகிற வரி 56 சதவிகிதம். அதை நாம் மறந்துவிடக்கூடாது. அண்மையில் ஓர் ஆராய்ச்சி மூலம் தெரியவந்த கருத்து, சுமார் ஆறு பொருள்களின் விலையில் 50 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரை எக்சைஸ் வரியாக மத்திய அரசுக்குப் போகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாமர மனிதன் துணி வாங்குகிறான். இதில் 50முதல் 75 சதவீதம் வரை எக்சைஸ் டியூட்டி வாங்குகிற துணிக்குத் தகுந்தவாறு போடப்படுகிறது. சர்க்கரை விலையில் 75 சதவிகிதம் எக்சைஸ் டியூட்டி. சிமெண்ட் 60 முதல் 70 சதவிகிதம் வரை எக்சைஸ் டியூட்டி. ஸ்டீல் 50 முதல் 60 சதவிகிதம் வரை எக்சைஸ் டியூட்டி.

இந்த ஆண்டு மத்திய அரசு நேர்முக வரிகளான வருமான வரி, சொத்து வரி, கம்பெனி வரியான கார்ப்பரேஷன் வரி ஆகியவற்றை உயர்த்தவில்லை என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

எக்சைஸ் டியூட்டி, கஸ்டம்ஸ் டியூட்டி இதுபோன்ற மறைமுகமான வரியைத்தான் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது இந்த ஆண்டு கணக்கிட்டுப் பார்த்தால், மொத்த வரி வருமானத்தில் 76 சதவிகிதம் எக்சைஸ் டியூட்டியும், கஸ்டம்ஸ் டியூட்டியும்தான், அவர்களால் விதிக்கப்பட்டிருக்கிறது.

பணக்காரர்கள் தருகிற நேர்முக வரியான வருமான வரி, (Income Tax) கார்ப்பரேஷன் வரி, சொத்துவரி (Wealth Tax) இவைகள் எல்லாம் 24 சதவிகிதம்தான் இந்த ஆண்டு போடப்பட்டிருக்கிறது. இதையும் நாம் மறந்துவிடக் கூடாது. விலைவாசி உயர்விற்கு மத்திய அரசின் இந்த வரிக் கொள்கையும் ஒரு காரணந்தான் என்பதைத் தெளிவுபடுத்தத்தான் இந்த விளக்கத்தை எடுத்துச் சொன்னேன்.

இங்கு சொல்வது மாத்திரமல்ல! 1973 ஜனவரித் திங்கள் 19, 20 ஆகிய நாட்களில் டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்டபோது, நான் சொன்னேன்:

'' நான், தமிழகத்தின் நிதியமைச்சராக இருக்கிறேன். தமிழகத்தினுடைய அரசின் வருவாயைப் பெருக்க வரி விதிக்க வேண்டிய நிலைமை என்னைப்போல நிதியமைச்சர்களுக்கு ஏற்படுகிறது. என்னைப்போலவே எல்லா மாநில நிதியமைச்சர்களுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. வரியை உயர்த்தினால் உடனே விலைவாசி உயருகிறது. ஆகவே, இவைகளை எல்லாம் ஆராய்ந்து ஏதாவது ஒரு கட்டத்தில் ஒரு நல்ல முடிவு எடுத்தால்தான், இந்த வரி விதிப்பில் ஒரு நல்ல கொள்கை முடிவு எடுத்தால்தான், விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும்'' என்ற கருத்தை நான் எடுத்துச் சொன்னேன். நான் பேசும்போது குறிப்பிட்டேன்.

"The increase in prices of commodities raises cost of production of goods in general and this has impact on prices which in turn impinches on our wage level and State and Central resources. We would therefore urge that Government of India should set up a comprehensive Taxation Enquiry Commission look into this whole question and suggest solutions என்று நான் சொன்னேன்.

ஒட்டுமொத்தமான ஒரு வரிக் கொள்கைக்கான ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டாக வேண்டும் என்ற கருத்தை நான் தேசிய வளர்ச்சிக்குழு மாநாட்டிலே எல்லா முதலமைச்சர்களுக்கும் முன்பாக இந்தியப் பிரதமர் முன்னிலையில் எடுத்துச் சொன்னேன்.

அது நல்ல யோசனை என்று பல மாநில முதலமைச்சர்களால் பாராட்டப்பட்டது. டெல்லியில் உள்ள பத்திரிகைகள் எல்லாம் எழுதின. தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளும் அதைப்பற்றி எழுதின. மேலவையிலும் சட்டப் பேரவையிலும் அதை வரவேற்றுப் பலர் பேசியதாக எனக்கு நினைவு. ஆனால் இதுவரையில் அதைப்பற்றிய சிந்தனையே மத்திய அரசிலே உள்ளவர்களிடம் எழுந்ததாக எனக்குத் தெரியவில்லை.

உற்பத்தி பெருகினால் விலைவாசி குறையும் என்கிற ஒரு கருத்து உண்மையான கருத்துத்தான். என்றாலும்கூட அது மாத்திரம் போதாது என்பதற்கு ஒரு முன் உதாரணமும் நமக்கிருக்கிறது.

1965—66ல் இந்தியாவின் பிரதமராகத் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில் 72.3 மில்லியன் டன்னிலிருந்து 107.81 மில்லியன் டன்னாக உணவு தானியங்களின் உற்பத்தி இந்தியாவில் உயர்ந்தது. ஆனால் அப்படி உற்பத்தி அதிகரித்தும், விலைவாசி குறைந்ததா என்றால், இல்லை. உணவு தானியங்களின் விலை, குறிப்பாக கோதுமையின் விலை, மேலும் அதிகமாயிற்று; அவ்வளவு உற்பத்திக்குப் பிறகும்! அதற்குக் காரணமென்ன? அதிக உற்பத்தி செய்தால் மாத்திரம் போதாது. சரியான பொருளாதாரக் கொள்கை (Monetary Policy) வகுக்கப்பட்டாக வேண்டும் என்பதைத்தான் அது கோடிட்டுக் காட்டுகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெளிவாக்கிட விரும்புகின்றேன்.

(Supply and demand) வழங்கலும் தேவையும் என்று எடுத்துக் கொண்டால், விலைவாசியை நிர்ணயிக்கின்ற கர்த்தாக்கள் இரண்டும் சமநிலையில் இருக்கின்றன என்று நாம் வைத்துக் கொண்டு பார்த்தால் கூட, நோட்டு அடித்துக் குவித்துக் கொண்டிருப்போமானால், (Deficit Financing) பற்றாக்குறைநிதிநிலை ஏற்படுகிறது. அப்படிப் பற்றாக்குறை நிதிநிலை ஏற்பட்டால் விளைவு என்ன ?

மிக அதிகமான பணப்புழக்கம் மிகக் குறைவான பண்டங்களைத் துரத்திக் கொண்டு போகிறது. அப்படித் துரத்தும் போது தானாகவே விலை உயருகிறது. இதை நாம் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

பண்டங்களின் உற்பத்தியைவிடக் கரன்சி நோட்டுகளின் உற்பத்தி இன்று இந்தியாவில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. 1966 லிருந்து 1972வரை இந்தக் காலக் கட்டத்தில் பணப் புழக்கம் (Money supply) இரட்டிப்பாக ஆகியிருக்கிறது.

அதே நேரத்தில் விவசாயப் பண்டங்கள் போன்ற தேசிய ஆதாரப் பண்டங்களின் (National product of primary goods) உற்பத்தி 52 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய்க்குக் குறைந்திருக்கிறது. நோட்டு அடிப்பது, பணப்புழக்கம் இரட்டிப்பாக உயர்ந்திருக்கிறது. ஆனுல் உற்பத்தி, தேசியப் பண்டங்களின் உற்பத்தி, 52 கோடியிலிருந்து 40 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டிருக்கிறது.

எனவே பண்டங்களின் உற்பத்திக்கும், அதிகமாக நோட்டு அடித்துக் குவித்தால் விலை உயருமா உயராதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1972 ஏப்ரல் 8-ஆம் தேதி 8,247 கோடியாக இருந்த பணப்புழக்கம், 1973 ஏப்ரல் 27-ஆம் தேதி 9,545 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதாவது 16 சதவிகிதம் பணப்புழக்கம் உயர்ந்திருக்கிறது.

இதை எல்லாம் கருதித்தான் அறிஞர் அண்ணு அவர்கள் '' நாட்டு வாட்டம் போக்கிட, நோட்டடித்தால் போதாது'' என்று அன்றைக்கே தன்னுடைய தேர்தல் பிரகடனத்தைச் செய்தார்கள். அப்போது நாட்டு, நோட்டு என்று அடுக்குச் சொல் எழுதுகிருர் அண்ணு என்று சிலர் கேலி செய்தார்கள். கிண்டல் செய்தார்கள். ஆனுல் இன்று அது எவ்வளவு பொருத்தம் என்பதை மக்களுக்கு, உலகத்திற்கு, விளக்கிக் கொண்டிருக்கிறது.

விலைவாசி உயர்ந்துவிட்டது என்று கூறி அன்று நாங்கள் மாநில சர்க்காரை எதிர்த்துப் போராட்டம் நடத்தவில்லையா என்று கேட்டார்கள். நடத்திஞேம்.

ஏனென்ருல், அப்போது மத்திய சர்க்காரிலும், மாநில சர்க்காரிலும் ஒரே கட்சி ஆட்சி நடைபெற்றது. அப்போது இருந்த அமைச்சர்கள் மத்திய அரசைப் பற்றிச் சொல்கிற துணிவு இல்லாமல் இருந்தார்கள்.

இன்று என்ன என்ருல், ஒரு தராசை எடுத்துக் கொண்டால், அந்தத் தராசின் இரண்டு தட்டுகளில் ஒன்றில் உற்பத்தி நிலைமையையும், இன்னொரு தட்டில் கரன்சி நோட்டையும் வைத்துப் பார்க்கிறோம் என வைத்துக்கொள்வோம். கரன்சி நோட்டை அதிகமாக அடித்து, உற்பத்தித் தட்டைப் பெருக்காமல் விட்டுவிட்டு, முள்ளைப் பிடித்துக் கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து '' ஒழுங்காகப் பிடிக்கவில்லை'' என்ருல் என்ன வேடிக்கை! தராசு சமமாக இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. '' முள் ஆடுகிறதே '' என்ருல் அது மாநில அரசின் குற்றமல்ல.

இங்கிலாந்து நாட்டில் '' பிரைஸ் போர்டு '' என்று ஒன்று அமைக்க வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டு, அது அமைக்கப்பட்டு, அதனுடைய அனுமதி பெற்றுத்தான் பலரும் விலையை நிர்ணயம் செய்ய முடியும்; உயர்த்த முடியும் என்ற ஒரு நிலைமை இருப்பதைச் சுட்டிக் காட்டி, திரு. அனுமந்தையா தலைமையில் அமைந்த ஏ.ஆர்.சி. நிர்வாகச் சீர்திருத்தக் குழு இந்திய அரசுக்கு ஒரு சிபாரிசு செய்தது, கமிஷன் ஆன் பிரைசஸ், காஸ்ட்ஸ் அண்டு டாரிப்ஸ் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதன் அனுமதி பெற்றுத் தான் ஆலையில் உற்பத்தியாகிற பண்டங்களின் விலையும், கச்சாப் பொருள்களின் விலையும் உயர்த்தப்பட வேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்தது. அந்தச் சிபாரிசு செய்து எவ்



வளவு நாளாகிறது ? இதுவரை மத்திய அரசு அதைப்பற்றி யோசனை செய்ததா என்றால், இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் நாம் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசுதான், மாநில அரசு அல்ல என்று சொல்லுகிறோம். இந்த எண்ணத்தைத் தமிழ்நாட்டின் அரசின் சார்பில் நாங்கள் மாத்திரம் சொல்கிறோமா என்றால், இல்லை! இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில அரசுகளும் சொல்கின்றன.

இங்கே நம்மைப் பார்த்துக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும், மாநில அரசுதான் காரணம் என்று சொல்லுகிற அதே நேரத்தில், நான் அவர்களுக்குக் கேரள அரசைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கேரளத்திலே என்னுடைய பெருமதிப்பிற்குரிய நண்பர் அச்சுதமேனன் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள். அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்.(C.P.I.) அங்கே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மாநில சர்க்கார் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமல்ல, மத்திய அரசுதான் காரணம் என்று போர்க்கொடி உயர்த்துகிற காட்சியை அங்கே காண்கிறோம். பந்த் நடைபெறுகிறது. 1,200 பேர் சிறையில் அடைபடுகிறார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேரும், தனியாக ஒருவரும் கொல்லப்படுகிறார்கள். இவைகள் எல்லாம் கேரளத்தில், சென்ற வாரம் நடைபெறுகிற நிகழ்ச்சிகள்.

என்ன காரணம் ? விலைவாசி ஏற்றம், உணவுப் பற்றாக் குறை, பஞ்சம், வறுமை, வறட்சி இவைகளுக்குக் காரணம் மாநில அரசல்ல, மத்திய அரசு என்று அங்கிருக்கின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.) போர்க்கொடி தூக்குகிற காட்சியை அங்குப் பார்க்கிறோம். அதற்கு ஆளும் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் சொல்கிறார் : '' நீங்கள் முயல் போலவும் ஓடுகிறீர்கள் ; வேட்டை நாய் போலவும் துரத்துகிறீர்கள் ; பிள்ளையையும் கிள்ளி விட்டுத், தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள் '' என்று அங்கிருக்கின்ற இந்திரா காங்கிரஸ்—ஆளுங் காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளர் அங்கிருக்கின்ற சி.பி.ஐ. கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்துக் குறை கூறுகிறார். ஆகவே ஆளுகின்ற கட்சியாக இருக்கின்ற சி.பி.ஐ. கட்சியே கூட, மாநில அரசல்ல இதற்குக் காரணம், மத்திய அரசு தான்

காரணம் என்று மத்திய அரசைச் சுட்டிக் காட்டுகின்றது.

அதைப் போலவே கடந்த வாரத்தில் டெல்லியில் நடைபெற்ற ஒன்பது கட்சிகள் கொண்ட கூட்டத்தில்—பழைய காங்கிரஸ் கட்சி, இங்கே இந்த அமைச்சரவைமீது விலைவாசி உயர்விற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற சுதந்திராக் கட்சி, இந்தக் கட்சிகள் எல்லாம்கூடி, விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். கிருபளானி அவர்களுடைய தலைமையில் பழைய காங்கிரஸ் கட்சி, தி.மு. கழகம், சுதந்திராக் கட்சி, சோசலிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் மற்ற கட்சிகள் எல்லாம் கூடி, ஒருதீர்மானம் நிறைவேற்றி, வருகிற 26-ஆம் தேதி ஒருமுனையாக இந்தியா முழுவதும் மத்திய அரசைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே, இதுகூட மத்திய அரசுதான் அதற்குக் காரணம் என்பதைப் புலப்படுத்தவில்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாநில அரசு இதற்குக் காரணம் கூறுகின்ற எதிர்க் கட்சிக்காரர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கேரள மாநிலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சியும், டெல்லியிலே நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தின் தீர்மானமும் இதற்கு முக்கிய எடுத்துக் காட்டாக இருக்கிறது.

இவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைப்பதைப்போல் ஏ.ஆர்.சி. கமிட்டி இருக்கிறதே—நிர்வாகச் சீர்திருத்தக்குழு இருக்கிறதே—அதில் யார் யார்? நம்முடைய அனுமந்தையா தலைவர்—நம்முடைய முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்குக்கூட அதில் ஈடுபாடு உண்டு. அவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து தயாரித்த அந்த ஏ.ஆர்.சி. ரிப்போர்ட் Centre-State Relation என்கின்ற அந்த ரிப்போர்ட்டில் சொல்கிறார்கள்.

In fact it is the policies of the Central govt. that are responsible for inflation and increase in prices and the cost of living என்று மத்திய அரசைக் குறை கூறித்தான் இது மத்திய அரசின் பொறுப்பு என்று தான் ஏ.ஆர்.சி. சுட்டிக் காட்டியிருப்பதையும் நாம் காணுகின்றோம்.

இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதியாகத் திட்டங்களை ஒழுங்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற, வறட்சி நிவாரணப் பணிகளைச் சரிவரச் செய்து கொண்டிருக்கிற மாநிலம் தமிழ்நாடு தான்.

உணவு நிலைமையிலே தன்னிறைவு கொண்டிருக்கிற மாநிலமும் தமிழ்நாடு தான் என்கின்ற ஒரு பாராட்டுரையைச் சென்ற சில மாதங்களுக்கு முன்பு டெல்லியிலிருந்து ஏழெட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அவர்களாகவே ஒரு குழு அமைத்து, இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து, தென்னக மாநிலங்களையும் சுற்றிப் பார்த்து விட்டுச் செல்லும் போது, செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்கள்.

அதுபோது அக் குழுவின் தலைவராக வந்த மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிர்மாய்பாசு ஒன்று சொல்லியிருக்கிறார். அது விவரம், ஜூலை 30-ல் வெளியான 'டைம்ஸ் ஆப் இண்டியா' ஏட்டிலே வந்துள்ளது.

அதில் அவர் கூறியிருக்கிறார். '' பசுமைப் புரட்சிக்குப் பதிலாக வறட்சிப் புரட்சி நாடெங்கும் பல பகுதிகளில் நிலவி வருகிறது. இந்த வறண்ட பகுதிகளில், உத்தரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், ஆந்திரம் ஆகிய பகுதிகளில், 50 சதவீதத்துக்கு மேலாக வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறவில்லை.

திட்டத்துக்கு மேலாக உற்பத்தி செய்து பஞ்ச நிவாரண வேலைகளை முழுமையும் கடைப்பிடித்து வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் '' என்று கூறியிருக்கிறார்.

இன்னும் விலைவாசியைச் சரிப்படுத்த-உணவு நிலையைச் சரிப்படுத்த, இந்த அரசு தவறி விட்டதற்குக் காரணங்களைச் சொல்லும் பொழுது நம்முடைய பெரியவர் மணலி அவர்கள் கூடச்சொன்னார்கள் — கள்ளக் கடத்தல்காரர்களை எல்லாம் பிடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நமது மதி அவர்களும் குறிப்பிட்டார்கள். கள்ளக்கடத்தல்காரர்கள் பிடிபட்டதற்குப் பாராட்டுகிறோம்; மகிழ்ச்சி தெரிவிக்கிறோம் என்று கூடச் சொன்னார்கள். இதுவரையில் கோவையில் 13 பேரும் கன்னியா குமரி மாவட்டத்தில் 3 பேரும் ஆக 16 பேர்கள் இன்

றைக்குப் பாதுகாப்புச் சட்டப்படிப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பே ஏன் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியிருக்கக் கூடாது என்று கேள்வி எழுந்தது.


இந்தியாவிலேயே பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்திப் பதுக்கல்காரர்களையும், கள்ளக்கடத்தல்காரர்களையும் பிடித்திருக்கிற மாநிலம் தமிழ்நாடு ஒன்று தான் என்று நான் கருதுகிறேன். வேறு மாநிலங்களும் இருக்கக் கூடும். சொன்னால் நான் திருத்திக்கொள்கிறேன்.

இங்கே 16 பேர்கள் பாதுகாப்புச் சட்டப்படிக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் இன்னும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்வேன், மணலி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும். இந்த அரசு மேலும் பலபேரை, அவர்கள் நூற்றுக் கணக்கில் இருந்தாலும், அவர்களை எல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிடித்து, அவர்களைச் சிறையில் போட இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது, தயங்காது. இவர்களை விடச் சமுதாயத் துரோகிகள் இப்படிப்பட்ட நேரத்தில் வேறு யாரும் இருக்க முடியாது.

நம் நண்பர் வெங்கடசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள்; அதிகாரிகள் மற்றவர்களையெல்லாம் கண்டிக்கிறீர்கள், ஆனால் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் சில விவகாரங்களில் தலையிடுகிறார்கள் — அப்படித் தலையிடுவது சரியா? தலையிடலாமா? அந்தத் தலையீடு நிறுத்தப்பட வேண்டாமா? என்றெல்லாம் அவர் கேட்டுவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டில், நீங்கள் ஒன்று கூறினீர்கள் என்பதாகவும் சொல்லி, யாரும் தலையிடக் கூடாது என்று நீங்கள் சொன்னதிலிருந்து இதுவரையிலே தலையிட்டார்கள் என்று ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது என்கிற வாதத்தைக் கூறினார்கள்.

நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலே குறிப்பிட்டது இந்த அவைக் குறிப்பிலேயும் ஏற வேண்டும் என்பதற்காக, இங்கேயும் குறிப்பிடுகிறேன்.

" தனிப்பட்ட குறைகளைத் தீர்க்க மனுநீதித் திட்டமும், கிராமங்களின் அல்லது ஒருசாராரின் பொதுவான குறைகளைத் தீர்க்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்பு முறைகளும் இருக்கின்றபோது, இடையிலே




சிபாரிசு செய்ய ஆட்கள் தேவையில்லை. எனினும், ஜன நாயக அமைப்புகளின் வாயிலாக அதிகாரிகளின் கவனத் திற்குக் கொண்டு வர இயலாத சில பொதுப் பிரச்சினைகளும் இருக்கக்கூடும்.

அவைகளுக்குத் தீர்வு காண மக்களின் பிரதிநிதிகளோ, தனிப்பட்டவர்களோ அதிகாரிகளை அணுகுவதில் தவறில்லை.

நியாயத்துக்கு முரண்பாடான சில காரியங்களைச் சாதித்துக் கொள்ள, செல்வாக்குப் பெற்றவர்கள் அதிகாரி களை அணுகக் கூடும். அவர்களது முறையீட்டில் அல்லது பரிந்துரையில் நியாயமிருந்தால், செய்யுங்கள்; நியாய மில்லையெனில் அப்படிப்பட்ட பரிந்துரைகளைச் செய்பவர் கள் எவ்வளவு பெரிய இடத்தில் இருந்தாலும், அதைச் செய்ய இயலாது என்று கண்டிப்பாகவே கூறிவிடலாம்.

சில நேரங்களில் நியாயங்களைச் செய்வதற்குக் கூட வீண் கால தாமதமும், அந்தத் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு இடையிலே நேர்மையற்ற சில காரியங்களும், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து விடுகின்றன. அந்தத் தவறான காரியத்தைச் செய்யச் சாடை காட்டுகிற அதிகாரிகளானா லும், அல்லது அந்தத் தவறான காரியத்தைச் செய்ய அதிகாரி களைத் தூண்டுகிறவர்களானாலும், இரு சாராருமே சமூகத் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை'' என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட் டிலே நான் எடுத்துச் சொல்லி, யாரும் நியாயமற்ற காரியங்

களுக்கு, தேவையற்றவைகளுக்கு, தனிப்பட்ட காரியங் களுக்கு அதிகாரிகளை நாடக் கூடாது'' என்று சொன்னேன்.

அதை வைத்துக்கொண்டு இங்கே சிலபேர், திரு. வெங்கட சாமி உட்பட, 'இதிலிருந்து இதற்கு முன் தலையிட்டிருக் கிறார்கள் என்பது தெரியவில்லையா ?' என்று கூறினார்கள்.

'' நீ கண்ணகி போல் வாழ்க என்று '' சொன்னால் அவள் ஏற்கெனவே பாஞ்சாலி போல் வாழ்ந்தாள் என்று அர்த்தம் ? அதைப் போல '' அப்பா நீ நீண்ட பயணம் போகிறாய் ; போகிற பாதையிலே ஒரு குறுக்குப் பாதை வரும் அந்தப் பாதைப் பக்கம் போகாதே'' என்றால், அவன் ஏற்கெனவே அந்தப் பாதையில் போனான் என்று அர்த்தம் ? இல்லை! ஆகவே ஒன்றைச் செய்யாதே என்று கூறுவதன் காரணமாக அதை ஏற்கெனவே அவன் செய்தான் என்று அர்த்தமாகாது.

நான் தெளிவாகச் சொல்கிறேன்: அப்படி நடந்திருந் தால் அது தவறுதான். டாக்டர் ஹண்டே சொன்னார்கள், பண்ணுருட்டி நகராட்சித் தலைவர் அவர்கள் போலீஸ் நிலையத் திற்குக் கடிதம் கொடுத்து அனுப்பியது பற்றிச் சொன்னார் கள். அது தவறு ; நான் கண்டிக்கிறேன் ! ஆனால் ஒன்றை அவருக்கு நான் சொல்ல விரும்புகிறேன் ; அந்தக் கடிதத் தைப் பெற்ற அதிகாரி எவரும் அந்தக் கடிதத்தின்படி நடந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருப்ப தாகத்தான் நான் அறிகிறேன். ஆகவே கடிதம் கொடுத்தது தவறு. நான் அதற்காக வருந்துகிறேன். ஆனால் அதே நேரத் திலே அதிகாரிகள் அந்தக் கடிதத்துக்கு உடன்பட்டிருப்பாரே யானால் அந்த அதிகாரி மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். நல்ல வேளையாக அந்த அதிகாரி அப்படி எதுவும் நடந்துகொள்ளவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுவேன்.

இன்று மிக முக்கியமாகப் பேசப்பட்ட மற்றொன்று மது விலக்குப் பிரச்சினை. மதுவிலக்கை ரத்து செய்து விட்டதாகச் சிலர் சொன்னார்கள். அந்த வார்த்தையைத் திருத்தமாகப் பயன்படுத்துவது நல்லது. மதுவிலக்கை இந்த அரசு ஒத்தி வைத்திருக்கிறது என்று தான் சொன்னேனே அல்லா மல், ரத்துச் செய்துவிட்டது என்று நான் சொல்லவில்லை.

இன்றைக்கு எதிர் தரப்பில் அமர்ந்திருக்கிற அ.தி.மு. கழகத்தார் தி.மு. கழகத்தில் இருந்தபோது, அந்தக் கட்சியின் தலைவர் உட்பட தி.மு. கழகத்தில் இருந்தபோது. என்ன நடந்தது ? கோவைப் பொதுக் குழுவில் மதுவிலக்கை ஒத்தி வைப்பதைத் தவிர இப்போதுள்ள நிலைமையில் வேறு வழியில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தக் கட்சியின் தலைவரே அதை விளக்க ஒரு மணி நேரம் பொதுக் குழுவில் பேசி, அதுவும் போதாது என்று— பிறகு ஆனந்தவிகடன் பத்திரிகையில் '' ஏன் முதலமைச்சர் இந்த முடிவெடுக்க நேரிட்டது ?''—என்பதை விளக்கிப் பல கட்டுரைகளும் எழுதிப், பின்னர் நாம் மதுவிலக்கை ஒத்தி வைத்தோம்.




இந்த அரசு எதிலும் பிடிவாதமாக இருக்காது. சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்திக் கொள்ளும் என்ற வகையில், எவ்வெப்போது குறைகள் சுட்டிக்காட்டப் படுகின்றனவோ அப்போதெல்லாம் இந்த அரசு அவற்றைத் திருத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு பெரிய அடையாளம்தான், ஒத்தி வைத்த மதுவிலக்கை மீண்டும் கொண்டு வாருங்கள் என்று குரல் எழும்பியதும், தமிழ்நாட்டு மக்களுடைய குரலை மதித்து, இன்றைக்கு முதல் கட்டமாகக் கள்ளுக் கடைகளை எல்லாம் மூடுவோம் என்று அறிவித்திருக்கிறோம்.

கள்ளுக்கடைகளை மூடிவிட்டால் போதுமா? சாராயக் கடைகளை மூடவேண்டாமா என்றால், சாராயக் கடைகள் எப்போதுமே இருந்துவிடும் என்று யார் சொன்னார்கள்? அதுவும் மூடப்படும்.

முதல் கட்டம் இது! சாராயக்கடை அடுத்த கட்டம். முதல் கட்டம் என்று சொல்லுகிறபோதே, முடிவான கட்டம் என்று பொருள் அல்லவே: இரண்டாவது கட்டம் இருப்பதாகத்தானே_பொருள்!

ஆகவே சாராயக்கடைகளும் மூடப்படும். இருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில், ஏற்கெனவே வரவு—செலவுத் திட்டம் வகுத்துவிட்ட சூழ்நிலையில் நாம் மெல்ல மெல்லத் தான் அந்தப் புனிதமான காரியத்தை மீண்டும் இங்கே புகுத்தவேண்டும் என்ற அளவில்தான் கொண்டு வந்தோமே யல்லாமல் வேறல்ல.

மதுவிலக்கு பற்றிப் பேசிய நண்பர் வேலப்பன், இங்கே நான் சொன்ன உதாரணத்தை அவருக்கு உரிய பாணியிலே கேலி செய்து பேசினார்.

நான் வரவு-செலவுத் திட்ட உரையிலே சொல்லும் போது குறிப்பிட்டேன், "கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வளையத்துக்குள்ளே கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாள் இருக்க முடியும்?" என்று கேட்டேன்.

இந்த உதாரணங்களெல்லாம் நான் அண்ணாவிடமிருந்து கற்றுக் கொண்டவை. மதுவிலக்கு தீவிரமாக அமல் படுத்தப்பட வேண்டும் என்று சொன்னவர்களே கூட அன்றைக்கு அந்த உதாரணத்தை ரசித்ததை நான் பார்த் தேன்.

ஆனால் நண்பர் வேலப்பன் அவர்கள் அதற்கு நேர் விரோதமாக ஓர் உதாரணத்தைச் சொன்னார். "சுற்றிலும் இருக்கிற பெண்கள் எல்லாம் கெட்டு விட்டார்கள் என்பதற் காக நம் வீட்டுப் பெண்ணையும் விட்டு விடுவதா?" என்ற அருமையான உதாரணத்தை நேற்று இந்த அவையில்— இந்தப் பெரிய அவையில்-ராஜாஜியின் படமும், வள்ளுவரின் படமும், எங்களை வளர்த்த பேரறிஞர் அண்ணாவின் பட மும், உத்தமர் காந்தியாரின் படமும் இருக்கிற இந்த

அவையில்—வேலப்பன் சொன்னார். அவரவர்கள் இயல்புக் கேற்ற உதாரணம்!

அண்ணா சொல்லுவார் — மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் இருக்கும் என்று. மாற்றார்களிடம் இருக்கும் நல்லவைகளையும் வரவேற்போம் என்கின்ற கருத்தில் மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் இருக்கும் என்று கூறுவார். அது அண்ணாவின் இயல்புக்கேற்ற உதாரணம்.

உடனே வேலப்பன் எழுந்து, '' மாற்றான் தோட்டத்து மல்லிகையில் மாத்திரம் தான் மணம் இருக்குமா? மாற்றான் தோட்டத்திலே மலஜலம் இருக்கும் இடத்திலே கூட ஒருவித மணம் இருக்கும். அதற்காக அவைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா?'' என்று கூடக் கேட்கலாம். உதாரணந் தானே?

இதுபோன்ற உதாரணங்களைக் கையாளுபவர்கள் வெகு ஜாக்கிரதையாகக் கையாளுவது நலம் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு-மதுவிலக்கு பரிபூரணமாக அமல் நடத்தப் படவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.

மதுவிலக்கு பரிபூரணமாக வரவேண்டும். அதே நேரத்தில் நான் ஒன்று கேட்கிறேன்.

மாநில சுயாட்சி என்றால் என்ன சுயநலம் என்கிறீர்கள். தமிழ்நாடு என்றால் அது என்ன சுயநலம் என்கிறீர்கள்.

ஆனால் மதுவிலக்குக் கொள்கை மாத்திரம்—தமிழ் நாட்டில் மாத்திரம்தான் இருக்க வேண்டும். அதில் இந்தியா



வில் இருக்கிற மற்ற மாநிலங்களைப்பற்றியெல்லாம் கவலை யில்லை என்கிறீர்களே, என்ன காரணம் ?

நான் இங்கே இருக்கிற பழைய காங்கிரசை, ஆளும் காங்கிரசை, அ.தி.மு.கவை,கம்யூனிஸ்ட், தமிழரசுக் கழகம், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திராக் கட்சி, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளையெல்லாம் அழைக்கிறேன்.

அடுத்த ஆண்டு, சாராயக் கடைகளையெல்லாம் மூடி விட்டு, அதற்குப் பிறகு மத்திய சர்க்காரை எதிர்த்து, முழு வதும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவா என்கிற ஒரு போராட்டத்தை நாம் தொடங்குவோம். அத்தனை பேரும் அதில் இணையவேண்டுமென்று நான் எல்லாக் கட்சிக் காரர்களையும் கேட்டுக்கொள்வேன்.

அதற்கிடையே,பழையகாங்கிரசுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்.

விரைவில் புதுவையில் பொதுத் தேர்தல் வரவிருக்கிறது. அங்கே உங்கள் தேர்தல் பிரகடனத்தில் '' நாங்கள் வெற்றி பெற்றால் புதுவையில் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் மூடுவோம்'' என்று நீங்கள் வீரமாக அறிவித்து, மற்றவர்களுக் கெல்லாம் வழிகாட்டியாக வேண்டும்.

தி.மு.க. ஆட்சி, நான், நாவலர், பேராசிரியர், என்.வி.என்., சத்தியவாணிமுத்து மற்றும் இங்கே அமர்ந் திருக்கிற கழக அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று இரண்டு மூன்று நாட்களாகச் சொல்லிச் சொல்லிப் பார்த்துவிட்டீர்கள்.

நீங்கள் சொன்னதையெல்லாம் கேட்டு விட்டோம். மன்றாடியாரை விடுதலை செய்ய வேண்டுமென்றீர்கள்! விடுதலை செய்தோம்.

கன்னியாகுமரியில் கைதானவர்களை யெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டீர்கள்! 2 நாளைக்கு முன்பே விடுதலை செய்தோம்.

ஆனால் இதை மாத்திரம் கேட்க முடியவில்லை; வருந்துகிறோம்.

வணக்கம்;

# தமிழரசு

